# கடவுளின் பண்புகள்

*வேதாகமத்தின் கடவுள் உண்மையில்*
*யார் என்பதைப் புரிந்துகொள்வது*



ராம் கிருஷ்ணமூர்த்தி

# **கடவுளின் பண்புகள்**

*வேதாகமத்தின் கடவுள் உண்மையில் யார் என்பதைப் புரிந்துகொள்வது*

ராம் கிருஷ்ணமூர்த்தி

# கடவுளின் பண்புகள்

*வேதாகமத்தின் கடவுள் உண்மையில் யார் என்பதைப் புரிந்துகொள்வது*

எழுதியவர்

ராம் கிருஷ்ணமூர்த்தி

இந்த புத்தகத்திலுள்ள கருத்துக்களை ஆசிரியரின் அனுமதியின்றி நகலெடுத்து பயன்படுத்திக்கொள்ளலாம்.

எழுத்தாளரால் வெளியிடப்பட்டது

முதல் பதிப்பு

மொழியாக்கம்

வேத வசனங்கள் கீழ்காணும் மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டது

***பரிசுத்த வேதாகமம்** OV (BSI)*

*அர்ப்பணம்*

… அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

1 தீமோத்தேயு 6:15-16

# பொருளடக்கம்


இந்நூலைப் பயன்படுத்துதல் ..... 1

கடவுளின் பண்புகளை ஏன் படிக்க வேண்டும்? ..... 3

கடவுளின் பரிசுத்தம் ..... 8

கடவுளுடைய வல்லமை ..... 14

கடவுளின் பிரசன்னம் ..... 24

கடவுளின் அறிவு ..... 31

பிதாவாகிய கடவுள் ..... 40

கடவுளின் அன்பு ..... 46

கடவுளின் ஞானம் ..... 55

கடவுளுடைய கோபம் ..... 63

கடவுளின் உண்மைத்தன்மை ..... 71

கடவுளின் ஏகாதிபத்தியம் ..... 79

கடவுளின் பொறுமை ..... 88

கடவுளின் மாறாத தன்மை ..... 95

நன்றி ..... 106

ஆசிரியரைப் பற்றி ..... 108

# இந்நூலைப் பயன்படுத்துதல்

கடவுளின் பன்னிரண்டு பண்புகளை உள்ளடக்கிய இந்நூலைப் படிப்பதற்கு சமயம் எடுத்துக்கொண்டதற்கு மிக்க நன்றி. கடவுளின் உண்மையான பண்புகளை நன்கு புரிந்துகொள்ள வாசகருக்கு உதவுவதே இந்நூலின் நோக்கமாகும். இது இந்த பரந்த பாடத்தின் ஆழமான ஆய்வுமல்ல; வேத அறிஞர்களுக்காக எழுதப்பட்ட முதன்மையான நூலுமல்ல என்றாலும், இது நான்கு உறுதியான ஆதாரங்களின் அடிப்படையிலானது.

ஒவ்வொரு அதிகாரமும் பொதுவாக அளவில் சிறியது, விசுவாசிகளுக்கான வழிமுறைகளும், கிறிஸ்துவரல்லாதோருக்கான கலந்துரையாடல் கேள்விகளும், வாழ்க்கை மாற்றங்களைத் தூண்டுவதற்கு ஏதுவாக ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவில் வழங்கப்படுகின்றன. தியானம் மற்றும் மனப்பாடம் செய்வதற்கான ஒரு வசனம் ஒவ்வொரு பண்புக்கூறின் கீழும் பட்டியலிடப்பட்டுள்ளது, பாடல்களின் பட்டியலும் சேர்க்கப்பட்டுள்ளது, கொடுக்கப்பட்டுள்ள பண்புகளை கடவுளைத் துதிப்பதற்குப் பயன்படுத்தலாம். மேலும், ஒவ்வொரு அதிகாரத்தை முடிக்கும்போது, அந்த பண்பின் வெளிச்சத்தில் வாழ ஒரு சிறிய ஜெபம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான சில வழிகளைக் கீழே காணலாம்:

- தனிப்பட்ட தியானம்.
- கிறிஸ்தவரல்லாத ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிற நண்பர் அல்லது குடும்ப உறுப்பினருக்குக் கொடுக்கலாம்.
- வேதம் கூறும் கடவுளைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளலாம்.
- கடவுளின் பல்வேறு பண்புகளைப் பற்றி தங்கள் சபைக்கு கற்பிக்க விரும்பும் போதகர்கள் இதை பயன்படுத்திக்கொள்ளலாம்.
- மேற்கூறியவற்றைத் தவிர, உங்களுக்கோ அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கோ வாழ்க்கையின் சில பகுதிகளில் சிரமம் இருந்தால், இந்தப் புத்தகத்தின் சில பகுதிகள் உதவியாக இருக்கும்.

- உதாரணமாக, பதட்டத்துடன் போராடும்போது, "கடவுளின் பிரசன்னம்" என்ற அதிகாரம் உதவியாக இருக்கும்.
- காரியங்கள் உங்களுக்கு எதிராக நடக்கும்போது, "கடவுளின் ஏகாதிபத்தியம்" என்ற அதிகாரம் ஆத்துமாவை அமைதிப்படுத்தும்.
- பாவத்தை மேற்கொள்வதில் போராட்டம் இருந்தால், "கடவுளின் பரிசுத்தம்" மற்றும் "கடவுளின் அன்பு" ஆகிய அதிகாரங்கள் உதவியாக இருக்கும்.
- உங்கள் அர்ப்பணிப்பில் போராடிக்கொண்டிருந்தால், "கடவுளின் ஞானம்" என்ற அதிகாரம் வழிகாட்டுதலாக இருக்கும்.
- சிறிய வேதப்பாடக் குழுக்களில் இதை பயன்படுத்தலாம்
- புதிய விசுவாசிகளை ஒழுங்குபடுத்துவதற்கான கருவியாக இதை பயன்படுத்தக்கூடும். (வேதத்தின் மகிமையான கடவுளை அறிந்து அனுபவிக்கும் பாதையில் புதிய விசுவாசிகளுக்கு இது ஒரு உதவிகரமான வழிகாட்டியாகும்!)

எனவே இந்நூல் பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம். இதன் இறுதியில் இப்புத்தக ஆதாரப்பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது, அவை இந்த முக்கியமான செய்தியை ஆழமாகப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவக்கூடும்.

கர்த்தரைப் பற்றிய உங்கள் அறிவையும், அவர்மீது உங்களுக்குள்ள அன்பையும் வளர்த்துக்கொள்ள இந்தப் புத்தகம் பயன்பட கர்த்தர் உதவ வேண்டும் என்று நான் மனதார ஜெபிக்கிறேன். இந்தப் புத்தகத்தின் எந்தப் பகுதிக்கும் பதிப்புரிமை இல்லை. ஆசிரியர் பெயரைக் கூட குறிப்பிடாமல், தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

எல்லாத் துதியும் கர்த்தருக்கே!

கிறிஸ்துவில்,

*ராம் கிருஷ்ணமூர்த்தி*

போதகர், கிருபை வேதாகமத் திருச்சபை.

# கடவுளின் பண்புகளை ஏன் படிக்க வேண்டும்?

A.W.டோசர் (A.W.Tozer), “பரிசுத்தரைக் குறித்த அறிவு” (*The Knowledge of the Holy* ) என்ற தனது புகழ்பெற்ற புத்தகத்தில் இவ்வாறு கூறியிருக்கிறார்:

> *கடவுளைப் பற்றிய சரியான கருத்தாக்கமானது முறையான இறையியலுக்கு மட்டுமல்ல, நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் அடிப்படையாகும்... தவறான கோட்பாடு அல்லது கிறிஸ்தவ நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் தோல்வி ஆகியவை தேவனைப் பற்றிய பூரணமற்றதும், தவறானதுமான எண்ணங்களைத் தரும் என நான் நம்புகிறேன்.*

ஆகவே, தேவனுக்குப் பிரியமானதும், அவர் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ நாம் விரும்பினால், அவரைப் பற்றிய சரியான கருத்தாக்கத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். வேதத்தில் கூறப்பட்டுள்ள கடவுளை அவருடைய குணாதிசயங்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்பதால், அவற்றை நாம் படிப்பது இன்றியமையாதது. எனவே, இதைப் படித்து, அதன் விளைவாக கடவுளின் பண்புகளைப் பற்றிய நமது புரிதலில் வளர வேண்டும் என்பதே இந்த சிறு புத்தகத்தின் குறிக்கோள்.

இந்த விஷயத்தைப் பற்றிய ஆழமான ஆய்வைத் தொடர நீங்கள் ஆர்வமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். இது மகத்தான ஆசீர்வாதங்களை விளைவிக்கும் வாழ்நாள் ஆய்வாகும், அவற்றில் ஐந்து குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## கடவுளின் பண்புகளைப் படிப்பதனால் வரும் ஐந்து ஆசீர்வாதங்கள்

***ஆசீர்வாதம் #1: தேவனுக்கு பிரியமான விதத்தில் அவரை ஆராதிக்க இது நமக்கு உதவுகிறது.***

எபிரெயர் நிருபத்தின் எழுத்தாளர், "நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்" (எபிரெயர் 12:28) என்று கட்டளையிடுகிறார். அவர் யார் என்பதை நாம் புரிந்து கொள்ளாவிட்டால் இதை எப்படிச் செய்ய முடியும்? மேலும் ஆண்டவரை அவருடைய குணாதிசயங்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்பதால், அவருக்கு பிரியமான விதத்தில் அவரை ஆராதிப்பதற்கு இந்த அறிவில் நாம் வளர வேண்டும்.

**ஆசீர்வாதம் #2: கடவுளைப் பிரியப்படுத்துகிறது.**

கொலோசெயர் 1:10 ஆம் வசனம் “தேவனை அறிகிற அறிவில்” விருத்தியடைதலைப் பற்றியும், கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்வதைப் பற்றியும் விவரிக்கிறது. தேவனை அவருடைய குணாதிசயங்கள் மூலம் மட்டுமே அறிய முடியும் என்பதால், வேதத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள அவருடைய பண்புகளை வைத்தே நாம் அவரைப் பற்றிய அறிவில் வளர முடியும். அதுவே இறையியலை, அதாவது தேவனைப் பற்றிய ஆய்வை, விசுவாச வளர்ச்சிக்கு இன்றியமையாததாக மாற்றுகிறது. இறையியல் என்பது கிறிஸ்தவத்தின் மெத்தப் படித்தப் பிரிவினருக்கானது என்று நினைப்பது தவறானது. மாறாக, இறையியல் ஒவ்வொரு விசுவாசிக்குமானது. ஏனென்றால், ஒவ்வொரு விசுவாசியும் தேவனின் இயல்பைப் பற்றிய புரிதலை வளர்த்துக் கொண்டு அவரைப் பிரியப்படுத்த முயல வேண்டும்!

**ஆசீர்வாதம் #3: தேவனைப் பற்றிய தவறான பார்வையில் இருந்து நம்மைக் காக்கிறது.**

ஒரு மனிதனின் குணமானது அவன் வழிபடும் தேவனின் தன்மையால் தீர்மானிக்கப்படும் என்று கூறப்படுகிறது. வேதத்தில் கூறப்பட்டுள்ள தேவனைப் பற்றிய நமது பார்வை தவறானதாக இருந்தால், அது அவரை வணங்குவதை மட்டுமல்ல, நம் குணத்தையும் பாதிக்கும். அதனால்தான் இந்த அதிகாரத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள டோசரின் எச்சரிக்கையைக் கவனிப்பது முக்கியம். கடவுளின் பண்புகளைப் பற்றிய சரியான புரிதல் இல்லாதது அவரைப் பற்றிய தவறான பார்வைக்கும், அவரைப் பிரியப்படுத்தத் தவறும் வாழ்க்கைக்கும் வழிவகுக்கும். எனவேதான் தேவனின் பண்புகளைப் படிப்பது மிகவும் முக்கியமானது. தேவனின் பண்புகளை வாழ்நாள் முழுவதும் படித்தாலும் கூட அவற்றை முழுமையாக புரிந்து கொள்ள முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன், ஏனென்றால் எல்லையற்ற தேவனை முழுமையாக புரிந்துகொள்வது வரையறுக்கப்பட்ட மனிதர்களால் சாத்தியமற்றது.

இருப்பினும், நாம் தேவனின் சாயலில் படைக்கப்பட்டுள்ளோம். அதாவது தேவனைப் பற்றிய சில உண்மைகளைத் தொடர்புபடுத்தும் உள்ளார்ந்த திறன் நமக்கு இருக்கிறது. கிறிஸ்துவில் புது சிருஷ்டியாக உருவாக்கப்பட்டு (2 கொரிந்தியர் 5:17), தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியானவரின் (1 கொரிந்தியர் 2:13) கிரியையின் மூலம், நாம் தேவனை மென்மேலும் அறிய முடியும். பவுலுடைய 25 வருட ஊழியத்திற்குப் பிறகும், "நான் கிறிஸ்துவை அறிய விரும்புகிறேன்" என்பது அவருடைய விடாப்பிடியான ஆசை அல்லது குறிக்கோளாக இருந்தது (பிலிப்பியர் 3:10). அதுவே நமது தொடர்ச்சியான குறிக்கோளாகவும் இருக்க வேண்டும்.

**ஆசீர்வாதம் #4: நம் இருதயங்களில் மகிழ்ச்சியை உருவாக்குகிறது.**

தேவனை மகிமைப்படுத்துவதும், அவருடன் என்றென்றும் மனமகிழ்ச்சியாய் இருப்பதுமே மனிதனின் தலையாய கடமை என்று வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாசக் கையேடு கூறுகிறது. தேவனைப் பற்றிய அறிவில் நாம் வளரும்போது, அவர் மீதான நம் அன்பையும் பெருக்குவது மட்டுமல்லாமல், நம்முடைய கீழ்ப்படிதலையும்

அதிகரிக்கிறது. இதன் விளைவாக, பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்வில் அதிக மகிழ்ச்சியை உண்டாக்குகிறார் (கலாத்தியர் 5:22). புகழ்பெற்ற போதகரான சார்லஸ் ஸ்பர்ஜனின் ஊக்கமளிக்கும் வார்த்தைகள் இதோ:

> *தேவனின் ஆழமான கடலில் மூழ்கி விடுங்கள்; அவரது மகத்துவத்தில் மறைந்துவிடுங்கள்; நீங்கள் இளைப்பாறும் படுக்கையிலிருந்து புத்துணர்ச்சியுடன் வெளியே வருவீர்கள். நம் ஆத்துமாவை எது ஆறுதல்படுத்தக்கூடும் என்று எனக்குத் தெரியாது; அதனால் துக்கத்தையும், துயரத்தையும் புறந்தள்ளுங்கள்; தேவனைக் குறித்த காரியங்களில் பக்தியுள்ளவர்களாக சோதனையை எதிர்கொள்ளுங்கள்.*

## ஆசீர்வாதம் #5: பாடுகளுக்கு வேதாகம முறையில் பதிலளிக்க நமக்கு உதவுகிறது.

அழிவிற்குரிய உலகில் உபத்திரவம் ஒர் யதார்த்தம் (ரோமர் 8:20). விசுவாசிகளும் கூட அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. மேலும், நாம் எதிர்கொள்ளக்கூடிய பாடுகளுக்கு சரியான அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பதில்கள் பெரும்பாலும் கிடைப்பதில்லை. இதுபோன்ற சமயங்களில், கடவுளின் வழிகளை சந்தேகப்பட்டு, மிகுந்த மனச்சோர்வும், விரக்தியுமடைந்து அவரை விட்டு தூரமாகிவிடுவதற்கும் நாம் எத்தனிப்போம். இருப்பினும், அவருடைய பண்புகளைப் பற்றிய புரிதலில் நாம் வளரும்போது, அவர் மீதான நம் விசுவாசம் அதிகரிக்கிறது. அது நிகழும்போது, “பாடுகள் ஏன்?" என்ற கேள்விக்கு பதில்களைத் தேடுவதற்குப் பதிலாக, அவர் நம்மைக் கைவிடவில்லை என்பதையும், அவர் வாக்குறுதியளித்தபடி நம்மைப் பாதுகாப்பாக வழிநடத்திச் செல்வார் என்பதையும் அறிந்து, கடவுளில் ஆறுதலைக் கண்டடைவோம் (பிலிப்பியர் 1:5-6).

தேவனுடைய தாசனாகிய யோபு தன் வாழ்வில் இந்த உண்மையைக் கண்டார். அவர் கற்பனை செய்ய முடியாத பாடுகளை எதிர்கொண்டு, பல கேள்விகளுடன் போராடிக்கொண்டிருந்த நிலையில், அந்த கேள்விகளை நேரடியாக தேவனிடம் முன்வைக்க விரும்பினார் (யோபு 13:3). ஆனால், இறுதியாக தேவன் யோபுக்கு தம்மை வெளிப்படுத்தியபோது, யோபு தன் கைகளினால் வாயைப் பொத்திக்கொண்டதுமல்லாமல், தனக்குப் புரியாத விஷயங்களைப் பேசினதற்கு மனம் வருந்தினார் (யோபு 40:4, 42:4-6). யோபுவின் கேள்விகளுக்கு ஒருபோதும் பதில் கிடைக்கவில்லை என்றாலும், தேவனைப் பற்றிய தனது புரிதலில் அவர் ஆறுதலடைந்தார். உங்களுக்கும் எனக்கும் இதே நிலைதான். கடவுளின் குணாதிசயங்களை நாம் எவ்வளவு அதிகமாகப் புரிந்துகொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக பாடுகளை வேதாகமத்தின் அடிப்படையில் கையாள்வோம். அதாவது, விசுவாசத்தால் தொடர்ந்து அவரைப் பற்றிக்கொண்டு, அவருடைய வழிகளை சந்தேகப்படாமல், மனச்சோர்வுக்கும், விரக்திக்கும் ஆளாகாமலும், அவரிடமிருந்து நாம் விலகாமலும் இருப்போம்.

இந்த ஐந்து ஆசீர்வாதங்களும் தேவனுடைய பண்புகளை வாழ்நாள் முழுவதும் படிக்கத் தூண்டும் என்று நம்புகிறேன். ஆனால் அவருடைய பண்புகளைப் படிக்கும் முன், இந்த விஷயத்தைப் பற்றிய சில அடிப்படை உண்மைகளைப் பார்ப்போம்.

### தேவனின் பண்புகளைப் பற்றிய அடிப்படை உண்மைகள்.

***பண்பு என்றால் என்ன?*** பண்பு என்பது ஒரு மனிதனுடைய உள்ளார்ந்த தரம் அல்லது குணம். கடவுளின் குணாதிசயங்களைக் குறிப்பிடும்போது, வேதத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட அவருடைய உள்ளார்ந்த மற்றும் நிரந்தரமான பல்வேறு இயல்புகளைப் பற்றியே பேசுகிறோம்.

***எது பண்பு இல்லை?*** தேவனின் பண்புகள் பகுக்கப்படக் கூடியவைகள் அல்ல. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தேவன் 10% அன்பு, 15% பரிசுத்தம், 5% கருணை உடையவரல்ல. ஒவ்வொரு பண்பும் அவரது மொத்த இயல்பை விவரிக்கிறது. உதாரணமாக, அன்பு தேவனுடைய இயல்பின் ஒரு பகுதி அல்ல; அவருடைய முழு ஆள்தத்துவத்திலும் அன்பானவர். பரிசுத்தம் என்பது தேவனுடைய இயல்பின் ஒரு பகுதி அல்ல; அவர் தமது முழு ஆள்தத்துவத்திலும் பரிசுத்தமானவர். நீதி என்பது தேவனுடைய இயல்பின் ஒரு பகுதி அல்ல; அவர் தம்முடைய முழு ஆள்தத்துவத்திலும் நீதியுள்ளவர்.

மேலும், தேவன் தமது பண்புகளில் ஒன்றை வெளிப்படுத்தும்போது மற்றொன்றுடன் சமரசம் செய்ய முடியாது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அன்பான அதே தேவனே (1 யோவான் 4:8) கோபத்தையும் வெளிப்படுத்துகிறார் (சங்கீதம் 5:5). எனவே, "தேவன் அன்பாக மட்டும் இருக்கிறார்" என்று முடிவு செய்யாமல் இருப்பது முக்கியம், ஏனென்றால் அவர் எல்லா மக்களையும் காப்பாற்றி, அன்பாக இருக்கும் அதேவேளையில், பரிசுத்தராக கோபத்தையும் வெளிப்படுத்துகிறவர். எனவேதான், "தேவன் பாவியை நேசிக்கிறார், ஆனால் பாவத்தை வெறுக்கிறார்" என்ற கூற்று மிகுந்த எச்சரிக்கையுடன் கூறப்பட வேண்டும்.

மனந்திரும்பிய பாவிகளை தேவன் தமது அன்பின் காரணமாக இரட்சிக்கும் அதேவேளையில், மனந்திரும்பாத பாவிகளை நித்திய நரகத்தில் தள்ளுவதன் மூலம் அவர்களை நியாயந்தீர்க்க வேண்டும். தேவன் பாவத்தை மட்டும் தண்டிப்பதில்லை. தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் தம்மிடம் மனந்திரும்பாமல் தொடர்ந்து பாவத்தில் இருக்கும் பாவியையும் அவர் தண்டிக்கிறார். அதனால்தான் நாம் தேவனின் பண்புகளைப் படிக்கும்போது, ஒரு பண்பைக் குறைத்து, ஒரு பண்பை வலியுறுத்தாமல் கவனமாக இருக்க வேண்டும். தேவன் அனைத்து முழுமைகளின் தொகுப்பு.

பங்குக் கொள்ள முடியாத பண்புகள் மற்றும் பங்குக் கொள்ளக்கூடிய பண்புகள் என தேவனின் பண்புகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

***பங்குக் கொள்ள முடியாத பண்புகள்.*** இவை நம்முடன் பங்குக்கொள்ள முடியாத, தேவனுக்கு மட்டுமே உரியப் பண்புகளாகும். எடுத்துக்காட்டுகள்:
கடவுளின் தன்னிருப்பு, சர்வ வல்லமை, சர்வ ஞானம், சர்வ வியாபம் மற்றும் பல.

***பங்குக் கொள்ளக்கூடிய பண்புகள்.*** இவை ஓரளவிற்கு மனிதருடன் பங்குக் கொள்ளக் கூடிய தேவனின் பண்புகளாகும். உதாரணம் அன்பு, தயவு, இரக்கம் மற்றும் பல.

சில பண்புக்கூறுகள் இந்த வகையைச் சேர்ந்தவை, மற்றொன்று இன்னொரு வகையை சேர்ந்தவை என்று வகைப்படுத்துவது எப்போதும் எளிதானதல்ல என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். எடுத்துக்காட்டாக, சர்வ ஞானமானது அனைத்தையும் அறிந்த தேவனின் பண்பாக நாம் பங்குக்கொள்ள முடியாவிட்டாலும், மனிதர்களாகிய நம்மிடம் அறிவு உள்ளது. எனவே, பண்புக்கூறு பிரிவில் அதிக கவனம் செலுத்தாமல், பண்புகளை படிப்பதிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

மேற்கண்ட இந்த எண்ணங்களுடன், பின்வரும் தொகுப்புகளில் தேவனின் சில பண்புகளை ஜெபத்துடன் படிப்போம்.

# கடவுளின் பரிசுத்தம்

*தேவனின் பரிசுத்தம் என்பது பாவத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் இருந்து முழுமையாக பிரிக்கப்பட்டதை மட்டும் குறிக்காமல், அவர் முற்றிலும் தூய்மையானவர், அவரது மற்ற படைப்புகளிலிருந்து தனித்து நிற்பவர் என்பதையும் உள்ளடக்கியது.*

ஒருவேளை கீழ்காணும் ஒப்புவமை, தேவனின் பரிசுத்தத்தின் மேற்கூறிய விளக்கத்தை நன்றாகப் புரிந்துகொள்ள நமக்கு உதவக்கூடும்:

> *ஆரோக்கியமாக இருப்பது என்றால் என்ன? இது நோய் இல்லாதது மட்டுமின்றி, ஒரு நேர்மறையான ஆற்றலை உடையதுமாகும். பரிசுத்தம் என்பது பாவமில்லாததும், நேர்மறையான தன்மைகளைக் கொண்டிருப்பதுமாகும். தேவனுடைய பரிசுத்தம் என்பது அவருடைய இயல்பு, விருப்பம் மற்றும் செயல் ஆகியவற்றில் தூய்மையாக இருப்பதாகும்.*

ஒரு எழுத்தாளர் இவ்வாறு கூறுகிறார்:

> *வேத வல்லுநர்கள் பலர் [தேவனின்] பரிசுத்தத்தை எல்லாவற்றிலும் முதன்மையான பண்பாக பார்க்கிறார்கள், ஏனென்றால் தேவனின் எல்லா பண்புகளிலும் பரிசுத்தம் வியாபித்துள்ளது. மேலும் அவருடைய இருப்பு மற்றும் கிரியைகள் அனைத்திலும் அது ஒத்துப்போகிறது. தேவனுடைய பரிசுத்தத்தில் பல அம்சங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.*
>
> *"நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான்" என்று ஏசாயா 57:15 ஆம் வசனம் அவரது ஆழ்நிலையை விவரிக்கிறது.*
>
> *பரிசுத்தம் என்பது "அநீதி அல்லது பாவத்திலிருந்து தேவன் வேறுபட்டவர்" என்பதை வலியுறுத்துவதாகும். அது தேவனின் கம்பீரமான தூய்மை அல்லது நெறிமுறை மகத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது. இந்த வலியுறுத்தலின் அடித்தளம் பின்வரும் வசனத்தில் காணப்படுகிறது "நான் பரிசுத்தர்; ஆகையால், பரிசுத்தராயிருப்பீர்களாக.."(லேவியராகமம் 11:44,45). தேவன் தார்மீக ரீதியாக தூய்மையானவர் என்பதால், அவர் தீமையோடு எந்த உறவையும் கொண்டிருக்க முடியாது (சங்கீதம் 11:4-6). அவரது பரிசுத்தத்தில் அவரே அதன் தார்மீக மற்றும்*

*நெறிமுறை தரநிலையாக இருக்கிறார்; அவர்தான் சட்டம். அவரே தரத்தை அமைக்கிறார்.*

வேதாகமத்தில் தேவனுடைய பரிசுத்தம் என்ற ஒரு பண்பு மட்டுமே தொடர்ச்சியாக மூன்று முறை குறிப்பிடப்பட்டுள்ளது. சேராபீன்கள் "ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்" (ஏசாயா 6:3).

உண்மையில், பரிசுத்தம் என்பது "அனைத்து பண்புகளின் தொகுப்பாகவும்" இருக்கிறது.

தேவனின் பரிசுத்தம் நிரூபிக்கப்படுவதை குறைந்தபட்சம் மூன்று பகுதிகளில் நாம் காணலாம்.

## 1. தேவனுடைய பரிசுத்தம் அவருடைய இயல்பில் உறுதிப்படுகிறது.

தேவன் பரிசுத்தர் என்றால் அவர் பாவத்திலிருந்து முற்றிலும் பிரிக்கப்பட்டவர் என்று அறியலாம். இந்த சத்தியம் 1 யோவான் 1:5 ஆம் வசனத்தை வாசிக்கையில் தெளிவாகத் தெரிகிறது, அங்கு "தேவன் ஒளியாக இருக்கிறார்" என்று வாசிக்கிறோம். பல வெளிச்சங்களில் தேவனும் ஒரு வெளிச்சம் அல்லது தேவனுக்கு ஒளி இருக்கிறது என்று வசனம் கூறவில்லை. மாறாக, தேவன் ஒளியாக இருக்கிறார் என்று கூறுகிறது. “தேவன் ஆவியாக இருக்கிறார்” (யோவான் 4:24) மற்றும் “தேவன் அன்பாக இருக்கிறார்” (1 யோவான் 4:8) என்ற கூற்றுக்களைப் போலவே, தேவன் அவருடைய சாராம்சத்தில் பரிசுத்தமானவர். இந்த கருப்பொருளை சிறப்பிக்கும் சில வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

> **யாத்திராகமம் 15:11** - *கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?*
>
> **1 சாமுவேல் 2:2** - *கர்த்தரைப் போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை; உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை; எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை.*

## 2. தேவனுடைய பரிசுத்தம் அவருடைய கிரியைகளில் உறுதிப்படுகிறது.

தேவனின் பரிசுத்தம் அவருடைய இயல்பில் மட்டுமல்ல, எல்லா படைப்புகளிலும் அவருடைய வார்த்தையிலும் காணப்படுகிறது.

*படைப்பில்...* அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது என்று ஆதியாகமம் 1:31 தெளிவாகக் கூறுகிறது.

*வேதத்தில்...* ரோமர் 7:12 கூறுகிறது, "ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும், நீதியாயும், நன்மையாயும் இருக்கிறது." அதனால்தான் வேதாகமம் "பரிசுத்த வேதாகமம்" என்று அழைக்கப்படுகிறது.

எனவே, பொது வெளிப்பாடாகிய படைப்பிலும், தேவனின் சிறப்பு வெளிப்பாடாகிய வேதத்திலும், அவருடைய பரிசுத்தம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு எழுத்தாளரின் கூற்றுப்படி, "வல்லமை தேவனின் கரம்; சர்வ ஞானம் அவரது கண்; கிருபை அவரது இருதயம்; நித்தியம் அவரது காலம்; ஆனால் பரிசுத்தம் அவரது அழகு." பாவத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்படுபவர்கள் அவருடைய எல்லா பண்புகளிலும் பரிசுத்தத்தை மிக அழகானதாகக் காண்பதில் ஆச்சரியமில்லை.

### 3. தேவனுடைய பரிசுத்தம் அவர் பாவத்திற்கு எவ்வாறு எதிர்வினையாற்றுகிறார் என்பதில் உறுதிப்படுகிறது.

"தேவன் ஒளியாக இருக்கிறார்" (1 யோவான் 1:5) என்ற சத்தியத்தின் கூற்றை அப்போஸ்தலனாகிய யோவான் இந்த அறிக்கையின் மூலம் *வலுப்படுத்துகிறார்:* "அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை" (1 யோவான் 1:5). தேவன் ஒளியாக இருப்பதால், அவர் ஒளிக்கு எதிர்மாறான இருளில் இருக்க முடியாது. எனவேதான் தேவன் எல்லா வகையான பாவங்களையும் வெறுக்கிறார், ஏனென்றால் இருள் என்பது பாவத்தைக் குறிக்கிறது (யோவான் 3:19).

ஆபகூக் 1:13ல் பாவத்திற்கான கடவுளின் எதிர்வினையை இப்படி நாம் வாசிக்கிறோம், “தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே.” தேவன் தூய்மையை முழுமையாக விரும்புவதைப் போலவே, தூய்மையற்றதை முற்றிலும் வெறுக்கிறவர். நீதிமொழிகள் 15:9 இவ்வாறு கூறுகிறது, “துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது; நீதியைப் பின்பற்றுகிறவனையோ அவர் நேசிக்கிறார்.” தேவன் தீமையை வெறுக்கிறார் என்பதால், அவர் தீயதைத் தண்டிக்க வேண்டும். நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளம், சோதோம்-கொமோராவின் அழிவு மற்றும் பார்வோனும் எகிப்தியரும் நியாயந்தீர்க்கப்பட்டது இந்த சத்தியத்தை நிரூபிக்கும் சில எடுத்துக்காட்டுகளாகும்.

ஆனால், பாவத்தின் மீதான கடவுளுடைய வெறுப்பின் உச்சப்பட்ச எடுத்துக்காட்டுக்கு இலக்கணமாக, நம்முடைய பாவங்களைச் சிலுவையில் சுமந்த அவருடைய குமாரனாகிய இயேசுவின் தண்டனை காணப்படுகிறது. கர்த்தராகிய இயேசு சிலுவையில் நம்முடைய பாவங்களைச் சுமந்தபோது, தேவன் தம்முடைய அன்பான குமாரன் மீது தம்முடைய முழுக் கோபத்தையும் கட்டவிழ்த்துவிட்டார். அவருடைய குமாரன் சிலுவையில் பாடுபட்டதால் தேவன் அவருடைய பரிசுத்தத்தைக் குறைக்கவில்லை என விளங்குகிறது. தம் குமாரனுக்காக sஅவர் நீதியின் தரத்தை குறைக்கவில்லை. அந்த அளவுக்கு தேவன் பாவத்தை வெறுக்கிறார். அவர் இருளுடன் எந்த சமரசமும் செய்து கொள்வதில்லை.

### தேவனுடைய பரிசுத்தத்திற்கு நம்முடைய பதில்.

அப்படியென்றால், தேவனின் பரிசுத்தத்திற்கு நம் பதில் என்னவாக இருக்க வேண்டும்? அப்போஸ்தலனாகிய பேதுரு அதை 1 பேதுரு 1:14-16 ல் (லேவியராகமம் 11:44-45, 19:2 லிருந்து மேற்கோளிடப்பட்டது) நன்றாகப் படம்பிடித்துள்ளார், அவ்வசனங்கள் இவ்வாறு கூறுகிறது, “நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த

இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே." ஒரு எழுத்தாளர் இவ்வாறு கூறுகிறார், "தேவனைக் கனப்படுத்துவதற்கான பிரதான வழி - சிறந்த வார்த்தைகளை உச்சரிப்பதாலேயோ அல்லது பாடல்களை பாடி அவரை ஆராதிப்பதாலேயோ அல்ல. மாறாக, கறைபடியாத ஆவியுடன் அவரோடு உரையாடி, அவரைப் *போலவே* வாழ விரும்புவதுமே அவரை மிகவும் கனப்படுத்துகிறது."

நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்பது பற்றிய நமது கர்த்தருடைய மாதிரி ஜெபத்தின் முதல் பகுதி: " உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (மத்தேயு 6:9)) என்று தொடங்குகிறது. மேலும் நாம் பரிசுத்தமாக வாழ்வதுதான் ஒரு பரிசுத்தமான தேவனை கனப்படுத்தும் சிறந்த வழியாக இருக்கிறது. தேவனை போற்றுவதற்கு அவரை பின்பற்றுவதே சரியான பதில்! கீழ்காணும் ஒரு விசுவாசியின் இந்த ஜெபம், தேவன் பரிசுத்தமானவர் என்பதால் ஒரு விசுவாசி பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்ற ஏக்கத்தின் சாராம்சத்தை நன்றாகப் படம்பிடித்துக் காட்டுகிறது:

> *என் தேவனே,*
>
> *உம்மைப் பிரியப்படுத்துவதும், நான் எப்படி இருக்க நீர் விரும்புகிறீரோ அப்படி இருப்பதுமே பரலோகத்தில் இருப்பதைப் போன்ற உணர்வைத் தருகிறது. ஓ, நீர் பரிசுத்தராக இருப்பது போல நான் பரிசுத்தமாகவும், கிறிஸ்து தூய்மையானவராக இருந்தது போல, நான் தூய்மையாகவும், ஆவியானவர் பூரணராக இருப்பது போல நான் பூரணமாகவும் இருந்தால் நலமாக இருக்கும்!*
>
> *அவற்றை, உமது புத்தகத்தில் உள்ள சிறந்த கட்டளைகளாக நான் உணர்கிறேன், அவற்றை நான் மீற முடியுமா? நான் அவற்றை தகர்க்க முடியுமா? நான் இங்கு வாழும் வரை இப்படி ஒரு கட்டாயத்தில் இருக்கிறேனா?*
>
> *ஐயோ, ஐயோ, நான் ஒரு பாவி, இந்த ஆசீர்வதிக்கப்பட்ட தேவனை நான் துக்கப்படுத்துகிறேன், அவர் நன்மையிலும் கிருபையிலும் எல்லையற்றவர் ...*
>
> *இந்தச் சிறந்த தேவனை போற்றவும், வழிபடவும் நான் என்ன செய்ய வேண்டும்? ஓ, என் ஆத்துமாவையும் சரீரத்தையும் அவரது சேவைக்காக, தடையின்றி, என்றென்றும் அர்ப்பணிப்பேன்!*
>
> *ஓ, நான் இனி ஒருபோதும் சுயமாக இல்லாமல் அவருக்கு என்னை அர்ப்பணிப்பேன்! அல்லது அவரது விருப்பத்திற்கும் அவரது அன்பிற்கும் ஒவ்வாத எந்த விருப்பத்தையும் அல்லது பாசத்தையும் கொண்டிருக்கமாட்டேன்!*

எபிரெயர் 12:14 இவ்வாறு தெளிவாகக் கூறுகிறது, "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே." தேவனுடைய பிள்ளைகளை சிட்சிப்பதில் தேவனின் நோக்கம்; "இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டாகும்" (எபிரெயர் 12:10). "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே

பூரணப்படுத்தக்கடவோம்.” (2 கொரிந்தியர் 7:1) எல்லாவற்றிலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ கட்டளையிடப்பட்டுள்ளோம். “பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவனுள்ள பலியாக” நாம் தொடர்ந்து நம்மை அர்ப்பணிக்க வேண்டும் (ரோமர் 12:1). அவருடைய கிருபையினாலும், பரிசுத்த ஆவியானவரை சார்ந்திருப்பதினாலும் பாவத்தை வெறுப்பதற்கும், பரிசுத்தத்திற்கான தீவிர நாட்டத்திற்கும் இந்த வசனங்கள் நம்மை அழைக்கிறதல்லவா?

எனவே, இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்காதவர்கள் தாமதமின்றி அவரிடம் திரும்ப வேண்டும். இந்த பரிசுத்த தேவனிடமிருந்து நீங்கள் ஒருக்காலும் தப்பிக்க முடியாது. எதிர்காலத்தில் நியாயத்தீர்ப்பு வரப்போகிறது என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. இயேசுகிறிஸ்துவின் மூலம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படாமல் நீங்கள் மரித்தால், உங்கள் எதிர்காலம் மிகவும் இருண்டதாக இருக்கும். அத்தகைய மக்கள் அனைவரும் வசிக்கும் கடைசி இடம் அக்கினி கடலாகும்(வெளிப்படுத்தல் 20:14), அது நரகம் என்றும் அழைக்கப்படுகிறது (மத்தேயு 5:29). அங்கு அவர்கள் நித்தியத்தை வலியிலும், வேதனையிலும் கழிக்க வேண்டியிருக்கும். சாத்தானும் அவனுடைய தூதர்களும் நித்திய தண்டனைக்காக போடப்படும் இடமும் நரகம்தான் (வெளி 20:10; மத்தேயு 25:41).

எனவே, அன்புடன் நான் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன்: உங்கள் பாவங்களை விட்டு இன்றே கிறிஸ்துவிடம் திரும்புங்கள். "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபிரெயர் 4:7). உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான ஒரே வழி இயேசுகிறிஸ்துவே. இயேசுகிறிஸ்துவின் மூலமாக மட்டுமே நீங்கள் இந்த பரிசுத்தமான தேவனுடன் ஒப்புரவாக முடியும். உங்களை இரட்சிக்க இயேசுகிறிஸ்துவை அழையுங்கள். பின்னர் (அப்போதுதான்) பரிசுத்த ஆவியின் மூலம் பரிசுத்த வாழ்க்கையைத் தொடர சிந்தனை, செயல் ஆகிய இரண்டிலும் உங்களுக்கு வல்லமை கிடைக்கும்.

நினைவில் கொள்ளுங்கள், “தேவன் ஒளியாக இருக்கிறார்; அவரிடம் எவ்வளவேனும் இருள் இல்லை” (1 யோவான் 1:5). தேவனுக்கும் இருளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை; அவருடைய பிள்ளைகளாகிய நமக்கும் இருளுக்கும் எந்தத் தொடர்பும் இருக்க முடியாது. தேவனின் வழிகள் எப்போதும் சிறந்தவை, ஏனென்றால் இது பரிசுத்தத்தின் வழி. இது ஜீவன் மற்றும் ஒளியின் வழி; தடுமாறுவதற்கும் அலைவதற்கும் எந்த முகாந்திரமும் இங்கே இல்லை. தேவனைப் பற்றிய நமது பார்வை எவ்வளவு மேலானதோ, நமது நடை அவ்வளவு பரிசுத்தமானதாக இருக்கும். இந்த பரிசுத்த தேவன் மீதான நமது அணுகுமுறை சிறு பையனைப் போல இருக்கட்டும், ஒரு சிறுவன் தவறு செய்ய மறுத்தபோது, "உன் அப்பா உன்னை வருத்தப்படுத்துவார் என்று நீ பயப்படுகிறாய்" என்று தனது நண்பரால் கிண்டல் செய்யப்பட்டான். ஆனால் அதற்கு அந்த சிறுவன் இவ்வாறு பொருத்தமாக பதிலளித்தான், “உண்மையில் அப்படி இல்லை. நான் தான் அவரை வருத்தப்படுத்துவேனோ என்று பயப்படுகிறேன்.

இருளில் நடக்காமல் வெளிச்சத்தில் நடப்பவர்களின் மனநிலை இதுதான். பாவம் தேவனைப் புண்படுத்துவதால் பாவத்தை வெறுக்கிறோம். பாவம் நமக்கு என்ன செய்கிறது என்பதற்காக மட்டும் அதை வெறுக்காமல், அது நம் அன்பான இரட்சகரை என்ன செய்கிறது என்பதற்காகவே அதை வெறுக்க வேண்டும். எனவே, நாம் எல்லாவிதமான பாவத்திலிருந்தும் மனந்திரும்ப வேண்டுமானால், பரிசுத்த ஆவியின் வல்லமையை சார்தல் வேண்டும். தாமதமின்றி அதைச் செய்வோம்!

## கலந்துரையாடல் கேள்விகள்

1. கடவுளுடைய பரிசுத்தத்தைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம், எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
2. கடவுளின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் உங்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம்?
3. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் ஜெப வாழ்க்கையில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
4. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் பிரசங்கங்களில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**யாத்திராகமம் 15:11 -** *கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?*

## ஜெபம்

*ஆண்டவரே, என்னை சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தும்!*

## கடவுளுடைய வல்லமை

*தேவனின் வல்லமை என்பது அவருடைய பரிசுத்த குணத்திற்கு ஏற்ப அவர் திட்டமிட்ட அனைத்தையும் செய்யும் திறனைக் குறிக்கிறது.*

“வல்லமை தேவனுடையது” என்று தாவீது சங்கீதம் 62:11 ல் கூறியிருக்கிறார். வல்லமை என்பது தேவனுக்கு மட்டுமே சொந்தமானது. “சர்வவல்லமையுள்ளவர்” (ஆதியாகமம் 17:1; யாத்திராகமம் 6:3; 2 கொரிந்தியர் 6:18; வெளி 1:8) என்ற வார்த்தையின் அர்த்தம், தேவன் ஒருவரே எல்லா வல்லமையும் அதிகாரமும் உடையவர் என்பதாகும். இந்தக் குறிப்பு வேதத்தில் 50 தடவைகளுக்கு மேல் காணப்படுகிறது, இது தேவனை மட்டும் விவரிக்க பயன்படுத்தப்படுகிறது. தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்பதை விவரிக்கப் பயன்படுத்தப்படும் இது ஓம்னி Omni போடென்ட் potent என்ற இரு லத்தீன் வார்த்தைகளில் இருந்து பெறப்பட்டது: ஓம்னி, அதாவது சர்வ, மற்றும் பொட்டன்ஸ், அதாவது வல்லமை என்று பொருள்படுகிறது. உண்மையில், "வல்லமை" என்ற வார்த்தை தேவனின் பெயராகவும் பயன்படுத்தப்படுகிறது, மாற்கு 14:62 ல் இயேசுகிறிஸ்து மதத் தலைவர்களிடம், மனுஷகுமாரன் “சர்வவல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதை" நீங்கள் காண்பீர்கள் என்று கூறுவதைக் காணலாம். தேவனுடைய வலது பாரிசம் என்று கூறுவதற்குப் பதிலாக, சர்வ வல்லவரின் வலது பாரிசம் என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார், எனவே, தேவனும் வல்லமையும் பிரிக்க முடியாதவை என்பது உறுதியாகிறது.

தேவனுடைய வல்லமை நமது ஆற்றலைப் போன்றதல்ல. நம்முடைய ஆற்றல் கடன் வாங்கப்பட்ட ஆற்றல் - வெளியில் இருந்து - தேவனிடமிருந்து பெறப்பட்டது. ஆனால் தேவனுடைய வல்லமை அவருக்குள் இயல்பாகவே உள்ளது. அவர் அதிகாரத்திற்காக மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டியதில்லை அல்லது அவர் தமது வல்லமையை எவ்வாறு பயன்படுத்தலாம் அல்லது பயன்படுத்த கூடாது என்பதைப் பற்றி மற்றவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை. அவரே சர்வ வல்லவர்!

ஒரு எழுத்தாளர் இவ்வாறு கூறுகிறார்:

> *தேவனின் வல்லமை என்பது, அவர் தமது சித்தத்ததை நிறைவேற்றக்கூடிய திறமையும், ஆற்றலுமாகும். அவர் எதை செய்யவும் சித்தங்கொண்டிருக்கிறார், எல்லையற்ற ஞானம் உடையவராக இருக்கிறார், அனைத்தையும் நிறைவேற்ற*

*கூடிய வகையில் எல்லையற்ற பரிசுத்தமுள்ளவராக இருக்கிறார், அவருடைய பரிசுத்தம் அனைத்து பண்புகளுக்கும் மணிமகுடமாக இருக்கிறது, என்றாலும் அவருடைய வல்லமை தெய்வீக இயல்பின் அனைத்து பரிபூரணங்களுக்கும் உயிரோட்டமாக இருக்கிறது.*

*கடவுளின் நித்திய ஆலோசனையை நிறைவேற்றாத வல்லமை வீணானது. வல்லமை இல்லாத அவரது இரக்கம் பலவீனமானதாகவும், வாக்குறுதிகள் ஒரு வெற்று ஒலியாகவும், அச்சுறுத்தல்கள் வெறும் மேம்போக்கானதாகவும் இருக்கும். தேவனின் வல்லமை அவரைப் போன்றே எல்லையற்றது, நித்தியமானது, புரிந்துகொள்ள முடியாதது; அதை படைப்புகளால் நிதானிக்கவோ, கட்டுப்படுத்தவோ, அதனால் விரக்தியடையவோ முடியாது.*

எனவே, "கர்த்தரால் செய்ய கூடாத காரியம் ஒன்றுண்டோ?" என்ற கேள்வி, (ஆதியாகமம் 18:14; எரேமியா 32:27), "உம்மால் கூடாதது ஒன்றும் இல்லை" (எரேமியா 32:17) என்ற தெளிவான பதிலைத் தருகிறது. எல்லாவற்றையும் செய்யும் தேவனின் வல்லமையை யோபு இந்த வார்த்தைகளால் உறுதிப்படுத்துகிறார், “தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.” (யோபு 42:2).

இருப்பினும், தேவனின் வல்லமையைப் படிக்கும்போது நாம் புரிந்துகொள்ள வேண்டிய இரண்டு அம்சங்கள் உள்ளன.

முதலாவதாக, தேவனால் எல்லாவற்றையும் செய்ய கூடும் என்றாலும், அவர் தமது பரிசுத்த குணத்திற்கு முரணான எதையும் செய்ய மாட்டார். தேவன் தமக்குத்தாமே நிர்ணயித்துக் கொண்ட சில வரம்புகள் உள்ளன. உதாரணமாக, தேவனால் பொய் சொல்ல முடியாது (தீத்து 1:2), அவர் பாவம் செய்ய சோதிக்கப்பட முடியாது (யாக்கோபு 1:13), மற்றும் அவர் தம்மை மறுதலிக்க முடியாது (2 தீமோத்தேயு 2:13). அவர் தம்முடைய வார்த்தைக்கு மாறாக செயல்படமாட்டார். உதாரணமாக, இரட்சிப்படைவதற்கு எல்லா மக்களையும் தேவன் தெரிந்துகொள்ளவில்லை. தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடம் விசுவாசம் வைப்பவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள். மற்றவர்கள் கடைசி நியாயத்தீர்ப்பு நாளில் நரகத்தில் தள்ளப்படுவார்கள்!

இரண்டாவதாக, சில சூழ்நிலைகளில், தேவன் தம்முடைய வல்லமையைக் காட்டாமலிருக்கலாம். அவர் தம்முடைய வல்லமையைக் காட்டினால், அவருடைய பரிசுத்த குணத்தை சமரசம் செய்துகொள்ளும்படி ஏற்படும் சூழ்நிலைகள் இவை அல்ல. உதாரணமாக, தேவன் தம்முடைய குமாரனை சிலுவையில் இருந்து காப்பாற்றவில்லை (ரோமர் 8:32). அவர் தமது பிள்ளைகளில் பலரை கொடூரமான மரணத்திலிருந்து காப்பாற்றவில்லை (எ.கா., ஆதியாகமம் 4:8ல் ஆபேல் மற்றும் அப்போஸ்தலர் 7:59-60ல் ஸ்தேவான்). அந்தச் சூழ்நிலைகளில் அவர் தமது விடுவிக்கும் ஆற்றலை நிச்சயமாக காட்டியிருக்க முடிந்திருக்கும்! இருப்பினும், அவர் அவ்வாறு

செய்யவில்லை, ஏனென்றால் இந்த மனிதர்கள் தாங்கள் கடந்து செல்ல வேண்டிய பாதையைக் கடந்தேயாக வேண்டும் என்பது அவருடைய திட்டமாக இருந்தது.

அதுபோலவே, சில சமயங்களில், நீங்களும் நானும் வேதனையான சம்பவங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்–இது நம்மை விடுவிக்கும் வல்லமை தேவனுக்கு இல்லாததால் அல்ல, அது அவருடைய ஒட்டுமொத்த திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதேயாகும். தேவன் ஏகாதிபத்தியம் கொண்டவர் என்று நாம் கூறும்போது அப்படித் தான் அர்த்தப்படுத்துகிறோம். அவர் தமது படைப்பின் மீது ஏகாதிபத்தியமுடைய அரசராக தமது ஆளுகையைப் பயன்படுத்துகிறார். எனவே, "தேவனால் எல்லாம் கூடும்" (மத்தேயு 19:26) போன்ற வசனங்களைத் தவறாக மேற்கோள் காட்டாமல், தேவன் எப்போதும் நமக்கு "சாதகமான" முடிவைத் தருபவர் என நாம் கூறுவதில் கவனமாக இருக்க வேண்டும். சோதனைகளில் இருந்து நம்மை விடுவிக்க தேவன் தமது வல்லமையை வெளிப்படுத்துவாரென்றாலும், அவருடைய நோக்கங்களுக்கு இணங்க, சோதனையிலும் நம்மைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான சில சந்தர்ப்பங்களும் உள்ளன. அதிலும் அவர் தமது வல்லமையை பயன்படுத்துகிறார்!

### தேவனுடைய வல்லமையின் வெளிப்பாடு

வே◌ேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, குறைந்தபட்சம் எட்டு வசனப் பகுதிகளில் தேவனுடைய வல்லமையைக் காண்கிறோம். அவற்றில் சில கடந்த காலத்திற்கும், சில நிகழ்காலத்திற்கும், மற்றவை எதிர்காலத்திற்கும் பொருந்தும்.

***1. பிரபஞ்சத்தை உருவாக்குவதில்.*** "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்ற சொற்றொடருடன் வேதம் தொடங்குகிறது (ஆதியாகமம் 1:1). முதலிலேயே நாம் தேவனுடைய வல்லமைக்கு அறிமுகப்படுத்தப்படுகிறோம். இந்த முழுப் பிரபஞ்சத்தையும் ஒரு சொல்லைக் கொண்டு உருவாக்க யாரால் கூடும்? அது தேவனால் மட்டுமே கூடும்! ஆதியாகமத்தின் முதல் இரண்டு அதிகாரங்கள் தேவனின் வல்லமையைப் பற்றிய சிருஷ்டிப்பு நிகழ்வுகளின் விவரங்களை நமக்குத் தருகின்றன. "தேவன் சொன்னார்" (எ.கா., ஆதியாகமம் 1:3,6,9) என்ற சொற்றொடரும், "அது அப்படியே ஆயிற்று" என்ற சொற்றொடரும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவதை பார்க்கிறோம். படைப்பின் பொருத்தமான கூறுகள் எவ்வாறு சடுதியாக தோன்றின என்பதைக் கவனியுங்கள் (ஆதியாகமம் 1:7,9,11). அது விவரிக்க முடியாத அவரது வல்லமையின் வெளிப்பாடு!

தேவனின் சிறப்பு வெளிப்பாடாகிய வேதம் மட்டுமல்ல, ரோமர் 1:20 ன்படி, பொதுவான வெளிப்பாடாகிய சிருஷ்டிப்பும் தேவனின் வல்லமைக்கு சாட்சியமளிக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சிருஷ்டிகள் ஒரு சிருஷ்டிருக்கு சாட்சியமளிக்கிறது. ஆகவே தான் தேவன் இருக்கிறார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

***2. பிரபஞ்சத்தை நிலைநிறுத்துவதில்.*** தேவன் பிரபஞ்சத்தைப் படைத்தது மட்டுமல்ல, அதை அவரே நிலைநிறுத்துகிறார். அதுவும் அவருடைய வல்லமை வாய்ந்த வார்த்தையால் மட்டுமே நிலைப்படுகிறது. எபிரெயர் 1:3 இவ்வாறு கூறுகிறது, "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து,

சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார்." இயேசுகிறிஸ்து, தமது வல்லமையால், முழு பிரபஞ்சத்தையும் தாங்குகிறார். நற்செய்தி நூல்களில், இயற்கையின் மீது இயேசுகிறிஸ்துவின் வல்லமையை நாம் அடிக்கடி பார்க்கிறோம். இப்போதும்கூட, பூமியை மூடிவிடாதபடி தேவனுடைய வல்லமை தண்ணீரை கட்டுப்படுத்துகிறது. நிலநடுக்கம் போன்ற பேரழிவுகளுக்கு கூட அவருடைய வல்லமை வரம்புகளை அமைக்கிறது. தேவனின் வல்லமையே மனிதர்களையும் தாங்குகிறது. ஒரு சிறிய குழந்தையை அதன் தாயின் வயிற்றில் தாங்குவது மட்டுமல்லாமல், பெரியவர்களையும் தேவனின் வல்லமையே தாங்குகிறது.

***3. தீமையைக் கட்டுப்படுத்துவதில்.*** தேவன், தமது வல்லமையால் பிரபஞ்சத்திலிருந்து அனைத்து தீமைகளையும் நியாயந்தீர்க்கும் அதேவேளையில், தற்காலத்தில் தீமை அதன் முழு விரீயத்தோடு செயல்படாமல் கட்டுப்படுத்துகிறார். பெரும்பாலும், தீயவர்களின் கொடூரமான செயல்களை பற்றி நாம் கேள்விப்படும்போது அதிர்ச்சியடைகிறோம். இத்தகைய செயல்கள் *நிரந்தமாக* நடக்காமல் இருப்பது தேவனுடைய கட்டுப்படுத்தும் வல்லமையை நிரூபிக்கிறது. வீழ்ச்சியடைந்த மனிதன் சாத்தானுடைய உதவியினால் ஏற்படுத்தும் சீரழிவு எப்பொழுதும் வலிய தீமையை ஏற்படுத்தக் கூடியது (ஆதியாகமம் 6:5; ரோமர் 3:14-18). ஆனால், தேவன் தமது வல்லமையால் கட்டுப்பாடுகளை வைத்துள்ளார். யோபுவைத் தீமை தாக்கியபோதும், அனுமதிக்கப்பட்டதை விட அதிக சேதத்தை ஏற்படுத்தாதபடிக்கு தேவனின் வல்லமையால் சாத்தான் மட்டுப்படுத்தப்பட்டான் (யோபு 1:12, 2:6).

***4. தமது ஜனத்தை விடுவிப்பதில்.*** யாத்திராகம புத்தகத்தில் நடந்த நிகழ்வுகள் தேவனுடைய வல்லமையின் தெளிவான காட்சியாகும். யாத்திராகமம் 15:6 ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது, "கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது; கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பகைஞனை நொறுக்கிவிட்டது." வலது கை தேவனின் மாபெரும் வல்லமையின் அடையாளமாகும். யோசுவாவின் தலைமையின் கீழும், பின்னர் தாவீதின் தலைமையின் கீழும் கானானில் கிடைத்த வெற்றிகள், தேவனுடைய மக்களை விடுவிப்பதில் அவருக்குள்ள வல்லமைக்கு தெளிவான எடுத்துக்காட்டுகள்.

***5. நோய் மற்றும் மரணத்தை மேற்கொள்வதில்.*** தம்முடைய ஊழிய காலத்தின் போது பல சந்தர்ப்பங்களில், ஒரு வார்த்தை அல்லது மென்மையான தொடுதல் மூலம் பல நோய்களைக் குணப்படுத்தி கர்த்தராகிய இயேசு தமது வல்லமையை வெளிப்படுத்தினார். இவை அனைத்தும் அவர் மேசியா என்று வெளிப்படுத்துகிறது. அவர் எதிர்காலத்தில் தேவனுடைய இராஜ்ஜியத்தை மகிமையுடன் ஸ்தாபிக்கும்போது, யாரும் பெலவீனமாக இருக்க வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் அப்பொழுது எந்த நோய்களும் இருக்காது.

இருப்பினும், இயேசுகிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியதே தேவன் காண்பித்த விவரிக்க முடியாத பெரும் வல்லமையாகும். மேலும் அந்த உயிர்த்தெழுதலின் மூலம், நோய் மற்றும் மரணத்தை வெல்லும் வல்லமை தமக்கு இருப்பதாக இயேசுகிறிஸ்து காட்டுகிறார். அது எப்படி? பாவத்தின் காரணமாகவே நோயும் மரணமும் இவ்வுலகிற்கு வந்தன (ரோமர் 5:12, 6:23). மேலும் பாவங்களுக்கான

விலைக்கிரயம் முழுமையாக செலுத்தப்பட்டதற்கு உயிர்த்தெழுதல் ஆதாரமாக இருப்பதால் (ரோமர் 4:24-25), நோய் மற்றும் மரணம் ஆகிய இரண்டும் ஒரு நாளில் முற்றிலும் அகற்றப்படும் (வெளிப்படுத்தல் 21:1-4).

***6. வாழ்க்கையை மாற்றுவதில்.*** நமது இரட்சிப்பின் மூன்று நிலைகளாகிய நீதிமானாகுதல் (கடந்த காலம்), பரிசுத்தமாகுதல் (நிகழ்காலம்), இறுதியாக, மகிமைப்படுதல் (எதிர்காலம்) போன்ற அனைத்திலும் தேவனின் வல்லமை செயல்படுகிறது.

***நீதிமானாகுதலில்.*** நாம் தேவனின் பிள்ளைகள் என்றால், அவரை வெறுப்பவர்களாக இருந்து நேசிப்பவர்களாக எப்படி மாறினோம்? அது நற்செய்தி மூலம்! மேலும் இந்த நற்செய்தியை பவுல் இவ்வாறு விவரிக்கிறார்: "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது." (ரோமர் 1:16). நற்செய்தி என்பது தேவனின் வல்லமை. இந்த வல்லமை வாய்ந்த நற்செய்தியின் மூலம், தேவன் மனிதனை நீதிமானாக்குகிறார் - இது நீதிமானாகுதல் என்று அறியப்படுகிறது. நற்செய்தியின் மூலம் நாம் புதிய வாழ்வைப் பெறுகிறோம்.

***பரிசுத்தமாகுதலில்.*** ஒருவர் தேவனுடைய பிள்ளையாக மாறும்போது, வல்லமையுள்ள பரிசுத்த ஆவியானவரின் உள்ளார்ந்த பிரசன்னத்தின் மூலம் உயிர்த்தெழுதலின் வல்லமையைப் பெறுகிறார். பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்ட அந்த வல்லமை நாம் சாட்சிகளாக இருக்க உதவுவது மட்டுமல்லாமல், பரிசுத்த வாழ்வில் வளரவும் நமக்கு உதவுகிறது. “பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” (அப்போஸ்தலர் 1:8). ஏனெனில் “தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது” (2 பேதுரு 1:3).

ஒருமுறை ஒரு பௌத்தரிடம் மத விஷயங்களைப் பற்றி விவாதித்த ஒரு கிறிஸ்தவர்; கிறிஸ்தவத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்த பௌத்தர் இவ்வாறு பதிலளித்தார், “நம் போதனைகளுக்கு இடையே நிறைய ஒற்றுமைகள் இருக்கிறது. ஆனால், என்னுடைய நம்பிக்கையில் இல்லாத ஒன்று உங்கள் நம்பிக்கையில் இருப்பதை நான் காண்கிறேன், நான் என்ன செய்ய வேண்டும் என்பதை என் நம்பிக்கை எனக்கு சொல்கிறது. ஆனால் அதைச் செய்வதற்கான வல்லமையை அது எனக்குக் கொடுக்கவில்லை. *உங்களுடைய நம்பிக்கை அந்த வல்லமையைத் தருகிறது."*

***மகிமைப்படுதலில்.*** இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைப் போன்ற மகிமையான சரீரங்களை நாம் பெறும் எதிர்காலத்தை இது குறிக்கிறது. மேலும் இந்தப் புதிய சரீரமானது பாவம், துன்பம், மரணம் ஆகியவற்றிலிருந்து விடுப்பட்டதாக இருக்கும். இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது இவை அனைத்தும் நடந்தேறும். பிலிப்பியர்

3:20-21 இவ்வாறு கூறுகிறது, "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்."

இந்த மகிமையடைதல் நிகழும் வரை நமது இரட்சிப்பு பாதுகாப்பாக இருக்குமா என்று சந்தேகிக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையான விசுவாசிகள் மகிமையடையும் வரை தேவனுடைய வல்லமை அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் என்று பேதுரு நமக்கு நினைவூட்டுகிறார். 1 பேதுரு 1:5ல் நாம் "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" என்று வாசிக்கிறோம்.

***7. துன்மார்க்கரை நியாயந்தீர்ப்பதில்.*** ஆதியாகமம் 6-8, நோவாவின் காலத்தில், பொல்லாத உலகத்தை பெரு வெள்ளத்தின் மூலம் கடவுள் நியாயந்தீர்த்தபோது அவருடைய வல்லமை வெளிப்பட்டது. வெளிப்படுத்தல் 19-20 ஆம் அதிகாரங்கள் தேவன் தம்முடைய வல்லமையால், ஒரு நாள் சாத்தானையும், அவனுடைய தூதர்களையும், அவருக்கு எதிராகக் கலகம் செய்த அனைத்து அவிசுவாசிகளையும் எப்படி நியாயந்தீர்ப்பார் என்பதை விவரிக்கிறது. அந்த நியாயத்தீர்ப்பு அவர்கள் அக்கினிக் கடலில் தள்ளப்படுவதை விவரிக்கும் நித்திய அழிவின் இடமாகிய - நரகமாகும். அந்த நேரத்தில் அவருடைய வல்லமையை யாராலும் எதிர்க்க முடியாது - நோவா காலத்தில் வெள்ளத்தின் போது அவரது வல்லமையை யாராலும் எதிர்க்க முடியவில்லை.

மேலும், அவர்கள் அக்கினிக் கடலில் நித்திய வேதனையை அனுபவித்தாலும், அவர்களின் சரீரங்கள் அழியாது, அதிலும் தேவனின் வல்லமை வெளிப்படும். ஏன்? ஏனெனில் விசுவாசிகளுக்கு பரலோகத்திற்கு உகந்த சரீரங்களை கொடுப்பது போல் நரகத்திற்கு ஏற்ற சரீரங்களையும் அவர்களுக்கு கொடுப்பார். (வெளிப்படுத்தல் 20:12 நியாயத்தீர்ப்பு நாளில் பெரிய வெள்ளை சிங்காசனத்தின் முன் நிற்கும் அவிசுவாசிகள் அனைவரையும் குறிக்கிறது. இயேசுகிறிஸ்துவே, யோவான் 5:29 ல், தீமை செய்கிறவர்கள் தண்டனைக்கு எழுப்பப்படுவதைப் பற்றி கூறினார். எனவே, அவிசுவாசிகளும் நரகத்திற்கு ஏற்ற சரீரங்களைப் பெறுவார்கள்.)

***8. புதிய உலகத்தை உருவாக்குவதில்.*** வெளிப்படுத்தல் 21 மற்றும் 22 ஆகிய அதிகாரங்கள் தற்போதைய பிரபஞ்சத்தை அக்கினியால் அழித்து புதிய வானத்தையும் புதிய பூமியையும் உருவாக்கும் தேவனின் வல்லமையை விவரிக்கிறது. இந்த வகையில் தான் நாம் (அதாவது, எல்லா விசுவாசிகளும்) நித்திய நித்தியமாய் இந்த மகா தேவனின் முன்னிலையில் வாசஞ்செய்வோம்).

எனவே, குறைந்தது எட்டு வசனப் பகுதிகளில் தேவன் தமது வல்லமையை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். தேவனின் வல்லமையைப் பற்றிய அறிவு நம் அன்றாட வாழ்வில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை விவரிக்கும் முன்,

நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், தேவனின் வல்லமையைப் பற்றிய நமது புரிதல் மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளது. தேவ மனிதனாகிய யோபு இந்த வரம்பைப் புரிந்துகொண்டார். அதனால்தான், யோபு 26:6-13 ஆகிய வசனங்களில் தேவனின் அளவிட முடியாத வல்லமையை விவரித்த பிறகு, 26:14 ல் இவ்வாறு அறிக்கையிட்டார், “இதோ, இவைகள் அவருடைய கிரியையில் கடைகோடியானவைகள், அவரைக்குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம்; அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார்?” தேவனின் வல்லமையைப் பற்றிய நமது அறிவு எவ்வளவு வரையறுக்கப்பட்டுள்ளது!

இருப்பினும், கடவுளின் வல்லமை (மற்றும் அவருடைய பிற குணாதிசயங்கள்) பற்றிய முழுமையான அறிவு இல்லாமல் இருந்துவிடக்கூடாது. இந்த அறிவில் நாம் வளர தேவன் நமக்கு உதவ விருப்பங்கொள்ள வேண்டும். தேவனின் வல்லமையைப் பற்றிய இந்த அறிவைப் பெறுவதற்கு மூன்று குறிப்பிட்ட அம்சங்கள் பயனுள்ளதாக இருக்கும்.

## நாம் தேவனுக்கு செவிக்கொடுக்க வேண்டும்

சங்கீதம் 33:6-7ல் இவ்வாறு வாசிக்கிறோம், “கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும் அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது. அவர் சமுத்திர ஜலங்களைக் குவியலாகச் சேர்த்து, ஆழமான ஜலங்களைப் பொக்கிஷவைப்பாக வைக்கிறார்.” தேவன் சர்வ வல்லமையுள்ள படைப்பாளரானதால் நமது பதில் என்னவாக இருக்க வேண்டும் என்பதை பின்வரும் இரண்டு வசனங்கள் விவரிக்கின்றன: “பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக; உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும்.” (சங்கீதம் 33:8-9). பயமும் பிரமிப்பும் சரியான பதிலாக இருக்க வேண்டும். தேவன் பயப்படத்தக்கவரும், கனத்திற்குரியவருமானவர் - அற்பமானவர் அல்ல! அவருடைய கட்டளைகள் ஒவ்வொன்றிற்கும் முறுமுறுக்காமல் அல்லது கேள்வி கேட்காமல் கீழ்ப்படிய வேண்டும்.

பல அவிசுவாசிகள் தேவன் இருப்பதை மறுப்பதற்கான காரணம் இதுதான்: மறுப்பதன் மூலம், அவர்கள் யாரிடமும்-குறிப்பாக அவர்களைப் படைத்தவரிடம் கணக்கொப்புவிக்க வேண்டிய அவசியத்தை உணர வேண்டாம். மேலும் கணக்கொப்புவித்தல் இல்லை என்றால், நியாயத்தீர்ப்புக்கு பயம் இருக்காது. இதன் விளைவாக தாங்கள் விரும்பும் வழியில் வாழ முடியும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்! தேவனைப் படைப்பாளர் என்று ஒருவர் மறுக்கும் போது, அவர் நீதிபதி மற்றும் மீட்பர் போன்ற மற்ற எல்லா அம்சங்களும் அர்த்தமற்றவையாகிவிடுகிறது. அதனால்தான், தேவனை நீதிபதியாகவோ, அன்பானவராகவோ அல்லது மீட்பவராகவோ அல்லாமல், அவரைப் படைப்பாளராகக் கொண்டு (ஆதியாகமம் 1:1) நமது நற்செய்தி அறிவித்தலைத் தொடங்குவது அவசியம். நம்மைப் படைத்தவருக்குக் கணக்கொப்புவிக்க வேண்டிய அவசியமில்லை என்றால், நற்செய்தியைக் கட்டியெழுப்ப உறுதியான அடித்தளம் இல்லாமல் போய்விடும்.

## நாம் அவரைத் துதிக்க வேண்டும்

நம் பக்கத்தில் தேவன் இருந்தால் (நாம் அவருடைய பிள்ளைகளாக இருந்தால்), அவருடைய வல்லமைக்காக நாம் தொடர்ந்து அவரைப் போற்ற வேண்டும். அவருடைய வல்லமையான கரம் நித்திய மரணத்திலிருந்து நம்மை விடுவித்து, நித்திய ஜீவனுக்கு நேராக நடத்தியது. வரவிருக்கும் தம்முடைய கடுமையான கோபத்திலிருந்து அவர் நம்மை இரட்சித்து, பத்திரமாக நித்திய வீட்டிற்கு அழைத்துச் செல்வார். இந்த சத்தியமானது நிலையான துதியையும், ஆராதனையையும் வலியுறுத்துகிறது. எனவே, வேதத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் பாடலில் மோசே இப்படி துதிப்பதில் ஆச்சரியமில்லை.

> **யாத்திராகமம் 15:11-13 -** *"கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத் தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? நீர் உமது வலதுகரத்தை நீட்டினீர்; பூமி அவர்களை விழுங்கிப்போட்டது. நீர் மீட்டுக்கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே அழைத்து வந்தீர்; உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழிநடத்தினீர்."*

## நாம் அவரை விசுவாசிக்க வேண்டும்

லூக்கா 1:37 ல், காபிரியேல் தூதன் கன்னி மரியாள், மேசியாவைப் பெற்றெடுப்பாள் என்று வெளிப்படுத்தியதைப் பற்றி நாம் படிக்கிறோம், தேவனால் கூடாதது எதுவுமில்லை. அவரின் எந்த ஒரு வார்த்தையும் அல்லது வாக்குறுதியும் ஒருபோதும் நிறைவேறாமல் போகாது, ஏனென்றால் ஒரு சர்வ வல்லமையுள்ள தேவன் தமது அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றுவதை எதுவும் அல்லது யாராலும் தடுக்க முடியாது. தேவனைப் பற்றிய இந்த உண்மைகளை மரியாள் நம்பினாள். அதனால்தான் அவள் இவ்வாறு பதிலளித்தாள், "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" (லூக்கா 1:38). பூமிக்குரிய எதிர்வினைகளைச் சந்தித்தாலும், தேவனுடைய வாக்குறுதியை நிறைவேற்றும் வல்லமையை அவள் மறைமுகமாக நம்பினாள். யோசேப்பு உறவை முறித்துக்கொள்ள முயிற்சித்தபோதும், தேவன் தம் வார்த்தையினால் மரியாளைப் பாதுகாத்தார்!

மரியாளைப் போலவே, விசுவாச மனப்பான்மையுடன், தேவனின் வல்லமையானது நம் வாழ்க்கையின் சவால்களை சமாளிக்க போதுமானதென்று நாம் நம்ப வேண்டும். அந்த விசுவாசம் சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதாக அமைய வேண்டும். இந்த சர்வ வல்லமையுள்ள தேவன் தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் கைவிடாதவர் (எபிரேயர் 13:5) என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சங்கீதம் 62 ல் 11, 12 ஆகிய இருவசனங்களை சற்று சிந்தித்துப்பார்ப்போம்: "தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது என்பதே. கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர்." கிருபையானது வல்லமையுடன் இணைந்திருப்பதைக்

கவனியுங்கள். நம்மைப் போன்ற பாவிகளிடம் அன்பு காட்டாமல், தேவன் தமது வல்லமையை மட்டும் காட்டியிருந்தாரானால் நாம் எங்கே இருந்திருப்போம்? அல்லது தேவன் தமது அன்பை மட்டும் காட்டி, தமது வல்லமையை வெளிப்படுத்தாமல் இருந்திருந்தாரானால் நாம் எங்கே இருந்திருப்போம்? இரண்டு பண்புகளும் தேவனிடம் முழுமையாக உள்ளன. அதனால்தான் நாம் அவரை உறுதியாக பற்றிக்கொள்ள வேண்டும். அவர் நம்முடன் இருப்பதாகவும், பாதுகாப்பாக நித்திய வாசஸ்தலத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் உறுதியளித்திருக்கிறார். நம்மைப் படைத்து, பத்திரமாகத் தம் கரங்களில் வைத்திருப்பவரிடம் நம் ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்கலாம். “தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?” (சங்கீதம் 56:11).

எல்லா பாவச்சோதனைகளையும், பயத்தையும், அடிமைத்தனத்தையும் வென்று தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கான வல்லமை நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நாம் விசுவாசிப்போமாக (ரோமர் 6:18; 2 பேதுரு 1:3). இந்த நம்பிக்கையானது துதியாகவும், ஜெபமாகவும் மாறட்டும், பரிசுத்த ஆவியானவர் இந்த வல்லமையை நம் வாழ்வில் செயல்படுத்தும்படி நம்முடைய தேவனை தொடர்ந்து மன்றாடுவோமாக.

நீங்கள் ஒரு விசுவாசியாக இல்லாவிட்டால், இந்த தேவன் உங்களுக்கு எதிராக தமது வல்லமையை கட்டவிழ்த்து விடுகிறார் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். இந்தத் தேவனை எதிர்த்து வெற்றி பெறலாம் என்று நினைப்பது எவ்வளவு மதியீனம்! நான் உங்களை எச்சரிக்க விரும்புகிறேன், நியாயத்தீர்ப்பு வர இருக்கிறது. இந்த சர்வவல்லமையுள்ள தேவனிடமிருந்து நீங்கள் எவ்வாறு தப்பிக்க முடியும்? நோவாவின் காலத்தில் தேவனை பரிகசித்தவர்கள் அனைவரும் வெள்ளத்தில் இருந்து தப்பிக்க முடியாததுபோல், இப்போது தேவனை பரிகசிப்பவர்கள் யாவரும் அவரது நியாயத்தீர்ப்பிலிருந்து அக்கினிக்குத் தப்பிக்க மாட்டார்கள்.

லூக்கா 12:4-5 ல் இயேசு கிறிஸ்து இவ்வாறு எச்சரிக்கிறார், “என் சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள். நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலைசெய்தபின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.” இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் மட்டுமே தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிக்க முடியும். வரவிருக்கும் கோபாக்கினையிலிருந்து அவர் ஒருவரே உங்களை விடுவிக்க முடியும் (1 தெசலோனிக்கேயர் 1:10). சங்கீதம் 2:12-ல் உள்ள கடுமையான இந்த எச்சரிக்கையை மனதில் கொள்ளுங்கள், “குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.”

## கலந்துரையாடல் கேள்விகள்

1. **கடவுளு**டைய வல்லமையைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
2. கடவுளின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் உங்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம்?
3. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் ஜெப வாழ்க்கையில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
4. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் பிரசங்கங்களில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

## தியானம்/ மனப்பாடத்திற்கான வேத வசனம்

**1 நாளாகமம் 29:11** - *கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர், எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.*

## ஜெபம்

பிதாவே, நீரே சர்வ வல்லமையுள்ள தேவன். எல்லார் மேலும் நீர் இராஜரீகம் செய்கிறீர். எந்த நிலையிலும் உமது வல்லமையை விசுவாசிக்க எனக்கு உதவும். மக்களுக்குப் பயப்படுவதிலிருந்து என்னைக் காப்பாற்றும். மேலும் உமக்கு பயப்படவும், என் தேவைகள் அனைத்தையும் நீர் சந்திப்பீர் என விசுவாசிக்கவும் எனக்கு உதவும். ஆமென்!

## கடவுளின் பிரசன்னம்

*கடவுள், பரிபூரணத்துடன் எப்போதும் எல்லா இடங்களிலும் இருப்பதை அவருடைய பிரசன்னம் குறிக்கிறது.*

கடவுளின் இந்தப் பண்பை அவர் எங்கும் நிறைந்திருப்பவராக இறையியல் அறிஞர்கள் விவரிக்கிறார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் கடவுள் இல்லாத இடமே இல்லை என்பதை நமக்கு நினைவூட்டும் பண்புகளில் இதுவும் ஒன்று. நாம் எங்கு சென்றாலும் அங்கே அவர் இருக்கிறார். அவரிடமிருந்து நாம் மறைந்து கொள்ளவும் முடியாது; அவருக்கு மறைவாக எங்கேயும் ஓடி விடவும் முடியாது.

கடவுளுக்கு மறைவாக ஓடுவதைப் பற்றி பேசுகையில், இப்படி விளங்கிக் கொள்ளலாம். அமெரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில், வெப்பநிலை ஒற்றை இலக்கம் அல்லது அதற்கும் கீழே குறையும் போது நெடுஞ்சாலையில் நிறுத்தப்படும் வாகனங்களைச் சரிபார்க்கும் வழக்கம் ஒன்றுள்ளது. இந்த வழக்கம் எப்போதிலிருந்து பின்பற்றப்படுகிறது என்பதைப்பற்றிய ஒரு கதை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு கடுங்குளிர் காலை 3:00 மணியளவில், மொன்டானா மாநிலத்தின் ஒரு காவலராகிய ஆலன் நிக்சன் என்பவருக்கு, பெரும் நீரூற்றின் பக்கத்திலிருக்கும் சாலையில் கடும் பனியில் சிக்கிக்கொண்டிருந்த ஒரு கார் பற்றிய தகவல் வந்தது. அவர் அந்தக் காரைத் தேடிக் கண்டுபிடித்தார், ஆனால் காரின் இயந்திரம் இன்னும் இயங்கிக்கொண்டிருந்தது.*

*அந்த காவலர் காரின் கதவருகே சென்றபோது, ஒரு வயதான மனிதர் கிட்டத்தட்ட காலியான வோட்கா மதுபாட்டிலை அவருக்குப் பக்கத்து இருக்கையில் வைத்திருந்ததைக் கண்டார். காவலர் ஜன்னலைத் தட்டியதும் அந்த இருக்கையில் இருந்த மனிதர் எழுந்துவிட்டார். பின்பக்கக் கண்ணாடியில் சுழலும் விளக்குகள் பொருத்தப்பட்ட கார் இருப்பதையும், அதற்கு அருகில் காவலர் நிற்பதையும் பார்த்து அந்த நபர் பீதியடைந்து, தனது காரை வேகமாக இயக்க முற்பட்டார்.*

*காரின் வேகமானி மணிக்கு 20, 30, 40, பின்னர் 50 மைல்களைக் காட்டியது, ஆனால் அது இன்னும் பனியில் சிக்கிக்கொண்டு, சக்கரங்கள் சுழன்று கொண்டிருந்தன. நகைச்சுவை உணர்வு கொண்ட அந்தக்காவலர், வேகமாக காரோடு இணைந்து ஓடுவது போல பாசாங்கு காட்டினார். காவலர் தன்னை*

> *பின் தொடர்வதாக நினைத்து அந்த பெரியவர் மனம் சோர்ந்து போனார். இது இப்படியே-30 வினாடிகள் நீடித்தது, அதற்கு பின்னர் காவலர், "நிறுத்து!" என கத்தினார். அந்த மனிதர் காரின் இயந்திரத்தை நிறுத்தினார்.*
>
> *வடக்கு டகோட்டாவைச் சேர்ந்த அந்த மனிதர் கைது செய்யப்பட்டார், மேலும் தான் மணிக்கு 50 மைல் வேகத்தில் ஓட்டிச் செல்லும் போது அந்த காவலர் தன்னை விட வேகமாக எவ்வாறு ஓடியிருப்பார் என்று நினைத்து சிறையில் அவர் ஆச்சரியமடைந்திருக்கக் கூடும் என்பதைச் சொல்ல தேவையில்லை.*

சங்கீதம் 139:7-12ல் உள்ள தாவீதின் வார்த்தைகளை இந்தக் கதை நமக்கு நினைவூட்டுகிறது, "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்." முழு பிரபஞ்சத்திலும் கடவுளின் பிரசன்னத்திலிருந்து தப்பிக்க எந்த இடமும் இல்லை என்று தாவீது வலியுறுத்தியுள்ளார்.

புதிய ஏற்பாடும் இதே சத்தியத்தை அறிவிக்கிறது. அத்தனே பட்டணத்தில் நாத்திக தத்துவஞானிகளுக்கு அவர் ஆற்றிய உரையில், கடவுளைத் தேடும்படி அவர்களை வலியுறுத்துகையில், பவுல் இவ்வாறு கூறினார், "ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (அப்போஸ்தலர் 17:27-28). எனவே, கடவுள் எல்லா இடங்களிலும் எப்போதும் இருக்கிறார் என்பது வேதத்தின் வழியாகத் தெளிவாகிறது. *இயல்நிலை (transcendent) கடந்த*, அதாவது, படைப்புக்கு மேலான கடவுள் அதன் உள்ளுமிருக்கிறார் (*immanent),* அதாவது, அவரது படைப்புகளில் இருக்கிறார். ஏசாயா 57:15ஆம் வசனம் இந்த இரண்டு கருத்துக்களையும் ஒன்றாக இணைக்கிறது: "நித்தியவாசியும் பரிசுத்தர் [இயல்நிலை கடந்த] என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன் [அதாவது, இயல்நிலை தன்மை] அவர் பரலோகத்தில் அமர்ந்திருந்தாலும், அவருடைய படைப்பிலும் உள்ளார். மிக முக்கியமாக, அவர் பரிசுத்த ஆவியின் ஆள்தத்துவமாக அவருடைய பிள்ளைகளுக்குள்ளும் இருக்கிறார். இது எவ்வளவு ஆச்சரியமான உண்மை!

எங்கும் நிறைந்திருக்கும் கடவுளின் பண்பு ஒரு நடைமுறை அர்த்தத்தில் நம் அனைவரிலும் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைப் பார்ப்பதற்கு முன், கடவுளின் சர்வ வியாபம் பற்றிய மூன்று தவறான கருத்துக்களை சுருக்கமாக காண்பது நல்லது.

***1. சர்வ வியாபம் என்பது கடவுள் ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் பகுதி பகுதியாக மட்டுமே இருக்கிறார் என்று அர்த்தமல்ல.*** கடவுள் ஆவியானவர். இந்த இடத்தில் அவர் இருக்கிறார், அந்த இடத்தில் அவர் இல்லை என்று பகுத்துப் பிரிக்க முடியாது. கடவுள் தமது முழு ஆள்தத்துவத்தோடு எல்லா இடங்களிலும் இருக்கிறார். அவர் பகுக்கப்பட முடியாதவர். இடம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் கடவுளை இடத்தால் மட்டுப்படுத்த முடியாது. 1 இராஜாக்கள் 8:27 ல் சாலொமோன், "இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே" என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்.

சிஸ்டமேடிக் தியாலஜி (முறையான இறையியல்) என்ற புத்தகத்தில், வெய்ன் க்ரூடெம் பின்வருமாறு எழுதுகிறார்:

> *கடவுள் எல்லாத் திசைகளிலும் எல்லையற்ற தூரம் பரந்து விரிந்து இருக்கிறார், அதனால் அவர் ஒரு வகையான இடத்தில் இருக்கிறார் என்று நினைத்து விடக்கூடாது. கடவுள் என்பவர் நமக்குத் தெரிந்தபடி பிரபஞ்சத்திலுள்ள ஒரு பெரிய பகுதி என்று நாம் கற்பனைச் செய்யக்கக்கூடாது. இந்தக் கருத்துக்கள் அனைத்தும் கடவுளின் இருப்பை, அவர் வெறுமனே ஒரு மிகப் பெரிய உயிரினம் போல இடஞ்சார்ந்த சொற்களில் அடைத்து விடும். மாறாக, அளவு அல்லது இடப் பரிமாணங்களின் அடிப்படையில் கடவுளைப் பற்றி நினைப்பதைத் தவிர்க்க வேண்டும். கடவுள் விண்வெளியிலும் அளவு மற்றும் இட பரிமாணங்கள் இல்லாமல் இருப்பவர். உண்மையில், கடவுள் பிரபஞ்சத்தை உருவாக்குவதற்கு முன்பு, எந்த பொருளும் கிடையாது, ஆனாலும் அவர் இருந்தார். அவர் எங்கே இருந்தார்? "எங்கே" என்று நாம் சொல்லக்கூடிய இடத்தில் அவர் இல்லை, ஆனால் அவர் இருந்து கொண்டேயிருந்தார்! இந்த உண்மை, விண்வெளியில் மனிதர் சாதித்ததைக் காட்டிலும் அல்லது உருவாக்கப்பட்ட எந்தப் பொருளைக் காட்டிலும் முற்றிலும் வித்தியாசமானவர் என்பதை நமக்கு உணர்த்துகிறது. நாம் கற்பனை செய்வதை விட மிகவும் வித்தியாசமானவராகவும், மிகப் பெரியவராகவும் அவர் இருக்கிறார்.*[1]

***2. எங்கும் நிறைந்திருப்பவர் என்பது கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார் என்றோ, எல்லாம் கடவுள் என்றோ அர்த்தப்படுத்தாது.*** கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்றாலும், ஒவ்வொரு சிறிய பொருளிலும் கடவுள் இருக்கிறார் என்று அர்த்தமல்ல. அது தான் பல தெய்வ கோட்பாடுகளைக் கொண்ட மதங்களின் பின்னணியில் உள்ள கருத்தாக இருக்கிறது. எல்லாமே கடவுள், அதாவது அவர் இருக்கும் எல்லாப் பொருளும் கடவுள் என்று பல தெய்வ வழிபாட்டாளர் நம்புகிறார். மாறாக, கடவுள் தமது படைப்பில் எல்லா இடங்களிலும் இருக்கிறார், ஆனால் அவரது படைப்பிலிருந்து வேறுபட்டவர் என்றும் வேதம் கூறுகிறது.

***3. எங்கும் நிறைந்திருப்பது கடவுள் எல்லா இடங்களிலும் ஒரே நிலையில் இருக்கிறார் என்று அர்த்தமல்ல.*** உதாரணமாக, நீதிமொழிகள் 15:29ல், "கர்த்தர் துன்மார்க்கருக்குத் தூரமானவர், ஆனால் அவர் நீதிமான்களின் ஜெபத்தைக் கேட்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது. "கர்த்தர் துன்மார்க்கருக்கு தூரமாயிருக்கிறார்" என்ற கூற்று, அவர்களை ஆசீர்வதிக்கவில்லை என்று அர்த்தம் தரக் கூடியதாகும். அவர்களுடைய

பாவங்கள் தேவனை அவர்களிடமிருந்து பிரித்துவிட்டன (ஏசாயா 59:2). இருப்பினும், "அவர் நீதிமான்களின் ஜெபத்தைக் கேட்கிறார்" என்ற கூற்று, அவர்களை ஆசீர்வதிக்க அவர் அருகில் இருக்கிறார் என்று அர்த்தப்படுத்துகிறது.

மற்றொரு உதாரணமாக நரகத்திலிருக்கும் கடவுளின் பிரசன்னத்தைக் கூறலாம், இது பரலோகத்திலிருந்து வேறுபட்டது. நரகத்தில், அவிசுவாசியைத் தண்டிக்க கடவுள் இருக்கிறார் (2 தெசலோனிக்கேயர் 1:9). இருப்பினும், பரலோகத்தில், விசுவாசிகளை ஆசீர்வதிக்க அவர் இருக்கிறார் (வெளிப்படுத்தல் 21:1-3). எனவே, கடவுள் ஒரு பகுதியில் இருப்பதை விட மற்றொரு பகுதியில் அதிகமாக இருக்கிறார் என்று சொல்வது தவறாக இருந்தாலும், அவர் பரலோகத்தில் ஒரு *தனித்துவமாக* இருக்கிறார் என்று சொல்வது தவறாக இருக்காது - அதாவது, நரகத்தில் அவருடைய மகிமை வெளிப்படுவதை விட பரலோகத்தில் அதிகம் வெளிப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கடவுள் மற்ற இடங்களை விட பரலோகத்தில் தமது பிரசன்னத்தை *முழுமையாக* வெளிப்படுத்துகிறார்.

கடவுள் எங்கும் நிறைந்திருப்பதைப் பற்றிய மூன்று மேற்கூறிய தவறான கருத்துகளின் தெளிவுகளுடன், கடவுளின் இந்தப் பண்பு குறைந்தபட்சம் நான்கு வழிகளில் நடைமுறையில் எவ்வாறு பயனளிக்கிறது என்பதைப் பார்ப்போம்.

### 1.இது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

சங்கீதம் 16:11-ல், கடவுளுடைய பிரசன்னம் தாவீதிற்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது: "ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." "நாம் பரலோகத்தில் இருக்கும்போது மட்டுமே முழுமையான மகிழ்ச்சியை அனுபவிப்போம் என்றாலும், வரவிருக்கும் முழுமையான மகிழ்ச்சியின் அனுபவத்திற்கான நம்பிக்கையில் நாம் வாழும் போது, நமது தற்போதைய வாழ்க்கையிலும் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும். நாம் ஒருபோதும் தனிமையில் இல்லை, நமது கடவுள், பிரபஞ்சத்தின் இராஜா, இப்போதும், எப்போதும், என்றென்றும் நம்முடன் இருக்கிறார் என்ற சத்தியத்தால் நம் மனம் நிறைந்திருக்கும்போது, பெரும் சோதனைகளின்போதும், மிகுந்த மகிழ்ச்சியை அனுபவிப்போம். இந்த அடிப்படை சத்தியத்தை மறப்பது மகிழ்ச்சி இல்லாத வாழ்க்கைக்கு வழிநடத்தி, சோர்வையும், கவலையையும் அளித்துவிடும். எனவே, நம்முடைய பரலோகத் தகப்பன், அவருடைய பிள்ளைகளாகிய நம்மோடு என்றென்றும் இருக்கிறார் என்று நினைவில் வைத்துக்கொள்வதை வழக்கமாக்கிக் கொள்ளக்கடவோம்.

### 2. இது மிகுந்த ஆறுதலைத் தருகிறது.

கலங்கிய ஆத்துமாவுக்கு ஆறுதல் தரக்கூடிய செய்தி இதை விட வேறு எதுவும் இருக்க முடியாது. கடவுள் எப்போதும் நம்முடன் இருக்கிறார்; இந்த சத்தியம், கடந்த கால விசுவாசிகளுக்கு உதவியதைப் போல, கடினமான சூழ்நிலையிலும் கடவுளுக்குக் கீழ்ப்படிய நமக்கு உதவுகிறது. இந்த சத்தியத்தை வெளிப்படுத்தும் சில வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**சங்கீதம்** 23:4 - *நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.*

**மத்தேயு** 28:20 - *இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.*

**அப்போஸ்தலர்** 18:9-10 - *இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்.*

**எபிரெயர்** 13:5 - *நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.*

"மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் நான் உன்னுடன் இருக்கிறேன் - ஆகையால், நீ பயப்படாதே" என்ற வாக்குறுதியானது ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை கடவுள் தம்முடைய பிள்ளைகளுக்கு தரும் ஒரு நிலையான நினைவூட்டலாகும்! கடுமையான சோதனைகளை எதிர் கொண்ட சந்தர்ப்பங்களை நாம் நினைவுகூரலாம், அச்சமயம் எல்லாமே இருளாகத் தோன்றியிருக்கலாம், ஆனாலும் நம் இருதயங்களில் மிகுந்த சமாதானத்தை அனுபவித்தோம். அதன் காரணம் என்ன? "நான் எப்போதும் உன்னுடன் இருக்கிறேன்." “நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை!” என்ற கடவுளின் வாக்குறுதியை நாம் விசுவாசத்தினால் பற்றிக்கொண்டோம். கடுமையான சோதனைகளை எதிர்கொண்டு, சரியான உறக்கமில்லாமல் நிலையான பயத்தோடு கொந்தளிப்பில் இருந்தது போன்ற அந்த சந்தர்ப்பங்களையும் நாம் நினைவு கூரலாம். அதற்கு காரணம் என்ன? ஒருபோதும் நம்மை விட்டு விலகுவதில்லை என்ற கடவுளின் வாக்குறுதியை நம்பத் தவறிவிட்டோம். அது கடவுளின் தவறு அல்ல, நம்முடைய தவறு!

*கடவுளுடைய சித்தம் நம்மை எங்கு வழிநடத்தினாலும், அவருடைய பிரசன்னம் நம்முடன் இருக்கிறது என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. அரண்மனையின் நடுவில் அவர் இல்லாததை உணர்வதை விட, காட்டின் நடுவில் அவரது பிரசன்னத்தை அனுபவிப்பது சிறந்தது! எனவே, சோதனையின் போது நாம் ஆறுதல் அடைய விரும்பினால், நாம் ஒருபோதும், ஒரு நொடி கூட தனியாக இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்!*

### 3. நம்பிக்கையுடன் ஜெபிக்க நமக்கு உதவுகிறது.

கடவுளின் பிரசன்னம் எப்பொழுதும் நம்முடன் இருப்பதை அறிந்திருப்பது, ஜெபத்தில் அவரை அணுகுவதற்கான ஒரு நிலையான காரணமாக அமைகிறது. அவர் எப்பொழுதும் நம் அருகில் இருப்பதால் நமக்கு செவி கொடுப்பார். சங்கீதம் 145:18 ஆம் வசனம் இவ்வாறு கூறுகிறது, “தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.” இந்த சத்தியமானது, “என்னால் அவரைப் பார்க்க

முடியாவிட்டாலும், அவர் என் அருகில் இருப்பதையும், என் அழுகையைக் கேட்பதையும் நான் அறிவேன். எனவே, நான் தொடர்ந்து ஜெபிப்பேன்! என்று நம்மை ஊக்குவிக்க வேண்டும்.

### 4. பாவச் சோதனையை எதிர்க்க நமக்கு உதவுகிறது.

கடவுள் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார் என்பதை அறிந்திருப்பது சோதனையை எதிர்க்க ஒரு சக்திவாய்ந்த உந்துதலாகும். நம் செயல், நினைவு, நோக்கம் உட்பட அனைத்தும், கடவுளின் முன்னிலையில் செய்யப்படுகின்றன என்பதை இது நமக்கு உணர்த்துகிறது! நீதிமொழிகள் 15:3ஆம் வசனம் இவ்வாறு கூறுகிறது, "கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது." நீதிமொழிகள் 16:2 ஆம் வசனம் இவ்வாறு கூறுகிறது, "மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப்பார்க்கிறார்."

பொதுவாக, பெற்றோர்கள், ஆசிரியர், நம் துணைவர், நண்பர்கள், முதலாளி, போன்றோர் யாரும் பார்க்காத போது நாம் பாவம் செய்கிறோம். மேலும் நாம் தவறு செய்வதை யாரேனும் கண்டுபிடித்துவிட்டால் சங்கடப்படுவோம். இருப்பினும், நீங்களும் நானும் புரிந்துகொண்டு, தொடர்ந்து நினைவில் வைத்துக் கொள்ளவேண்டியது என்னவென்றால், நாம் செய்யும் ஒவ்வொரு பாவமும், நம் ஒவ்வொரு எண்ணமும், பரிசுத்தமான கடவுளின் முன்னிலையில் செய்யப்படுகிறது. எனவே பாவத்தை எதிர்க்கும் வாய்ப்புகள் அதிகம்! யோபுவின் பரிசுத்த வாழ்வின் இரகசியங்களில் ஒன்று, யோபு 31:4 அது "அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ?" என்று கூறுகிறது. கடவுளின் பிரசன்னத்தை அவர் எப்போதும் அறிந்திருந்தார். அதுவே அவரது நேர்மைக்குக் காரணமாக இருந்தது. யோபுவைப் போலவே, நாம் நினைக்கும் அல்லது செய்யும் எல்லாவற்றையும் கடவுள் காண்கிறார் என்பதை உணரும்போது, பாவத்தை எதிர்த்து நிற்க நாம் தயாராக இருப்போம். ஆகவே, கடவுள் எப்போதும் நம்முடன் இருக்கிறார் என்பதை நாம் அறிந்தால் நான்கு நன்மைகள் உள்ளன: அது மகிழ்ச்சியையும், ஆறுதலையும் தருகிறது, நம்பிக்கையுடன் ஜெபிக்க உதவுகிறது மற்றும் பாவத்திற்கான சோதனையை எதிர்க்க உதவுகிறது. எப்பொழுதும் நமக்கு உதவி செய்வதாக வாக்களித்திருக்கும் இந்த கடவுளை நம்பி சமாதானம் பெறுவோம். ஏசாயா 41:10ஐ போன்ற வசனங்களைத் தொடர்ந்து சிந்திப்போம், "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்."

நீங்கள் இரட்சிக்கப்பட்டவராக இல்லாவிட்டால், இந்த அறிவு எனக்கு எவ்வாறு பயனளிக்கும் என்று நீங்கள் வியப்படையலாம். இது ஒரு எச்சரிக்கை, உங்கள் பாவ வழிகளை விட்டுத் திரும்பி, அவரிடம் சரணடையும்படி கடவுள் உங்களை தம்முடைய இரக்கத்தினால் **எச்சரிக்கிறார்**. நியாயாதிபதியாக வரும் இந்தக் கடவுளிடமிருந்து நீங்கள் தப்பிக்க முடியாது. உங்கள் சுயநல வழிகளிலிருந்து நீங்கள் மனந்திரும்பவில்லை என்றால், வேதனையான விளைவை நித்தியத்திற்கும் நீங்கள் அறுவடை செய்வீர்கள். எனவே, உங்கள் பாவங்களை விட்டுவிட்டு கிறிஸ்துவிடம்

திரும்புங்கள். அவர் மட்டுமே பாவங்களுக்கு விலைக்கிரயம் கொடுத்து மரித்து உயிர்த்தெழுந்தார். உங்களை இரட்சிக்க அவரை அழையுங்கள். உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, அவரிடம் சரணடையுங்கள். அப்போது தான் நாம் முன்பு கண்ட விசுவாசிகளுக்குரிய மற்ற எல்லா நன்மைகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

## கலந்துரையாடல் கேள்விகள்

1. கடவுளுடைய பிரசன்னத்தைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது?
2. கடவுளின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் நீங்கள் என்ன விதமான வாழ்க்கை மாற்றங்களைச் செய்யலாம்?
3. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் ஜெபங்களில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?
4. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் சுவிசேஷப் பிரசங்கத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**ஏசாயா 41:10** - *நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.*

## ஜெபம்

*யெகோவா தேவனே, நீர் சிருஷ்டிகர்; நிலைநிறுத்துகிறவர்; எல்லாவற்றின் உரிமையாளர்; உமது பிரசன்னம் அல்லது கட்டுப்பாட்டிலிருந்து என்னால் தப்பித்துச்செல்ல முடியாது, அவ்வாறு செய்ய நான் விரும்பவில்லை... உலகத்தின் மீது மோகம் கொள்ளாமல் என்னை காத்தருளும். ஆறுதலை இழக்கும்போது மனதையும், இருதயத்தையும் தாங்கியருளும். மரணப் பள்ளத்தாக்கில் என்னை உயிர்ப்பித்து, பரலோகத்தின் சாயலை என்னில் உருவாக்கி, தேவதூதர்களும், மறைந்த பரிசுத்தவான்களும் அனுபவித்த ஆவியின் கனிகளை தருவீராக. ஆமென்!*

# கடவுளின் அறிவு

*கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகிய அனைத்தையும் ஒரே நித்திய செயலில் அறியும் கடவுளின் திறன்.*

கடவுளின் அறிவாற்றல் எனப்படும் கடவுளின் அறிவு, அனைத்தையும் அறிந்த அவரின் பண்புடன் கையாளப்படுகிறது. லத்தீன் மொழியில், "omni" "ஓம்னி" என்றால் "அனைத்தும்" மற்றும் "அறிவியல்" என்பது அதன் அசல் அர்த்தத்தில் "அறிவு" அல்லது "அறிதல்" என்று பொருள்படும். ஆர்தர் பிங்க் இவ்வாறு எழுதுகிறார்:

> *உண்மையான அனைத்து நிகழ்வுகளையும், அனைத்து உயிரினங்களையும், கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் போன்ற எல்லாவற்றையும் கடவுள் அறிந்தவர்.*

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கடவுள் எதையும் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை, அல்லது அவர் படிப்படியாக அனைத்தையும் அறிந்தவராக மாறவில்லை. எல்லாவற்றையும் பற்றிய அறிவு அவருக்கு இருந்தது, இருக்கிறது, எப்போதும் இருக்கும் (யோபு 37:16). மிக மோசமான செயல்கள் உட்பட எதுவுமே அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதில்லை, மேலும் எதுவும் அவருடைய கவனத்திலிருந்து தப்புவதுமில்லை.

## கடவுளின் அறிவு நடக்கும் மற்றும் நடக்கவிருக்கும் நிகழ்வுகளுக்கும் நீள்கிறது.

என்ன நடந்தது, என்ன நடக்கும், இன்னும் என்ன நடக்கக்கூடும் என்பதை கடவுள் அறிவார். மத்தேயு 11:21ல் இயேசுகிறிஸ்து, "கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்." கோராசினிலும் பெத்சாயிதாவிலும் இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களைத் தீரு மற்றும் சீதோனியர்கள் பார்த்திருந்தால் மனந்திரும்பியிருப்பார்கள் என்று இயேசுகிறிஸ்து உறுதியாகக் கூறினார். அது என்ன நடந்தது என்பதைப் பற்றிய வெறும் அறிவு அல்ல. மாறாக, என்ன நடந்திருக்கக்கூடும் என்பதைப் பற்றிய அறிவு. அதுதான் கடவுளின் அறிவாற்றலின் மேன்மை.

கடவுளின் சர்வ ஞானத்தை விவரிக்கும் வேதத்தின் மிகவும் பிரபலமான பகுதி சங்கீதம் 139:1-6 மற்றும் வசனங்கள் 15-16 ஆகும், இவ்வசனங்கள் இவ்வாறு கூறுகிறது, "

கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்ட போது என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது." நம்மை மிகவும் நுணுக்கமாக அறிந்த ஒரு கடவுளைப் புரிந்துகொள்வது உண்மையில் வரையறுக்கப்பட்ட நமது புரிதலுக்கு அப்பாற்பட்டது! அது மட்டுமல்லாமல், பறவைகள் மற்றும் நட்சத்திரங்கள் போன்ற தம்முடைய பிற படைப்புகளைப் பற்றியும் கடவுள் அறிந்திருக்கிறார். சங்கீதம் 147:4-5 ஆகிய வசனங்கள் இவ்வாறு கூறுகிறது, "அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார். நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்; அவருடைய அறிவு அளவில்லாதது." சங்கீதம் 50:11ல் "மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிவேன்; வெளியில் நடமாடுகிறவைகள் எல்லாம் என்னுடையவைகள்" என்று கடவுள் கூறுகிறார். நடக்கவிருக்கும் நிகழ்வுகளின் அடிப்படையில் கடவுள் எதிர்காலத்தையும் அறிவார். அவருடைய வார்த்தையின்படி நிறைவேறின பல தீர்க்கதரிசனங்கள் இந்த சத்தியத்தை நமக்குக் கற்பிக்க வேண்டும் (எ.கா., ஏசாயா 7:14 ல் முன்னறிவிக்கப்பட்ட கன்னிப் பிறப்பு, மத்தேயு 1:18-25 ல் நிறைவேறியது, மற்றும் இயேசுகிறிஸ்து பெத்லகேமில் பிறப்பார் என்று மீகா 5:2 ல் முன்னறிவிக்கப்பட்டது லூக்கா 2:4-7 ல் நிறைவேறியது). "சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவை" (வெளிப்படுத்தல் 1:1) போன்ற எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி பேசும் வெளிப்படுத்தல் புத்தகம் உட்பட, வேதத்தில் பல பகுதிகளில் கடவுள் வெளிப்படுத்தியதை அவர் நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்தை நமக்கு அளிக்க வேண்டும்.

## இயேசுகிறிஸ்துவின் சர்வ ஞானம்

இயேசுகிறிஸ்துவும் கூட இந்தப் பண்பைத் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்தி, தெய்வீகத்தை வெளிப்படுத்தினார். திமிர்வாதத்தால் பாதிக்கப்பட்ட ஒருவரின் பாவம் மன்னிக்கப்பட்டதை தேவதூஷணம் செய்ததாகக் குற்றம் சாட்டிய பரிசேயர்களை அவர் இவ்வாறு கண்டிப்பதை நாம் வாசிக்கிறோம், "இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன? (மத்தேயு 9:4). சர்வ அறிவாற்றல் கடவுளுக்கு மட்டுமே உரியது; இயேசுகிறிஸ்து அவர்களின் எண்ணங்களை அறிந்திருந்தபடியால், அவரும் தெய்வீகமானவர்! ஆனால் லூக்கா 2:52-ஆம் வசனம் இப்படி கூறுகிறது, இது "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்."

இயேசுகிறிஸ்து ஏற்கனவே எல்லாம் அறிந்தவராக இருந்தால் ஏன் ஞானத்தில் விருத்தியடைய வேண்டும்? இங்கே ஞானத்தில் வளரும் கருத்து இயேசுகிறிஸ்துவின் மனிதத்தன்மையை குறிக்கிறது.

இயேசுகிறிஸ்து பூரணமான கடவுளாக இருந்தாலும் (யோவான் 1:1,14), அவர் மனித இயல்பை எடுத்துக் கொண்டபோது (பிலிப்பியர் 2:6-8), அவரது மனிதத்தன்மையில், அனைத்து பகுதிகளிலும் மனித வளர்ச்சியின் இயல்பான செயல்முறைக்கு தம்மை ஒப்புக்கொடுத்தார். பின்னர், கடவுள்-மனிதனாக தமது ஊழியத்தில் கூட, எப்போதும் தமது தெய்வீக பண்புகளை பிதாவின் விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்தினார் (யோவான் 6:38). உதாரணமாக, சில சந்தர்ப்பங்களில் அவருடைய சர்வ ஞானம் வெளிப்பட்டது (மத்தேயு 9:4; யோவான் 2:23-25) மேலும் சில சந்தர்ப்பங்களில், அது பயன்படுத்தப்படவில்லை (மாற்கு 13:32) ஏனெனில் அது பிதாவின் சித்தமாக இருந்தது.

### பரிசுத்த ஆவியானவரின் சர்வ ஞானம்

பரிசுத்த ஆவியானவரும் எல்லாம் அறிந்தவர். 1 கொரிந்தியர் 2:11ல் பவுல் இவ்வாறு எழுதுகிறார், “மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.” கடவுளின் எல்லா எண்ணங்களையும் அறிந்த பரிசுத்த ஆவியானவரும் தெய்வீகமானவர் என்பதை இந்த வசனம் தெளிவாகக் காட்டுகிறது! **ஆக, திரித்துவத்தின் மூன்று நபர்களும் எல்லாம் அறிந்தவர்கள்**. அவர்களுக்கு மறைவானது ஒன்றுமில்லை. இந்த சத்தியங்கள் விசுவாசிகளுக்கு குறைந்தது நான்கு வழிகளில் பயனுள்ளதாக இருக்கும்.

### 1. கடவுளை அதிகமாய் துதிப்பதற்கு வழிநடத்துகிறது

கடவுள் எல்லாம் அறிந்தவர் என்பதை அவிசுவாசிகள் விரும்பாவிட்டாலும், இந்த பண்பிற்காக விசுவாசிகள் பயந்து கடவுளைப் போற்ற வேண்டும். கருவிலேயே நம்மைப் பற்றி அறிந்தவர், நம் தலைமுடி அனைத்தையும் அறிந்தவர், நாம் என்ன நினைக்கிறோம் என்பதை அறிந்தவர், நம் வாயிலிருந்து என்ன வார்த்தைகள் வெளிவருகின்றன என்பதை அறிந்தவர், நட்சத்திரங்களின் எண்ணிக்கையை அறிந்தவர், விலங்குகளின் எண்ணிக்கையை அறிந்தவர், மற்றும் பல, " இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது" (சங்கீதம் 139:6) என்று கூறி தேவனைப் போற்றின தாவீதுடன் இணைந்து இந்த அறிவு நம்மை தேவனைத் துதிக்கச் செய்ய வேண்டும். இந்த அற்புதமான கடவுளை அறிய கண்கள் திறக்கப்பட்ட நாம், எல்லாவற்றையும் பற்றிய அவருடைய அறிவிற்காக அவரைத் தொடர்ந்து துதிக்க வேண்டும்.

### 2. கலங்கிய ஆத்துமாவிற்கு பெரும் ஆறுதலைத் தருகிறது

***உபத்திரவங்களில்.*** லூக்கா12:7-ல்” அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்” என்று கூறப்பட்டுள்ளது, இது என்ன ஒரு ஆறுதலான சிந்தனை! சங்கீதம் 56:8 - ஆம் வசனம் நம் கண்ணீரின் பதிவைக் கூட கடவுள் கணக்கில் வைத்திருப்பதை நமக்கு நினைவூட்டுகிறது. எனவே, பெரிய

சோதனைகளின் போதும், நாம் கவலைப்படக் கூடாது, ஏனென்றால் நமக்கு என்ன நடக்கும் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார்.

***தோல்விகளில்.*** கடவுளின் சர்வ ஞானத்தை அறிந்துகொள்ளுதல் உபத்திரவங்களில் மட்டுமல்ல, தோல்விகளிலும் அதாவது நாம் பாவத்தினூடாக கடந்துபோகும் சமயத்திலும் ஆறுதலைத் தருகிறது. அது எப்படி? நாம் படைக்கப்படுவதற்கு முன்பே, கடவுள் ஆரம்பம் முதல் இறுதி வரை அனைத்தையும் அறிந்திருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, எந்த நிகழ்வும் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தினாலும், கடவுளை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதில்லை. சங்கீதம் 103:14, "நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்" என்று கூறுகிறது. சில சமயங்களில் நாம் தோல்வியடைவோம் என்பது அவருக்குத் தெரியும். நாம் மீண்டும் மீண்டும் தோல்வியடைவோம் என்பதை அறிந்திருந்தும், கடவுள் இன்னும் நம்மை இரட்சிப்பதற்கும் இறுதிவரை பாதுகாப்பதற்கும் தமது உறுதியான அன்பை நம்மீது வைத்துள்ளார், அது மிகவும் ஆறுதல்! அதனால்தான் நாம் நமது பாவங்களையும், தோல்விகளையும் கடவுளுக்கு முன்பாக தாராளமாக வெட்கப்படாமல் அறிக்கையிடுகிறோம். நம் தோல்விகள் அவருக்கு நிச்சயமாக தெரியும். ஆயினும், நம் அறிக்கையிடுதலில் உண்மையாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார், அதனால் நாம் அவருடைய ஆறுதலை அனுபவிக்க முடியும் (1 யோவான் 1:9). கூடுதலாக, கடவுள் நம் பாவங்களின் பதிவையும் பராமரிப்பதில்லை. சங்கீதம் 130:3-4 ஆகிய வசனங்கள் இவ்வாறு கூறுகின்றன, "கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலைநிற்பான், ஆண்டவரே. உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு." கடவுள் நம் பாவங்களின் பதிவை வைத்திராதது மட்டுமல்லாமல், நாம் அவருடைய பிள்ளைகளாக மாறும்போது, "இனி (நம்) பாவங்களை நினைவுகூர மாட்டேன்" (எபிரெயர் 8:12; ஏசாயா 43:25) என்றும் உறுதியளிக்கிறார். தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். கடவுள் நம் பாவங்களை மறந்துவிடும்போது அவருக்கு நினைவாற்றல் பிரச்சினைகள் இருக்காது; நியாயத்தீர்ப்பு நாளில் கடவுள் அவைகளை மீண்டும் கணக்குக் கேட்க மாட்டார்.

பேதுரு மூன்று முறை கர்த்தரை மறுதலித்துப் பாவம் செய்தான், ஆனால் உயிர்த்தெழுந்த கர்த்தர் மூன்றாவது முறை அவனை, "நீ என்னை நேசிக்கிறாயா?" என்று கேட்டபோது பேதுருவின் பதில் என்னவாக இருந்தது? "ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" (யோவான் 21:17). பேதுருவுடைய மன்றாட்டின் அடிப்படை என்ன? அது இயேசுகிறிஸ்துவின் சர்வ ஞானமாகும்! வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பேதுரு, "ஆண்டவரே, நீர் என் இருதயத்தை அறிந்திருக்கிறீர். நான் உம்மை மறுதலித்தேன், பயத்தில் தான் அதை செய்தேன் என்பதை நீர் அறிவீர். உள்ளுக்குள், உம்மைத் தொடர்ந்து நேசிக்கிறேன், அது உமக்குத் தெரியும் என்று சொல்லிக் கொண்டிருந்தான். மேலும் அன்பான இயேசுகிறிஸ்து அவனை தாராளமாக மன்னித்து மீண்டும் ஊழியத்தில் அமர்த்தினார். இப்போது, அது அவனுக்கு ஆறுதல்!

சில சமயங்களில், நம்முடைய பாவத்திற்காக மன்னிப்பு கேட்ட பிறகும், நம் இருதயம் நம்மைக் குற்றஞ்சாட்டுகிறது. தொடர்ந்து நம்மை நாமே குற்றஞ்சாட்டிக் கொள்கிறோம்.

அவ்வாறு செய்வதை நாம் தவிர்க்க வேண்டும்! யோவானின் உறுதிமொழியை நினைவில் வையுங்கள், “நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்.” (1 யோவான் 3:20). எல்லாவற்றையும் பற்றிய கடவுளின் அறிவில் ஆறுதல் பெறுங்கள்.

## 3. நம்பிக்கையுடன் ஜெபிக்க நம்மை ஊக்குவிக்கிறது

மத்தேயு 6:8 ல், கடவுளின் சர்வ ஞானத்தை நமக்கு நினைவுப்படுத்தி, ஜெபிக்கும்படி நம்முடைய கர்த்தர் நம்மை ஊக்குவிக்கிறார்: "உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்..." இப்போது, இந்த வார்த்தைகளின் காரணமாக ஜெபத்தைப் பற்றி சிலருக்கு கேள்விகள் எழலாம். நமக்கு என்ன தேவை என்று கடவுள் ஏற்கனவே அறிந்திருப்பதால், நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்? என்று வியப்படையக்கூடும். எல்லாவற்றையும் அறிந்த கடவுள் எல்லாவற்றின் முடிவையும் நிர்ணயிக்கும் அதேவேளையில், அவர் வழிமுறைகளையும் நிர்ணயிக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கடவுள் ஏற்கனவே திட்டமிட்டதை நிறைவேற்றுவதற்கான வழிகளில் ஜெபமும் ஒன்றாகும். மேலும், ஜெபம் என்பது அவரைச் சார்ந்திருப்பதை வெளிப்படுத்தும் ஒரு அம்சமாகும். அதனால்தான், கடவுளின் கிருபையின் சிங்காசனத்தை அணுகும்போது, அவர் நம்முடைய எல்லாத் தேவைகளையும் முழுமையாக அறிந்திருக்கிறார் என்பதை அறிந்து, நாம் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்க முடியும்!

## 4. அதிக பொறுப்புணர்வை உருவாக்குகிறது

நீதிமொழிகள் 5:21 ஆம் வசனம் இவ்வாறு கூறுகிறது, "மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார்." அதே புத்தகம்15:3-ஆம் வசனம் இவ்வாறு கூறுகிறது, " கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது." இந்த வசனங்கள் பெரும் பொறுப்புணர்வைக் கொண்டு வருகின்றன. *நாம் நினைக்கும் அல்லது செய்யும் எதுவும் கடவுளின் அறிவிலிருந்து மறைக்கப்படுவதில்லை*. வேதம் இவ்வாறு கூறுகிறது, தேவன் நம்முடைய எல்லா வழிகளையும் அறிந்திருப்பது மட்டுமல்லாமல், *எல்லா நோக்கங்களையும் அறிந்திருக்கிறார்*. எனவே, நாம் என்ன செய்கிறோம் என்பது மட்டுமல்ல, ஏன் அதைச் செய்கிறோம் என்பதும் முக்கியம்! இதை பவுல் 1 கொரிந்தியர் 4:5ல் தெளிவுபடுத்துகிறார், “ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்.” இந்த வசனம் எல்லா வகையான தீர்ப்புகளையும் தடை செய்யவில்லை, ஆனால் மற்றவர்களின் இருதய நோக்கங்களைக் குறித்துத் தீர்ப்பதைத் தடுக்கிறது. ஒவ்வொரு இருதயத்தின் நோக்கங்களையும் நாம் அறிய

முடியாது, அது கடவுளுக்கு மட்டுமே தெரியும், எதிர்காலத்தில் அவர்களின் நோக்கங்களை அவர் நியாயந்தீர்ப்பார்.

உதாரணமாக, நாம்:

- வெளிப்புறமாக தாழ்மையாகவும், உள்ளத்தில் பெருமையாகவும் இருக்கலாம்.
- வெளிப்புறமாக தாராள மனப்பான்மையுடனும், உள்ளத்தில் பேராசை உள்ளவர்களாகவும் இருக்கலாம்.
- நம் சேவை வெளிப்புறமாக தன்னலமற்றதாகவும், உள்நோக்கி நமது சுயநல நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதாகவும் இருக்கலாம்.
- வெளிப்புறமாக அன்பாக இருந்தாலும் உள்ளத்தில் பொறாமை மற்றும் வெறுப்பு நிறைந்து காணப்படலாம்.

இந்த பட்டியல் நீண்டுக்கொண்டே போகலாம். இதன் அடிப்படைச் செய்தி இதுதான்: *வெறும் வெளிப்புற செயல்கள் கடவுளை ஏமாற்றாது. அவர் இருதயங்களைப் பார்க்கிறார், நோக்கங்களை ஆராய்கிறார்.* நாம் வெளிப்புறமாக, "விசுவாசியாக", மற்றவர்கள் நம்மைப் பாராட்டும் வண்ணம் ஒன்றைச் செய்யலாம். ஆனாலும் நமது உண்மையான நோக்கங்களை கடவுள் அறிவார்! அதனால்தான் முகமூடி அணிவது பயனற்றது - வேண்டுமென்றே மாய்மாலம் செய்வதால் பயனில்லை. உங்களையும் என்னையும் "எல்லாம் அறிந்த" கடவுள் அறிவார்!. சில செயல்களுக்காக மற்றவர்கள் நம்மைக் குறை கூறினாலும், நமது நோக்கங்கள் தேவனுக்கு பிரியமானதாக இருந்தால், மக்கள் அறியாவிட்டாலும், கடவுள் அறிந்திருப்பதில் நாம் ஆறுதல் பெறலாம். கடவுளின் பரிபூரண அறிவு, அதிக பொறுப்புணர்வைக் கொண்டுவருகிறது. எனவே, கடவுளின் சர்வ ஞானத்தை அறிந்துகொள்வதன் மூலம்/பிரதிபலிப்பதன் மூலம் விசுவாசி அனுபவிக்கக்கூடிய நான்கு நன்மைகள் உள்ளன:

1. கடவுளை அதிகமாக துதிக்க நம்மை வழிநடத்துகிறது.
2. கலங்கிய ஆத்துமாக்களுக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது.
3. நம்பிக்கையுடன் ஜெபிக்க நம்மை ஊக்குவிக்கிறது.
4. அதிக பொறுப்புணர்வை உருவாக்குகிறது.

இருப்பினும், விசுவாசி அல்லாதவர்களுக்கு, கடவுளின் ஏகாதிபத்தியம் (அதாவது, கடவுள் எதைச் செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்கிறார்) என்ற பண்பு, அவர்களை மிகவும் எரிச்சலூட்டும் பண்புகளில் ஒன்றாக இருக்கிறது. ஏனெனில், இயல்பிலேயே, நல்ல விஷயங்களில் கூட, நம்மைப் பற்றி நாம் அறிந்திருப்பதைவிட வேறு யாரும் அதிகம் அறிந்து கொள்வதை நாம் விரும்புவதில்லை. தீய செயல்கள் என்று வரும்போது, இந்தப் பண்புக்கு எதிர்ப்பு இன்னும் அதிகமாக இருக்கும். உதாரணமாக, விபச்சாரம் இனி அப்படி அழைக்கப்படாமல், "தனிப்பட்ட விவகாரம்" என்று அழைக்கப்படுகிறது, அதாவது இது மற்றவர்களின் விவகாரம் அல்ல. அத்தகைய சிந்தனை கடவுளை நோக்கியும் நீண்டுள்ளது: கடவுளே, என் வாழ்க்கையில்

ஊடுருவாதேயுங்கள். நான் செய்வது எனது தனிப்பட்ட விவகாரம் என்று கூறிவிடுகிறோம்.

இயேசுகிறிஸ்து இந்த மனப்பான்மையை யோவான் 3:19 ல் தெளிவாகக் கூறினார், "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாய் இருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது..." பாவம் நிறைந்த மனிதகுலம் தங்களின் செயல்கள் வெளிப்படுவதை விரும்புவதில்லை: இது என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை. என்னை சங்கடப்படுத்தாதீர்கள் அல்லது என் செயல்களைப் பற்றி என்னை வருத்தப்படுத்தாதீர்கள். என்னை சும்மா விடுங்கள் என கூறுகிறது. எல்லாம் அறிந்த கடவுளை எவரேனும் அறிவிக்க வந்தால், ஒரு நாள் நாம் அவருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டுமே என்று மிகப்பெரிய எதிர்வினை காட்டுகிறார்கள்.

இந்த மாதிரியான அணுகுமுறை ஒரு புதிய விஷயம் அல்ல. ஏசாயாவின் காலத்தில் நீதிமான்கள் துன்மார்க்கரை எதிர்கொண்டபோதும் இது இருந்தது: "இவர்கள் கலகமுள்ள ஜனங்களும், பொய்பேசுகிற பிள்ளைகளும், கர்த்தருடைய வேதத்தைக் கேட்க மனதில்லாத புத்திரருமாயிருக்கிறார்கள். இவர்கள் தரிசனக்காரரை நோக்கி: தரிசனங் காணவேண்டாம் என்றும், ஞானதிருஷ்டிக்காரரை நோக்கி: யதார்த்தமாய் எங்களுக்குத் தரிசனஞ்சொல்லாமல் எங்களுக்கு இதமான சொற்களை உரைத்து, மாயமானவைகளைத் திருஷ்டியுங்கள் என்றும், நீங்கள் வழியை விட்டு, பாதையினின்று விலகி, இஸ்ரவேலின் பரிசுத்தரை எங்கள் முன்பாக இராமல் ஓயப்பண்ணுங்கள் என்றும் சொல்லுகிறார்கள்!" (ஏசாயா 30:9-11). கடவுளை எங்களுக்கு நினைவுபடுத்தாதீர்கள். எங்களை விட்டு விடுங்கள். நாங்கள் செய்வது எங்களது தனிப்பட்ட விவகாரம் என்பதே அவர்களின் அணுகுமுறையாக இருந்தது.

அமெரிக்கப் பாதுகாப்பு வட்டாரத்தின் பழைய பிரபலமான பாடல் வரிகள் இதோ: "நீங்கள் இழுக்கும் ஒவ்வொரு மூச்சிலும், நீங்கள் செய்யும் ஒவ்வொரு அசைவிலும், நீங்கள் வைக்கும் ஒவ்வொரு அடியிலும், நாங்கள் உங்களைப் பார்த்துக் கொண்டிருப்போம்." ஆனால் நம் ஒவ்வொரு எண்ணத்தையும் ஒவ்வொரு அசைவையும் கடவுள் பார்த்துக் கொண்டிருப்பது பாவிகளுக்கு ஒரு கலகச் சிந்தனை. ஆனாலும் அவர் சர்வ ஞானியாக இருப்பதை யாராலும் தடுக்க முடியாது. அவர் நம் விருப்பத்திற்கு தலைவணங்கமாட்டார் அல்லது நமக்கு இடமளிக்கும் வகையில் அவருடைய வழிகளை மாற்றமாட்டார். அவர் நம்மைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார், மேலும் நம்மைக் கணக்குக் கேட்பார்; நாம் அவரிடமிருந்து தப்பிக்க முடியாது. எபிரெயர் 4:13 ஆம் வசனம் இவ்வாறு கூறுகிறது, "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய, கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்." அனைத்தையும் அறிந்த, அனைத்தையும் பார்க்கும் கடவுளுக்கு முன்பாக "எல்லாம் வெளியரங்கமாக உள்ளது" என்பதை கவனியுங்கள்!

இருட்டில் நாம் என்ன செய்கிறோம் என்பது அவருக்குத் தெரியும். சங்கீதம் 139:11-12 ஆகிய வசனங்கள் இவ்வாறு கூறுகிறது, "இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும்,

இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.'" தானியேல் 2:22 ல் இவ்வாறு படிக்கிறோம், "அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்." "தீமைக்கு சதி" செய்தத் தலைவர்களை (எசேக்கியேல் 11:2) கடிந்துகொள்ளும் போது, " உங்கள் மனதில் எழும்புகிறதை நான் அறிவேன்." (11:5) என்று கடவுள் கூறுகிறார், இதன் மூலம் அவருடைய சர்வ ஞானத்தை அவர்களுக்கு நினைவூட்டுகிறார்.

இதற்கு மாறாக, சங்கீதம் 10:11 மற்றும் 13-ன்படி, பொல்லாதவர்கள் இப்படி நினைக்கிறார்கள்: "தேவன் அதை மறந்தார் என்றும், அவர் தம்முடைய முகத்தை மறைத்து, ஒருக்காலும் அதைக் காணமாட்டார் என்றும், தன் இருதயத்திலே சொல்லிக் கொள்ளுகிறான்." ஆனால் கடவுள் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை மறந்து விடுகிறார்கள். யோபு 34:21 ஆம் வசனம் இவ்வாறு கூறுகிறது, "அவருடைய கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கிறது; அவர்களுடைய நடைகளையெல்லாம் அவர் பார்க்கிறார்." தங்கள் பாவங்களைக் கடவுள் காணாதவராக இருக்கிறார் என்று வாழ்பவர்களைப் பற்றி கடவுள் என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள்:

> **எண்ணாகமம் 32:23** - *உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்.*
>
> **எரேமியா 16:17** - *என் கண்கள் அவர்களுடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கிறது; அவைகள் என் முகத்துக்கு முன்பாக மறைந்திருக்கிறதில்லை; அவர்களுடைய அக்கிரமம் என் கண்களுக்கு முன்பாக மறைவாயிருக்கிறதுமில்லை.*
>
> **ஓசியா 7:2** - *அவர்கள் பொல்லாப்பையெல்லாம் நான் நினைவில் வைத்திருக்கிறேன் என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் சிந்திக்கிறதில்லை.*

ஒரு நாள், எல்லாவற்றையும் பார்க்கும் இந்த கடவுள் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பாத மக்களை நியாயந்தீர்ப்பார். இவை அவருடைய கடுமையான எச்சரிக்கை வார்த்தைகள்: "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்" (எரேமியா 17:10; வெளிப்படுத்தல் 2:23-ஐயும் பார்க்கவும்).

பாவத்தின் தண்டனையை ஏற்றுக்கொண்ட தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைக்கிறவர்களின் பாவங்களை மறந்துவிடுவேன் என்று வாக்குத்தத்தம் செய்யும் அதே தேவன், இன்னொரு எச்சரிக்கையையும் விடுக்கிறார். தம்முடைய குமாரனாகிய இயேசுவை விசுவாசியாதவர்களுக்கு இறுதி நியாயத்தீர்ப்பை அளிக்கும்போது நித்திய அக்கினிக் கடலில் அவர்களைத் தள்ளுவார்.

எனவே, இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதவர்கள் எதிர்கொள்ளும் உண்மை இதுதான். கடவுளின் அறிவாற்றல் உங்கள் எல்லா பாவங்களையும் வெளிச்சத்திற்கு கொண்டு

வரும். அத்தகைய முடிவில் இருந்து தப்பிப்பதற்கான ஒரே வழி, உங்கள் பாவங்களிலிருந்து விலகி, இயேசுகிறிஸ்துவை மட்டுமே விசுவாசிப்பதுதான். அதை இன்றே செய்வீர்களா?

## கலந்துரையாடல் கேள்விகள்

1. கடவுளின் அறிவைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது?
2. கடவுளின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் நீங்கள் என்ன விதமான வாழ்க்கை மாற்றங்களைச் செய்யலாம்?
3. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் ஜெபங்களில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?
4. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் சுவிசேஷப் பிரசங்கத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**நீதிமொழிகள் 5:21** - *மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப்பார்க்கிறார்.*

## ஜெபம்

ஆண்டவரே, நீர் எல்லாம் அறிந்தவர். உமக்கு மறைவானது ஒன்றும் இல்லை, அதில் ஆறுதல் அடைய எனக்கு உதவும். அதே சமயம், நான் சோதிக்கப்படும் போது அந்த சத்தியத்தை நினைத்தருளும். நான் ஏன் செய்கிறேன் என்ற என் நோக்கங்களை நீர் அறிவீர். மற்றவர்களை ஏமாற்றும் முகமூடியை அணிவதிலிருந்து என்னைக் காப்பாற்றும், அந்த செயல்பாட்டில், என்னை நானே முட்டாளாக்குகிறேன். உள்ளும் புறம்பும் தூய்மையான வாழ்க்கையை வாழ எனக்கு உதவும். ஆமென்!

# பிதாவாகிய கடவுள்

*கடவுள் பிதா என்பது, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதினால் வரும் புத்திர சுவீகாரம்.*

கடவுளை அறிவது (*Knowing God,* J.I. Packer) என்ற தனது புத்தகத்தில், பிதாவாகிய கடவுளைப் பற்றி ஜே.ஐ. பாக்கர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

> *ஒருவர் கிறிஸ்தவத்தை எவ்வளவு நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் அறிய விரும்பினால், கடவுளுடையப் பிள்ளை என்பதைப் பற்றியும், கடவுள் பிதாவாக இருக்கிறார் என்பதைப் பற்றியும் அவர் கொண்டிருக்கும் எண்ணத்தை அறிய வேண்டும். அவருடைய ஆராதனை, ஜெபங்கள், மற்றும் முழு வாழ்க்கைக் கண்ணோட்டத்தை தூண்டுகிறதும், கட்டுப்படுத்துகிறதுமான சிந்தனை இதுவாக இல்லாவிட்டால், அவர் கிறிஸ்தவத்தை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம். கிறிஸ்து போதித்தவைகளும், பழைய ஏற்பாட்டை விட புதிய ஏற்பாட்டை சிறந்தவைகளாக மாற்றுகிறவைகளும், யூதர்களை விட கிறிஸ்தவர்களை வேறுபிரிப்பவைகளும் பிதாவாகிய கடவுள் என்ற அறிவில் சுருட்டப்பட்டுள்ளது. 'பிதா' என்பது கடவுளின் கிறிஸ்தவப் பெயர்.*

கடவுளின் பண்புகளைப் படிப்பதன் முழு நோக்கமும் அவரைப் பற்றிய நமது அறிவில் வளர வேண்டும் என்பதால் - கடவுள் அவருடைய பண்புகளால் மட்டுமே அறியப்படுகிறார் - கடவுள் விசுவாசிகளின் தகப்பன் என்ற இந்த அறிவு அவரை நன்றாகப் புரிந்துகொள்வதற்கு அவசியம். எனவே இந்த அதிகாரத்தில், கடவுளை நம் தகப்பனாகப் பார்ப்போம்.

இயேசுகிறிஸ்து யார் எனும் விவரிப்போடு யோவான் தனது நற்செய்தியைத் தொடங்குகிறார் (யோவான் 1:1-5). யோவான் ஸ்நானகன் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சிக்கொடுக்கையில் யூத மக்களில் (யோவான் 1:6-13). பெரும்பான்மையானவர்கள் அவரை நிராகரித்தாலும், சிலர் அவர் மீது விசுவாசம் வைத்தனர். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அந்த ஒரு சிலரை, யோவான் இந்த உறுதியான வார்த்தைகளால் ஆறுதல்படுத்தினார்: "அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:12). இயேசுகிறிஸ்துவின் மீது மட்டும் வைத்திருக்கும் விசுவாசத்தின் காரணமாக நாம்

கடவுளின் பிள்ளைகளாக இருக்கிறோம் - அதுவே வாக்குத்தத்தம், அதுவே கடவுளை நம் தகப்பன் என்று அழைப்பதற்கான உண்மையான உறுதிப்பாடு. கடவுள் நம்மைத் தம் பிள்ளைகளாக்கி அதன் மூலம் அவரை "பிதா" என்று அழைக்கும் இந்த சிலாக்கியத்தை வேதம் "சுவீகாரம்" என்று சித்தரிக்கிறது. சுவீகாரம் என்பது நாம் அனுபவிக்கக்கூடிய மிக உயர்ந்த பாக்கியம்- நீதிமானாகுதலை விடவும் மேலானது.

நாம் பாவ மன்னிப்பு பெறும் தருணத்தில் நீதிமானாக்கப்படுகிறோம். மரண தண்டனைக்குட்பட்ட நாம் அப்போது தான், பரிசுத்த கடவுளின் திருமுன் நிற்கிறோம், பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதால், பாவத்திலிருந்தும், குற்ற மனசாட்சியிலிருந்தும் விடுவிக்கப்படுகிறோம். *மற்ற எல்லா ஆசீர்வாதங்களுக்கும் நீதிமானாகுதல் அடித்தளமாக இருக்கிறது,* ஏனெனில் அது நமது முதன்மையான ஆவிக்குரியத் தேவையைப் பூர்த்தி செய்கிறது. இருப்பினும், அது மிக உயர்ந்த பாக்கியம் அல்ல. ஏன்? நீதிமானாக்கப்படுதல் என்பது கடவுளை ஒரு நீதிபதியாகக் கருதும் சட்டப்பூர்வமான சொல்லாகும். இது கடவுளின் பரிசுத்த சட்டத்தின் முன் நம் நிலைப்பாட்டுடன் தொடர்புடையது. மறுபுறம், சுவீகாரம் என்பது ஒரு குடும்ப சிந்தனையின் பின்னணியைச் சார்ந்தது. சுவீகாரத்தின் மூலம், கடவுள் நம்மை அவருடைய குடும்பத்தின் உறுப்பினர்களாக ஆக்குகிறார். அது கடவுளைத் தந்தையாகக் கருத வைக்கிறது. எனவே, நெருக்கம், பாசம் மற்றும் பெருந்தன்மை ஆகியவற்றை அது குறிக்கிறது. "நீதிபரராகிய கடவுளுக்கு முன் நீதிமானாக இருப்பது ஒரு பெரிய விஷயமாக இருந்தாலும், தந்தையாகிய கடவுளால் நேசிக்கப்படுவது மிகவும் உயர்ந்தது." இந்தக் கருத்தை நன்றாகப் புரிந்துகொள்ள பின்வரும் விளக்கம் நமக்கு உதவக்கூடும்: யாரோ ஒருவன் உங்கள் மகனைக் கொன்றதால், மரண தண்டனையை எதிர்நோக்கி சிறையில் தள்ளப்படுகிறான் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் அந்த மனிதனை மன்னித்து, விடுதலை செய்கிறீர்கள் என்றால் அதுவே ஒரு பெரிய விஷயமாக இருக்கும். ஆனால், நீங்கள் அத்துடன் நிறுத்தாமல், சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, அவனைத் தத்தெடுத்து, உங்கள் சொந்த மகனாக ஆக்கி, உங்கள் மகனுக்கு இருந்த அனைத்து உரிமைகளையும் அவனுக்கு வழங்குகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம்! அது எப்படி இருக்கும்? மக்கள் உங்களை பைத்தியம் என்று கூட அழைப்பார்கள்! ஆனால் அது உங்கள் அன்பின் உயரத்தையும், உங்கள் விலைமதிப்பற்ற மகனைக் கொன்றவன் அனுபவிக்கப்போகிற ஆசீர்வாதத்தையும் காண்பிக்கிறதல்லவா!. இது நீதிமானாக்குதல் மற்றும் சுவீகாரம் ஆகியவற்றை பற்றிய வேதத்தின் சித்தரிப்பாக இருக்கிறதல்லவா? கடவுள் நம்மை நீதிமானாக்குதலோடு நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. நீதிமானாக்குதலெனும் ஆசீர்வாதத்தைத் தந்த பிறகு, அவர் நமக்கு இன்னும் ஒர் சிறந்த ஆசீர்வாதமாக சுவீகாரத்தைக் கொடுக்கிறார், இதன் மூலம் நம்மை அவருடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் ஆக்குகிறார்! அதனால்தான் சுவீகாரமானது நீதிமானாகுதலை விட விவரிக்க முடியாத ஆசீர்வாதமாக இருக்கிறது. சுவீகாரத்தின் மூலம் தான் கடவுளின் தந்தைத்துவம் மிகத் தெளிவாக வெளிப்படுவதைக் காண்கிறோம்.

கடவுளைப் பிதாவாக கூறும் குறிப்புகள் பழைய ஏற்பாட்டில் கூட உள்ளது (யாத்திராகமம் 4:22; சங்கீதம் 103:13; ஏசாயா 64:8). இருப்பினும், புதிய ஏற்பாட்டில்,

சுவீகாரத்தைப் பற்றிய கருத்து நமக்கு இன்னும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. சுவீகாரம் என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை ஐந்து முறை காணப்படுகிறது - அதன் அனைத்து நடவடிக்கைகளும் பவுலின் நிருபங்களில் காணப்படுகிறது (ரோமர் 8:15, 23, 9:4; கலாத்தியர் 4:5; எபேசியர் 1:5). பவுலின் வாசகர்கள் இந்தக் கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பார்கள், ஏனென்றால் பழைய ஏற்பாட்டு காலத்தை விட (பார்வோனின் மகள் மோசேயை சுவீகாரம் செய்திருப்பினும்), புதிய ஏற்பாட்டு காலங்களில் சுவீகாரம் மிகவும் பரவலாக இருந்தது. ரோமப் பேரரசின் காலத்தில், செல்வந்தர்கள் தகுந்தவர்களாகக் கருதும் இளைஞர்களை தங்களுக்காகத் தத்தெடுப்பது பொதுவான நடைமுறையாக இருந்தது. இராயர்களில் பலர் இந்த நடைமுறையைப் பின்பற்றினர். இருப்பினும், கடவுள் நம்மை சுவீகரிப்பது மனித தத்தெடுப்பை விட வித்தியாசமானது மற்றும் உயர்ந்தது. கடவுள் நம்மை சுவீகரித்தது அவருக்கு ஒரு தேவை இருந்ததாலோ அல்லது நம்மில் ஏதாவது நன்மையைக் கண்டதாலோ அல்ல. எனினும், அவர் நம்மை சுவீகரித்தார், ஏனென்றால் அவர் தமது சுத்த அன்பினால் அவ்வாறு செய்யத் தெரிந்து கொண்டார் (எபேசியர் 1:4-5). அத்தகைய அன்பு மனதைக் கவரக்கூடியது! யோவான் 17:26ல், பிதா தம்மிடத்தில் வைத்த அதே அன்பு தம்மைப் பின்பற்றுகிறவர்களிடமும் இருக்க வேண்டுமென்பதே இயேசுகிறிஸ்துவின் விருப்பமாக இருந்தது: “நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும் படிக்கும், நானும் அவர்களிலிருக்கும் படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன்”. தெய்வீக குடும்பத்தில் வேறுபாடுகள் இல்லை. இயேசுகிறிஸ்து நேசிக்கப்பட்டதைப் போலவே நாமும் நேசிக்கப்படுகிறோம்! அப்போஸ்தலனாகிய யோவான், “நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்...!” என்று புகழ்ந்து போற்றுவதில் ஆச்சரியமில்லை. (1 யோவான் 3:1). அப்படிப்பட்ட அன்பு, நமக்கு சுவீகாரத்தைக் கொண்டுவந்து, குறைந்தபட்சம் நான்கு நடைமுறை நன்மைகளை விளைவிக்கிறது.

### 1. கடவுளை நம் தகப்பன் என்று அழைக்க உதவுகிறது

"*அப்பா*, பிதாவே" என்ற வார்த்தை, கடவுளை தம்முடைய பிதா என்று இயேசு கிறிஸ்து அழைக்கும்போது பயன்படுத்தப்பட்டது (மாற்கு 14:36). விசுவாசிகள் அவரை "அப்பா, பிதாவே" (கலாத்தியர் 4:6) என்று அழைக்கலாம், ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம் செய்யும் ஒரு மகிமையான புதிய உறவு நிறுவப்பட்டுள்ளது; நாம் அவரால் நேசிக்கப்படுகிறோம்; நன்கு கவனித்துக் கொள்ளப்படுகிறோம். நம் அற்புதமான பரலோகத் தகப்பனிடமிருந்து ஒருபோதும் பிரிக்கப்பட மாட்டோம்!

### 2. நமது ஜெப வாழ்க்கையை வளமாக்குகிறது

நாம் ஜெபிக்கும்போது கடவுளை "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்று அழைக்க இயேசுகிறிஸ்து கற்றுக் கொடுத்தார் (மத்தேயு 6:9). இந்த நெருக்கம் நம் பிதாவாகிய கடவுளை எல்லா விதமான வேண்டுதல்களுடனும் அணுக உதவுகிறது, ஏனென்றால், அவர் நம்மைக் கவனித்துக்கொள்கிறார். எனவே, நாம் கவலையிலிருந்து

விடுபடலாம்; குற்ற உணர்விலிருந்து விடுபடலாம். நம்முடைய எல்லா பாவங்களையும் நாம் அறிக்கையிடும் போது அவர் மன்னிக்கிறார். நம் அன்பான தகப்பன் எப்போதும் தம் பிள்ளைகளின் ஜெபங்களுக்கு தம்முடைய மகிமையின் புகழ்ச்சிக்காக கிருபையாக பதிலளிக்கிறார்.

### 3. எதிர்காலத்திற்கான நமது நம்பிக்கையை பலப்படுத்துகிறது

ரோமர் 8:23-ல் பவுல் இவ்வாறு கூறுகிறார், "அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.." மேலும், அவர் இவ்வாறு தொடர்கிறார்: "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்" (ரோமர் 8:24-25). சாராம்சத்தில், மகிமைப்படுத்தப்பட்ட சரீரங்களைப் பெறும்போது மட்டுமே சுவீகாரம் முழுமையடையும் என்று பவுல் கூறுகிறார். இந்த சத்தியமானது நிகழ்கால வாழ்வின் சோதனைகளைத் தாங்கும் உறுதியான விசுவாசத்தால் நம்மை நிரப்ப வேண்டும். 2 கொரிந்தியர் 1:22-ன்படி, தேவன் "அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்." "அச்சாரம்" என்ற வார்த்தையானது, எதிர் காலத்தில் மகிமைப்படுத்தப்பட்ட நிலையில் கர்த்தருடன் நித்தியமாக இருப்போம் என்ற சத்தியத்தைக் குறிக்கிறது. இந்த சத்தியம் நம் நம்பிக்கையை பலப்படுத்துகிறது.

### 4. கடவுளின் சிட்சையை எதிர்கொள்ள உதவுகிறது

எபிரெயர் 12:5-6 கூறுகிறது, "அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்தி மதியை மறந்தீர்கள்." இந்த நிருபத்தின் எழுத்தாளர் தொடர்ந்து இவ்வாறு குறிப்பிடுகிறார், "நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" (எபிரெயர் 12:7). சாராம்சத்தில், நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதால், கடவுள் நம்மை சிட்சிக்கிறார். இது ஒரு நல்ல விஷயம்! நாம் அவருடைய பிள்ளைகள் என்பதை இது காட்டுகிறது! இந்த சிட்சையின் இறுதி இலக்கு எபிரெயர் 12:10-ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்."

சுவீகாரத்தின் இந்த நான்கு நன்மைகளின் வெளிச்சத்தில் (மேலும் சேர்க்கப்படலாம்) நமது பதில் என்னவாக இருக்க வேண்டும்? அது எளிமையானது. நாம் "கடவுளைப் பிதாவாக ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் பின்பற்ற வேண்டும்." நாம் அவருடைய குமாரர், குமாரத்திகள் என்றால், குடும்ப ஒற்றுமையைக் காட்ட வேண்டும்! பிதா

பரிசுத்தமானவர் என்பதால் நாமும் பரிசுத்தத்தைத் தொடர வேண்டும் (1 பேதுரு 1:15-16). பிதா நம்மை நேசிப்பது போல நாமும் நேசிக்க வேண்டும் (எபேசியர் 5:1-2), நம் சத்துருக்களையும் கூட நேசிக்க வேண்டும் (மத்தேயு 5:44-45). நாம் ஒரே குடும்பம் என்பதை கடவுளின் பிள்ளைகள் ஒருபோதும் மறக்கக்கூடாது. அதனால்தான் கசப்பு, பொறாமை, சண்டை ஆகியவற்றிற்கு இடமில்லை. ஒருவருக்கொருவர் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்கிறோம். கடவுள் நமக்கு எவ்வளவு அன்பான தந்தையாக இருக்கிறார்! என்ன ஒரு மகிமையான எதிர்காலம் நமக்கு இருக்கிறது! இந்த சத்தியங்கள் நம் தகப்பனைப் பின்பற்றுவதற்கான நமது தீர்மானத்தை பலப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்!

நீங்கள் கடவுளின் பிள்ளையாக இல்லாவிட்டால், அவரை உங்கள் தகப்பன் என்று அழைக்க முடியாவிட்டால், இந்த பிரச்சினையை தீர இன்று ஒரு நல்ல நாளாக இருக்கட்டும். உங்கள் பாவங்களை விட்டு விலகி, இயேசுகிறிஸ்துவை உங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்வதின் மூலம் நீங்கள் அவருடைய குடும்பத்தில் தத்தெடுக்கப்படலாம். மீண்டும் ஒருமுறை, யோவான் 1:12-ஐ உங்களுக்கு நினைவூட்டுகிறேன், "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது, கடவுளின் குடும்பத்தில் அவருடைய மகனாகவோ, மகளாகவோ நீங்கள் வரவேற்கப்படுவீர்கள். பின்னர் நீங்கள் சுவீகாரத்தின் அனைத்து நன்மைகளையும் அனுபவிக்கலாம்! தயங்க வேண்டாம். தயவு செய்து வாருங்கள். கடவுளின் குடும்பத்தில் அதிக பிள்ளைகளுக்கான இடம் உண்டு! மனித தகப்பன்மார்களுக்கு பலவீனங்கள் உள்ளன, அவர்கள் பெரும்பாலும் தோல்வியடைகிறார்கள். மாறாக, ஒரே பரலோக தகப்பன் - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவுக்கு பலவீனங்கள் இல்லை. அவர் உங்களை மறக்கவும் மாட்டார். அவர் உங்களை நித்திய அன்புடன் நேசிக்கிறார்!

## கலந்துரையாடல் கேள்விகள்

1. பிதாவாகிய கடவுளைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
2. கடவுளின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் நீங்கள் என்ன விதமான வாழ்க்கை மாற்றங்களைச் செய்யலாம்?
3. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் ஜெபங்களில் எவ்வகை தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
4. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் நற்செய்தி பிரசங்கத்தில் எத்தகையப் புரிதலை ஏற்படுத்தியிருக்கிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**ரோமர் 8:15 -** *அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், "அப்பா பிதாவே", என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.*

## ஜெபம்

பிதாவே, உம்மை எங்கள் பரலோகத் தகப்பன் என்று அழைக்கும் பெரும் பாக்கியத்தைக் கொடுத்திருக்கிறீர், இந்த இணக்கத்திற்கு நன்றி. எங்கள் ஆண்டவரும், இரட்சகருமான இயேசுவைப் போலவும், உமது பிள்ளைகளாகவும் வாழ எங்களுக்கு உதவும். நீர் எங்களை சிட்சிக்கும் அந்த நேரங்களை ஏற்றுக்கொள்ளும் மனத்தாழ்மையை எங்களுக்குத் தாரும். நீர் நேசிக்கிற அனைவரையும் சிட்சிக்கிறீர், எங்கள் நன்மைக்காகவும் உம் மகிமைக்காகவும் நீர் அதைச் செய்கிறீர் என்பதை நினைவில் கொள்ள எங்களுக்கு உதவும். ஆமென்!

# கடவுளின் அன்பு

*கடவுள் மனிதர்களின் தகுதியைப் பொருட்படுத்தாமல், அவர்களின் நன்மைக்காக நித்தியமாக ஈவுகளை கொடுப்பதைக் குறிக்கிறது.*

கடவுளின் அன்பு, அவருடைய பண்புகளில் அதிக பிரபலமானதும், அடிக்கடி விவாதிக்கப்படுகிறதுமான ஒன்றாகும். 1 யோவான் 4:8ல் "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று வாசிக்கிறோம். 1 யோவான் 4:16 லும் இப்படியே கூறப்பட்டிருக்கிறது. இவ்வசனங்களில் கடவுளிடம் அன்பு இருக்கிறது என்று கூறப்படாமல் கடவுள் அன்பாகவே இருக்கிறார் என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. அன்பு என்பது கடவுளின் பண்புகளில் ஒன்று மட்டுமல்ல; அது கடவுளின் இயல்புமாக இருக்கிறது. இரக்கம், நற்குணம், பொறுமை மற்றும் தயவு போன்ற கடவுளின் மற்ற பண்புக்கூறுகள் அவருடைய அன்பிலிருந்து தோன்றியதால், அன்போடு நெருங்கிய தொடர்புடையவையாகும். அவருடைய அன்பை நாம் எவ்வளவு அதிகமாகப் புரிந்துகொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நம் கலங்கிய இருதயங்கள் சமாதானத்தை அனுபவிக்கும், மேலும் அவர் மீதும், மற்றவர்களின் மீதும் நம் அன்பு அதிகரிக்கும். அந்த இலக்கை அடைய, இந்த பாடத்தில் கடவுளின் அன்பின் நான்கு முக்கிய குணாதிசயங்களை பார்த்து பின்னர், நம் வாழ்விற்கான நடைமுறை பயன்பாடுகளை ஆராய்வோம்.

## சிறப்பியல்பு #1: கடவுளின் அன்பு தன்னார்வமானது

நம்மை நேசிக்க வேண்டும் என்று எந்த நிர்பந்தமும் கடவுளுக்கு இல்லை. நாம் நேசிக்கப்படுவதற்கு தகுதியானவர்கள் என்பதால் தமது அன்பை நம்மீது வைக்கவில்லை. உண்மையில், இது நேர் எதிரானது. அவருக்கு எதிராகப் பெரும் பாவம் செய்த நாம் தகுதியற்றவர்கள். இருப்பினும், கடவுள், எந்த புற காரணிகளின் தாக்கமும் இல்லாமல், தம்முடைய அன்பை நம்மீது வைத்திருக்கிறார். 1 யோவான் 4:10 ல் இவ்வாறு வாசிக்கிறோம், "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்தார்." மேலும், அதே அதிகாரம 19 ஆம் வசனத்தில் இவ்வாறு வாசிக்கிறோம், "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்."

கடவுளின் தன்னார்வ அன்பானது புதிய ஏற்பாட்டின் சத்தியம் மட்டுமல்ல, பழைய ஏற்பாட்டிலும் இதை நாம் பார்க்கிறோம். உபாகமம் 7:7-8ல், தேவன், இஸ்ரவேலுக்கான தம்முடைய உடன்படிக்கை அன்பை அவர்களின் தகுதியின் அடிப்படையில் அல்ல,

மாறாக அவருடைய விருப்பத்தின் அடிப்படையில் இப்படி விவரிக்கிறார்: “சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள்பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்துகொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள்.கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்கவேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக்கொண்டார்.” எளிமையாகச் சொன்னால், கடவுள் இஸ்ரவேலை நேசித்தார், ஏனென்றால் அவர் அவர்களை தெரிந்தெடுத்த அடிப்படையில் நேசித்தார்.

### சிறப்பியல்பு #2: கடவுளின் அன்பு பரிசுத்தமானது

கடவுளின் அன்பு அவருடைய பரிசுத்தத்தை ரத்து செய்யாது. "கடவுள் அன்பாக இருக்கிறார்" (1 யோவான் 4:8) "கடவுள் ஒளியாக இருக்கிறார்" (1 யோவான் 1:5) அல்லது "கடவுள் நீதியுள்ள நியாயதிபதி" (சங்கீதம் 7:11). போன்ற அவருடைய மற்ற பண்புகளை குறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. அனைவருக்கும் அறிமுகமான வசனமாகிய யோவான் 3:16 ல், " தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை… தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.” என்ற சொற்றொடர், பாவத்திற்கான பரிகாரம் வழங்குவதை உள்ளடக்கிய விதத்தில் கடவுள் உலகத்தை நேசித்தார் என்று கூறுகிறது. கடவுளின் அன்பு பரிசுத்தமானது, அதாவது தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையிலும் கூட பாவத்தை இலகுவாக எடுத்துக்கொள்ள மாட்டார். எனவேதான் எபிரெயர் 12:6 இவ்வாறு கூறுகிறது, “கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.” அந்த வகையான சிட்சை சில சமயங்களில் நோய் மற்றும் மரணத்தையும் உள்ளடக்கியிருக்கலாம் (1 கொரிந்தியர் 11:30)! ஒரு புனிதமான அன்பு பாவத்தைக் கண் சிமிட்டும் நேரம் கூட ஏற்றுக்கொள்ளாது

ஒரு முறை செய்தித்தாளில் வெளிவந்த ஒரு சம்பவத்தைப் பார்ப்பது நல்லது. தங்கள் சிறுபிள்ளை அலமாரியில் இருந்து எதையோ எடுத்து வாயில் போட்டதைக் கண்டப் பெற்றோர், பிள்ளையை தூங்கவிடாமல் கன்னத்தைத் தட்டி, உடலை நான்கு மணி நேரம் உலுக்கிக்கொண்டிருந்தார்கள். அந்த குழந்தை தவறுதலாக பத்து தூக்க மாத்திரைகளை விழுங்கியதின் விளைவாக மருத்துவரின் ஆலோசனையின் பேரில் அப்படி செய்தனர். ஒரு சிறிய குற்றத்திற்கு ஒரு கொடூரமான தண்டனை போல் தோன்றினாலும். உண்மையில், அந்த குழந்தையை அப்படி செய்தால் தான் பாதுக்காக்க முடியும் என்ற அன்பின் அடிப்படையில் அப்படி செய்தனர்.

இதேபோல், கடவுள் நம்மை வழிநடத்தும் பாதையை நாம் எப்போதும் புரிந்துகொள்வதில்லை, ஆனால் அவருடைய தண்டனை எப்போதும் அன்பினால் பிறந்தது என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். கடவுள் காற்றின் கடினத்தன்மையை மாற்ற மாட்டார், மாறாக நம்மை அதில் வழிநடத்துகிறார்.

### சிறப்பியல்பு #3: கடவுடைய அன்பு தியாகம் நிறைந்தது

விலைக்கிரயம் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் கடவுளின் அன்பு அதை கொடுக்கிறது. மனித அன்பு பெரும்பாலும் உயர்ந்ததாக வகைப்படுத்தப்பட்டாலும் அவைகள் வெற்று செயல்களே; திருமண நாளில் பெரிய வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டாலும், அது துரதிர்ஷ்டவசமாக சில மாதங்கள் அல்லது ஆண்டுகளுக்குப் பிறகு கசப்பான விவாகரத்துகளில் முடிந்து போகிறது. ஒரு தியாகம் செய்ய வேண்டுமென்ற நிலைவரும்போது, மனித அன்பு பெரும்பாலும் வீழ்ச்சியடைந்துவிடுகிறது.

கடவுளின் அன்பு அப்படிப்பட்டதல்ல, அது தியாகம் நிறைந்தது. அவரின் தியாக அன்பின் மிக சிறந்த உதாரணம் சிலுவையில் தெளிவாகக் காணப்படுகிறது. இதை விட தெளிவான உதாரணத்தை வேதத்தில் வேறு எங்கும் நாம் பார்க்க முடியாது. உங்களையும், என்னையும் போன்ற பாவிகளுக்கு கடவுள் அவருடைய மிகச் சிறந்த அன்பின் அடையாளமாக தமது ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை கொடுத்திருக்கிறார். ரோமர் 5:6-8 ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம் "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." மேலும், யோவான் 3:16-ன் மிகவும் பரிச்சயமான இந்த வார்த்தைகளை நாம் எப்படி மறக்க முடியும்? " தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

தன் தாயால் பெரிதும் நேசிக்கப்பட்ட பிரான்ஸ் தேசத்து இளைஞன் ஒருவனின் கதை இது. இருப்பினும், அவன் மிகவும் பாவமான வாழ்க்கையைப் பின்பற்றினான். அவனை மேலும் மேலும் பாவத்திற்கு இழுத்துச் சென்ற ஒரு பொல்லாத பெண்ணால் அவன் மிகவும் ஈர்க்கப்பட்டிருந்தான். அன்பான தாய் அவனை அந்த பாவமான உறவிலிருந்து, மீட்டெடுக்க முயன்றாள், இது அந்த பெண்ணுக்கு அவன் தாயை வெறுக்க காரணமாக இருந்தது. இப்படியிருக்க, ஒர் இரவு, அந்த பெண் அவனை நன்றாக குடிக்க வைத்து, தன்னை உண்மையாக காதலிக்கவில்லை என்று குற்றம் சாட்டினாள். எனினும், தான் அவளை உண்மையாகவே நேசிப்பதாக கூறினான். தன்னை உண்மையாக நேசித்தால் தன்னிடமிருந்து அவனை பிரிக்க முயலும் தாயை விட்டு விலகி வர வேண்டும் என்று அவள் வற்புறுத்தினாள்.

கதை இவ்வாறு தொடர்கிறது, அந்த இளைஞன் அந்தப் பெண்ணின் வீட்டிலிருந்து தன் வீட்டிற்கு விரைந்து சென்று, உறங்கிக் கொண்டிருந்த தனது தாயை மிகவும் கொடூரமாக அடித்துக் கொன்று, அவளது இதயத்தை தனது காதலியிடம் கொண்டு சென்றான். தன் தாயின் இதயத்தில் ரத்தம் கொட்டியபடி காதலியின் வீட்டிற்கு ஓடியபோது, ஒரு கல் பட்டு, கால் இடறி தடுமாறி விழுந்தான். உடனே, இரத்தம் வழிந்த அந்த தாயின் இதயம், "என் மகனே, உனக்கு ஏதாவது காயம்பட்டுவிட்டதா?" என்று குரலெழுப்பியதுப் போன்றிருந்தது.

உங்களையும் என்னையும் போன்ற கொடூரமான பாவிகள் மீது கடவுள் காட்டும் தியாக அன்பும் இப்படித்தான் இருக்கிறது. கடவுளின் அன்பை சந்தேகிக்க நாம் தூண்டப்பட்டால், நாம் சிலுவையைப் பார்த்து, கடவுள் நம்மை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். நமக்காகத் தம்முடைய குமாரனைத் தந்தவர் நம்மை மறந்துவிடுவாரா? (ரோமர் 8:32). அவர் நம்மைக் கைவிடுவாரா? ஒருபோதும் அப்படி செய்ய மாட்டார்!

## சிறப்பியல்பு #4: கடவுடைய அன்பு நித்தியமானது

மனித அன்பு பெரும்பாலும் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டது, அது மேடும் பள்ளமும் நிறைந்தது. என் உணர்ச்சிகள் அதிகரிக்கும் போது, நான் உன்னை நேசிப்பேன். நான் மனச்சோர்வடைந்தால், நான் உன்னை விட்டு விலகுவேன். நீ என்னை நேசித்து என்னை ஒருபோதும் ஏமாற்றாமலிருந்தால், நான் உன்னை நேசிப்பேன். இல்லை என்றால் என்னால் உன்னை நேசிக்க முடியாது என்று அது கூறுகிறது.

கடவுளின் அன்பு அப்படிப்பட்டதல்ல. அவர் மனம் மாறுவதில்லை. அவருடைய அன்பு என்றென்றும் நிலைத்திருக்கும். வானங்கள் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே அவர் நம்மை நேசித்தார் (எபேசியர் 1:4-5). புதிய வானங்களும், புதிய பூமியும் படைக்கப்பட்ட பின்னரும் அவருடைய அன்பு நித்தியமாக நீடிக்கும். எரேமியாவின் மூலம் கடவுள் தாமே அறிவிக்கிறபடி இது ஒரு நித்திய அன்பு, “அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்” (எரேமியா 31:3). இந்த வசனம் குறிப்பாக இஸ்ரவேலுக்கான கடவுளின் தேர்ந்தெடுக்கப்பட்ட நித்திய உடன்படிக்கையின் அன்பைக் குறிக்கிறது என்றாலும், எல்லா காலத்திலுமுள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் நாம் அதை சட்டப்பூர்வமாகப் பயன்படுத்தலாம். ரோமர் 8:38-39 ல், பவுல் இவ்வாறு கூறுகிறார், “இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? (ரோமர் 8:36). மேலும் அவர் அந்த கேள்விக்கு இல்லை என்று பதிலளித்தார், அத்தகைய பிரிவினையை உருவாக்க முடியாத அனைத்து வல்லமைகளையும் பட்டியலிட்டார் (ரோமர். 8:35-39).

உண்மையில், அவருடைய அன்பு நிரந்தரமானது. இது என்ன ஆறுதலான சிந்தனை! நமக்கு நெருக்கமானவர்கள் மற்றும் அன்பானவர்கள் உட்பட உலகமே நம்மை வெறுத்தாலும், நிராகரித்தாலும், நாம் இதில் ஆறுதலடையலாம். நம்மை உண்டாக்கி, நமக்காக மரிக்கும்படி தம்முடைய குமாரனை அனுப்பிய பிரபஞ்சத்தின் இராஜா ஒருபோதும் நம்மை நேசிப்பதை நிறுத்த மாட்டார். நாம் மோசமாகத் தோல்வியடைந்தாலும் அவர் ஒருபோதும் நம்மை வெறுக்க மாட்டார். இயேசுகிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்து பேதுரு படுதோல்வி அடைந்திருந்தாலும், இயேசுகிறிஸ்து அவனிடம் தனிப்பட்ட முறையில் தம்முடைய அன்பை உறுதிசெய்தார் (யோவான் 21:15-17). நாம் கடுமையான சோதனைகளைச்

சந்திக்கும்போதும், கடவுள் தொலைவில் இருப்பதாகவோ அல்லது நம்மை மறந்துவிட்டதாகவோ உணரும்போதும், மனம் தளரத் தேவையில்லை. கடவுள் நம்மை நித்திய அன்பினால் நேசித்திருக்கிறார்.

இப்படி, கடவுளின் அன்பின் நான்கு வகை அழகான பண்புகளை நாம் பார்த்தோம்: அது தன்னார்வமானது, பரிசுத்தமானது, தியாகம் நிறைந்தது மற்றும் நித்தியமானது. இந்த அறிவைப் பெறுவதன் தாக்கங்கள் என்ன? குறிப்பாக இரண்டு தாக்கங்கள்: ***கடவுள் மீது நம் அன்பும், பிறர் மீதான அன்பும் பெருக வேண்டும்.***

மத்தேயு 22:37-39 ல், இயேசுகிறிஸ்து நமக்கு இரண்டு முக்கியமான கட்டளைகளை போதித்தார்: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே." இது நடைமுறை வழிகளில் எப்படி சாத்தியம் என்பதை சுருக்கமாகப் பார்ப்போம்.

### 1. கடவுள் மீது நம் அன்பு பெருக வேண்டும்

கீழ்காணும் நடைமுறை பகுதிகளில் கடவுள் மீதான நம் அன்பு அதிகரிக்க வேண்டும்:

***துதிக்க வேண்டும்.*** கடவுளுடைய அன்பைப் பற்றி யோவான் எப்படிப் புகழ்ந்தார் என்பதைக் கவனிப்போம்: "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்...." (1 யோவான் 3:1). அவருடைய பரிசுத்த இயல்பை விட்டுக்கொடுக்காமல் நம்மை நேசிப்பதற்காக நாம் அவரைத் தொடர்ந்து துதிக்க வேண்டும். அவர் நம்மை சிட்சிக்கும்போது நாம் முறுமுறுக்கவோ கோபப்படவோ கூடாது. அதை நம் நன்மைக்காகத்தான் அவர் செய்கிறார். அவருடைய அன்பு, நாம் நினைக்கிறதும், செய்கிறதுமான எல்லாவற்றிலும் பரிசுத்தத்தைத் தொடர அழைக்கிறது.

***தூய்மையாக இருக்க வேண்டும்.*** தூய்மையைப் பின்பற்ற யோவான் நம்மை எவ்வாறு அழைக்கிறார் என்பதைக் கவனியுங்கள்: "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்" (1 யோவான் 3:3). நாம் பரிதபிக்கப்படத்தக்கவர்களாக இருந்தபோதும் நம்மை நேசித்தவரை காயப்படுத்துவது எப்படி?

***வேத வசனத்தை வாசித்து, ஜெபிக்க வேண்டும்.*** வேதத்தைப் படிப்பதன் மூலமும் (அவரிடமிருந்து கேட்பது) மற்றும் ஜெபத்தில் நேரத்தை செலவிடுவதன் மூலமும்(அவருடன் பேசுவது) கடவுள் மீதுள்ள அன்பை நாம் வெளிப்படுத்துகிறோம்.

***தியாகத்தோடு கொடுக்க வேண்டும்.*** கடவுள் தம் தியாகமான அன்பின் மூலம் நமக்கு மிகச் சிறந்ததைக் கொடுத்திருக்கிறார்; எனவே, நமக்குரியவைகளை அவரின் நோக்கங்களுக்காக பயன்படுத்தாமல் இருக்கக்கூடாது. நமது பணம், நேரம், உடைமைகள் அனைத்தும் கர்த்தருக்கே சொந்தமானது. நாம் நம்மைப் பார்த்து பின்வருமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்: கடவுளின் நோக்கங்களுக்காக எனது நேரத்தையும் பணத்தையும் கொடுப்பதில் ஒரு தியாக மனப்பான்மை உள்ளதா? அப்படி

இல்லையென்றால், நாம் மனந்திரும்ப வேண்டும். தாவீது 2 சாமுவேல் 24:24ல், " ...நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன்..." என்று கூறினான். நாம் ஒருவரை நேசிக்கும்போது, எந்த விலை கிரயத்தைக் கொடுக்கவும் தயங்க மாட்டோம், விலையையும் பொருட்படுத்தமாட்டோம். மரியாள் விலையுயர்ந்த வாசனை திரவத்தை இயேசுகிறிஸ்துவின் பாதங்களின் மீது ஊற்றியபோது விலையை கணக்கிடவில்லை (யோவான் 12:3). ஏன்? தன் மீது இயேசுகிறிஸ்து கொண்டிருந்த அன்பால் அவள் தூண்டப்பட்டாள், அதற்குப் பதிலாக, அவர் மீது தியாகத்துடன் தன் அன்பை வெளிப்படுத்தினாள்.

***நம்பிக்கையில் நிலைத்திருக்க வேண்டும்.*** சூழ்நிலைகள் இருண்டதாகத் தோன்றினாலும் நாம் தொடர்ந்து கடவுளை விசுவாசிக்க வேண்டும். நம்மீதான தம்முடைய அன்பில் உறுதியாக இருப்பவர், நம்மிடமிருந்து அதே உறுதியைப் பெற பாத்திரராக இருக்கிறார்.

## 2. பிறர் மீதான நம்முடைய அன்பு பெருக வேண்டும்

எபேசியர் 5:1-2 இவ்வாறு கூறுகிறது, "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்." அதேபோல 1 யோவான் 4:11-12ல், "பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம். தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்" என்று வாசிக்கிறோம்.

பிறரிடம் அன்பு காட்டுவதன் மூலம் கடவுளின் அன்பைப் பின்பற்றுவதற்கான சில வழிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

***தன்னார்வ அன்பு.*** *தகுதியற்ற நம்மீது* கடவுள் நம்மீது வைத்திருக்கும் அன்பைப்போல, மற்றவர்கள் மீதான நமது அன்பும் இருக்க வேண்டும். பிறர் எந்த நிறமுடையவர்களாய் இருந்தாலும், அவர்கள் எந்த மொழி பேசினாலும், எவ்வளவு படித்தவர்களாக இருந்தாலும், எவ்வளவு செல்வம் வைத்திருந்தாலும், எவ்வளவு மோசமானவர்களாக இருந்தாலும், அவர்களை நேசிக்க நாம் தயாராக இருக்க வேண்டும்.

***பரிசுத்த அன்பு.*** 1 கொரிந்தியர் 13:6ல், "அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்" என்று வாசிக்கிறோம். இந்த முறையில் கடவுளுடைய அன்பை பின்பற்ற வேண்டுமானால், அவர்களுடைய பாவங்களைப் பற்றி அலட்சியமாகவோ அல்லது மௌனமாகவோ இருக்கக் கூடாது. நாம் அன்பினால் அவர்களை எச்சரிக்க வேண்டும். மேலும், அவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் எதையும் நாம் செய்யக்கூடாது. மற்றவர்களிடம் நாம் பேசும் வார்த்தைகள் அன்பாகவும், தயவாகவும் இருக்க வேண்டும். நாம் எப்போதும் மற்றவர்களைக் கட்டியெழுப்பும் வார்த்தைகளைப் பேச வேண்டும் - அவர்களை இடித்துவிடக்கூடாது. பொய், வதந்தி, அவதூறு அல்லது

கெட்ட வார்த்தைகளைப் பேசக்கூடாது (எபேசியர் 4:29). நமது செயல்கள் அவர்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது என்பது இதன் பொருள் (1 கொரிந்தியர் 10:31-33).

***தியாகமான அன்பு.*** 1 யோவான் 3:16-ல் இயேசுகிறிஸ்துவின் தியாகமான அன்பின் வெளிச்சத்தில் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை யோவான் தெளிவுபடுத்துகிறார்: “அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.” 1 யோவான் 3:17 மற்றும் 18 ஆம் வசனங்களில் இந்த தியாக அன்பை நடைமுறை அர்த்தத்தில் வெளிப்படுத்துவதற்கு ஒரு உதாரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது: “ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.”

***நித்திய அன்பு.*** நாம் தோல்வியடையும் போது கடவுள் நம்மை நேசிப்பதை நிறுத்த மாட்டார் என்பதால், மக்கள் நம்மைத் தோல்வியடையச் செய்யும் போது நாமும் அவர்களை நேசிப்பதை நிறுத்தக்கூடாது. 1 கொரிந்தியர் 13:4 மற்றும் 7ல் நமக்கு இவ்வாறு நினைவூட்டப்படுகிறது, "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.” நம் அன்பு அப்படிப்பட்டதாக இருக்கிறதா? நாம் மற்றவர்களை நேசிப்பதில் குறைவாக இருக்கிறோமா? என்று பார்த்து, அதை சரியாக வடிவமைக்க வேண்டும். நித்திய அன்பினால் நாம் நேசிக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்து, மற்றவர்களையும் அவ்வாறே நேசிக்க நாம் தூண்டப்பட வேண்டும்.

கிறிஸ்துவின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் அன்பை நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்குச் சொல்வதிலும், பிறரிடம் எப்போதும் காட்டுவதிலும் முனைப்புடன் இருப்பதுதான் இதைப் பற்றிய புரிதலாகும். கடவுளை நேசிப்பதும் மற்றவர்களை நேசிப்பதும் உண்மையிலேயே இரட்சிப்படைந்த இருதயத்தின் பிரிக்க முடியாத சான்றுகள். இந்த இருவரையும் நேசிக்காத இடத்தில், பரிசுத்த ஆவியின் கிரியை இருக்காது, அப்படிப்பட்டவர்கள் இரட்சிக்கப்படவில்லை என்பதை இது குறிக்கிறது. அதைத்தான் 1 யோவான் 4:20ல் கடவுளுடைய வார்த்தை இவ்வாறு அறிவிக்கிறது, “தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?”

நமது சத்துருக்கள் உட்பட மற்றவர்களை நேசிக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையானது, பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் செய்கிறார் என்பதற்கு ஒரு உண்மையான சான்றாகும், இதனால் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதை வெளிப்படுத்துகிறோம் (யோவான் 13:34-35). அன்பான கடவுளைப் போலிருக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். எனவே, நம்மீது அவர் வைத்திருக்கும் அன்பைப் போன்ற

அன்புடன் அவரையும், மற்றவர்களையும் நேசிக்க பரிசுத்த ஆவியின் மூலம், உற்சாகப்படுத்தப்பட நாம் அவரிடம் மன்றாட வேண்டும்.

நீங்கள் இரட்சிக்கப்பட்டவராக இல்லை என்றால், உங்கள் பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டு, பாவ மன்னிப்புக்காக உயிர்த்தெழுந்த அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள கடவுள் உங்களுக்கு அளிக்கும் அன்பான வாய்ப்பை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். இயேசுகிறிஸ்து மூலம் வழங்கப்படும் கடவுளின் அன்பை நீங்கள் ருசிபார்க்கும் வரை உண்மையான அன்பு என்றால் என்னவென்று அறியமாட்டீர்கள். இயேசுகிறிஸ்துவே உங்களை கீழ்காணும் இந்த வார்த்தைகளின் மூலம் அன்புடன் அழைக்கிறார்:

> **மத்தேயு 11:28-30** - *வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது.*

நீங்கள் நிறைய பாவம் செய்திருப்பதால், இயேசுகிறிஸ்து உங்களை ஏற்றுக்கொள்வாரா என்ற சந்தேகத்தில், அவருடைய அழைப்பை ஏற்க தயங்கினால், இயேசுகிறிஸ்துவின் அன்பான உறுதிமொழியை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்: "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37). எனவே, தாமதிக்காமல், தயவு செய்து அவரிடம் வந்து, அவருடைய நித்திய அன்பை ருசித்துப்பாருங்கள். தாவீது சங்கீதம் 34:8ல், "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று கூறுகிறான். கடவுளின் இந்த அன்பான அழைப்பை நீங்கள் நிராகரித்தால், அன்பின் இலக்கணத்தை நீங்கள் நித்தியத்திற்கும் அறிய முடியாத காலம் வரும்! நீங்கள் பயங்கரமான கோபத்தை மட்டுமே அனுபவிப்பீர்கள்.

## கலந்துரையாடல் கேள்விகள்

1. **தேவனுடைய** அன்பை பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
2. தேவனின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் உங்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம்?
3. தேவனின் இந்தப் பண்பு உங்கள் ஜெப வாழ்க்கையில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
4. தேவனின் இந்தப் பண்பு உங்கள் பிரசங்கங்களில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**எரேமியா 31:3 -** *அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்.*

## ஜெபம்

*கிருபையுள்ள கர்த்தாவே,*
*அன்பென்பது உம்முடைய நாமம்,*
*அன்பினால் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும்.*
*என் பாவங்கள் பரந்த கடல் மணலை விட அதிகம்*
*ஆனால், பாவம் பெருகும் இருக்கும் இடத்தில்*
*கிருபை பெருகுகிறது.*
*உமது நேசகுமாரனின் சிலுவையையும்,*
*அவரது பிராயச்சித்த இரத்தத்தின் விலைமதிப்பற்ற தன்மையையும் பாரும்;*
*அவரது இடைவிடாத பரிந்துபேசும் ஜெபத்தைக் கேளும்,*
*'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன,*
*மகிழ்ச்சியாக இரு, நிம்மதியாகப் படுத்துக்கொள்.'...என்று என் இருதயத்திற்கு சொல்லும்.*
*நான் தேடாமலேயே, நீர் எனக்கு மிகப்பெரிய ஈவாக உமது குமாரனைத் தந்தீர்*
*அவருக்குள் எனக்கு வேண்டியதையெல்லாம் தருவீர்.*
*ஆமென்.*

# கடவுளின் ஞானம்

*தமது மகிமைக்காக எல்லாவற்றையும் அறிந்த கடவுள் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றும் நோக்கில்,தேர்ந்தெடுக்கும் வழிமுறையே கடவுளின் ஞானம்.*

கடவுளின் ஞானமானது, அவரின் சர்வ ஞானம் என்றும் அழைக்கப்படுகிறது (omni sapience, லத்தீன் மொழியில், omni என்றால் "அனைத்து" மற்றும் sapient என்றால் "ஞானம்"). ரோமருக்கு எழுதிய நிருபத்தின் முடிவில், அப்போஸ்தலனாகிய பவுல் இதைப்பற்றி எழுதுகிறார், "தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்" (ரோமர் 16:27). கடவுளை "ஒரே ஞானமான கடவுள்" என்று அவர் விவரித்ததை நீங்கள் கவனித்தீர்களா? முன்னதாக ரோமர் 11:33 ல், பவுல் கடவுளின் ஞானம் மற்றும் அறிவுக்காக அவரை இவ்வாறு புகழ்ந்தார்: "தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!"

கடவுளின் இந்தப் பண்பை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது என்றாலும், நான்கு கேள்விகளைக் கேட்டு பதிலளிப்பதன் மூலம் நன்றாகப் புரிந்துகொள்ள முயற்சிப்போம்:

1. **கடவுளின்** ஞானம் என்றால் என்ன?
2. கடவுள் தம்முடைய ஞானத்தை எப்படி வெளிப்படுத்துகிறார்?
3. கடவுள் எவ்வாறு தம்முடைய ஞானத்தை நமக்குத் தெரிவிக்கிறார்?
4. நாம் கடவுளுடைய ஞானத்தில் வளருவதை எப்படி அறிந்து கொள்வது?

## 1. கடவுளின் ஞானம் என்றால் என்ன?

அறிவு என்பது ஒருவர் அறிந்திருக்கும் நிலையையும், ஞானம் என்பது அந்த அறிவைப் பயன்படுத்துவதையும் குறிக்கிறது. ஞானத்திற்கு அறிவுசார் மற்றும் தார்மீக குணம் உள்ளது என்று வேதம் கூறுகிறது. எனவே, கடவுளை ஞானி என்று வேதம் விவரிக்கும் போது, அது இவ்வாறு அர்த்தப்படுத்துகிறது: அனைத்தையும் அறிந்த (அறிவுசார் நிலை) கடவுளுக்கு சிறந்த இலக்குகளையும் வழிமுறைகளையும் (தார்மீக நிலை) செயல்படுத்தும் திறன் உள்ளது. அந்த இலக்குகள் அவரின் மகிமைக்காகவே நிறைவேற்றப்படுகிறது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கடவுளின் ஞானம் என்பது அவருடைய அறிவின் நடைமுறை நிலையாகும், இது பயன்படுத்தப்படும்போது, அவர் மகிமைப்பட்டு அவரது விருப்பங்களை நிறைவேற்றுகிறது. கடவுள், தம்முடைய ஞானத்தில், எதைச் செய்ய தீர்மானிக்கிறாரோ, அதைச் செய்ய அவருக்கு அதிகாரமும் இருக்கிறது. நினைவில் கொள்ளுங்கள், கடவுள் சர்வ வல்லமை படைத்தவர். "கடவுளின் வல்லமை" என்ற பாடத்தில் நாம் பார்த்தது போல, அனைத்து ஆற்றலும் உள்ளது. அதனால்தான் பெரும்பாலும் கடவுளின் ஞானத்தை வேதமானது அவருடைய வல்லமையுடன் இணைக்கிறது. அதற்கான சில குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

> **யோபு 9:4** - *அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர், பெலத்தில் பராக்கிரமமுள்ளவர்; அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்?*
>
> **தானியேல் 2:20** - *தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக; ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியது.*
>
> **ரோமர் 16:25, 27** - *ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகலஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான… தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.*

எனவே, அனைத்தையும் அறிந்தக் கடவுளுடைய ஞானம் உயர்ந்த இலக்குகளைத் தீர்மானித்து தமக்கு மகிமையை எடுத்துக்கொள்ளும் சிறந்த வழியாக இருக்கிறது!

## 2. கடவுள் தம்முடைய ஞானத்தை எப்படி வெளிப்படுத்துகிறார்?

குறைந்தபட்சம் நான்கு வகைகளில் கடவுளுடைய ஞானம் வெளிப்படுவதை நாம் காணலாம்.

***சிருஷ்டிப்பில். ச***ங்கீதம் 104:24ல் இவ்வாறு வாசிக்கிறோம், “கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.” முழு பிரபஞ்சத்தின் படைப்பும், நம் சரீரங்கள் தனித்தன்மையாக உருவாக்கப்பட்டதும் கடவுளின் ஞானத்தை தெளிவாகக் காட்டுகின்றன.

***மீட்பில்.*** 1 கொரிந்தியர் 1:18 மற்றும் வசனம் 25ல் இவ்வாறு நாம் வாசிக்கிறோம், “சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.... இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக

பலமாயிருக்கிறது.” இந்த வசனங்களில், பவுல் அடிப்படையில் சிலுவையின் உபதேசத்தை விசுவாசிக்காதவர்களை (அதாவது, உலகின் "ஞானிகள்") பைத்தியம் என்று கூறுகிறார். மக்களை இரட்சிக்கக்கூடிய இப்படிப்பட்ட ஒரு வழியை யார் பைத்தியம் என்று நினைப்பார்கள்? ஆனாலோ, விசுவாசிக்கிறவர்கள் இந்த உபதேசத்தின் மூலம் தேவனுடைய ஞானத்தை புரிந்துகொள்கிறார்கள். தேவன் தம்முடைய இரட்சிப்பின் கிரியைகளை இவ்விதமாக நிறைவேற்றுகிறார் (அதாவது, சிலுவையைப் பற்றி பிரசங்கித்தின் மூலம்) அதனால் "ஒருவரும் அவருக்கு முன்பாக மேன்மைபாராட்ட முடியாது" (1 கொரிந்தியர் 1:29)!

***திருச்சபையில்.*** யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் பவுல் நற்செய்தியைப் பிரசங்கித்தபோது, மத நம்பிக்கையினாலும் இன ரீதியாகவும் பல நூற்றாண்டுகளாக பிளவுபட்டிருந்த இந்த இரண்டு குழுக்களும் கிறிஸ்துவில் ஐக்கியப்பட்ட ஒரே சரீரமாக மாறியது. எபேசியர் 3:6 இவ்வாறு கூறுகிறது, “இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை.” இந்த இரண்டு இனக்குழுக்களையும் ஒன்றாகக் கொண்டுவந்ததன் மூலம், கடவுள் தமது நோக்கத்தை நிறைவேற்றினார்: “உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும்பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக்கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது” (எபேசியர் 3:10-11). உதாரணமாக, வெவ்வேறு இன, கலாச்சார மற்றும் பொருளாதார பின்னணியைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்துவில் ஒரே சரீரமாக ஒன்றிணைந்தபோது தேவதூதர்களும் பிசாசுகளும் கூட இவர்களின் சிறப்பைப் பார்க்கிறார்கள். அது கடவுளின் ஞானத்தை ஆழமாக வெளிப்படுத்தி, இறுதியில் அவருக்கு மகிமையைக் கொண்டுவருகிறது.

***விசுவாசிகளின் வாழ்வில்.*** மனிதர்கள் உட்பட முழுப் பிரபஞ்சத்தையும் படைத்தபோது, அவர்கள் மூலம் மகிமைப்படவும், கனப்படுத்தப்படவும் கடவுள் சித்தங்கொண்டார். வெளிப்படுத்தல் 4:11ல், " கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது.” இதை வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், கடவுளை நமது ஒரே பொக்கிஷமாகவும், அன்பின் மூலாதாரமாகவும் வைத்திருக்க நாம் படைக்கப்பட்டோம். நம் முழு இருதயத்துடனும், மனதுடனும், பெலத்துடனும் அவரை நேசிப்பதே நமது இருப்பின் நோக்கமாகும்.

எனினும், பாவம் வந்தவுடன் அதன் அழிவுகரமான விளைவுகளால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்த நோக்கம் தடைபட்டது! இருப்பினும், எக்காலத்திலும் மகிமைக்கும், கனத்திற்கும் பாத்திரராகிய கடவுள் அனைத்து படைப்பின் இலக்கை அடைய நற்செய்தியின் மூலம் கிரியை செய்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக அவரை

நேசித்துப், போற்றி கனப்படுத்தும் பிள்ளைகளை உருவாக்குவது இந்த இலக்கில் அடங்கும். அதில் நீங்களும் நானும் இருக்கிறோம்! நாம் அனைவரும் இயேசுகிறிஸ்துவைப் போல மறுரூபமாக்கப்படும்போது இந்த இலக்கை முழுமையாக அனுபவிப்போம். அதுவே விசுவாசிகளுக்கான அவருடைய குறிக்கோள். இந்த அற்புதமான உண்மையை எடுத்துரைக்கும் சில வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

> **ரோமர் 8:28-29** - *அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.*
>
> **1 கொரிந்தியர் 15:48** - *மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே.*
>
> **பிலிப்பியர் 3:20-21** - *நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.*

ஆகவே, அவருடைய குமாரனைப் போல இருக்க வேண்டும் என்ற இறுதி யதார்த்தம் நிறைவேறுவதற்கு நம் வாழ்வில் இன்பங்களையும், துன்பங்களையும் கடவுள் அனுமதிக்கிறார். ஆனால் இந்த சத்தியத்தை நாம் புரிந்து கொள்ளத் தவறினால், அவருடைய விருப்பத்தை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள முடியாது - குறிப்பாக நாம் சோதனைகளை எதிர்கொள்ளும்போது! இயேசுகிறிஸ்துவும் உபத்திரவத்தினூடேச் சென்றார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (எபிரெயர் 2:10). மேலும் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (1 யோவான் 2:6)! எனவே, உபத்திரவம் வரும்போது இலக்கைத் தவறவிடக்கூடாது. இடைவிடாத சோதனைகளை எதிர்கொண்டாலும், பவுல் செய்ததைப் போல கடவுளின் கிருபையில் இளைப்பாறுவதன் மூலம் நாம் செயல்பட வேண்டும் (2 கொரிந்தியர் 12:7-10). நாம் கடவுளின் வழிகளை நம்பி, அதற்கு அடிபணிய வேண்டும், ஏனென்றால், நம்முடைய வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும், ஒரு ஞானமுள்ள கடவுள் நம்மை கிறிஸ்துவின் சாயலாக உருவாக்குவாக்கி மகிமைப்படுகிறார்.

## 3. கடவுள் எவ்வாறு தம்முடைய ஞானத்தை நமக்குத் தெரிவிக்கிறார்?

கடவுளின் சில பண்புகள் பகிர்ந்து கொள்ள முடியாதவை (எ.கா., சர்வ வல்லமை, சர்வ ஞானம், நித்தியம் போன்றவை). இருப்பினும், ஞானம் என்பது பகிர்ந்து கொள்ளக்கூடிய பண்பு. இது நமக்கு எப்படி தெரியும்? ஏனென்றால் வேதம் அப்படித்தான் கூறுகிறது!

வேதத்தில் உள்ள பல கட்டளைகள் நாம் ஞானத்தில் வளர அழைப்பு விடுக்கின்றன. நீதிமொழிகள் புத்தகத்தின் பெரும்பகுதி இந்த சத்தியத்தை ஆதரிக்கிறது.

> **நீதிமொழிகள்** 1:1-2 - *தாவீதின் குமாரனும் இஸ்ரவேலின் ராஜாவுமாகிய சாலொமோனின் நீதிமொழிகள்: இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து, புத்திமதிகளை உணர்ந்து, விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம்.*

> **நீதிமொழிகள்** 4:5 - *ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு.*

> **நீதிமொழிகள்** 5:1 - *ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு.*

நீதிமொழிகள் மட்டுமல்ல, வேதத்தில் உள்ள மற்ற புத்தகங்களும் இதே கருத்தை வலியுருத்துகின்றன.

> **மத்தேயு** 10:16 - *…சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாயும் புறாக்களைப்போல கபடற்றவர்களுமாய் இருங்கள்.*

> **எபேசியர்** 5:15 - *ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து…*

இந்த வசனங்களிலிருந்து, கடவுள் நமக்கு ஞானத்தைக் கொடுக்க விரும்புகிறார் என்பது தெளிவாகிறது. அப்படியானால், நாம் அதை பெறுவது எப்படி?

*முதலாவதாக, ஞானத்தின் தேவையை நாம் உணர வேண்டும்.* நாம் ஞானம் (அதாவது, மனித ஞானம்) என்று பெருமையாகப் பேசிக்கொள்வது கடவுளுக்கு முன்பாக பைத்தியமாக இருக்கிறது. வேதம் கூறுகின்ற உண்மையான ஞானம் நம்மிடம் இல்லை என்பதை நாம் தாழ்மையுடன் அங்கீகரிக்க வேண்டும். ஆகுரைப் போலவே நாம் கடவுளிடம் இப்படி அறிக்கையிட வேண்டும்: “மனுஷரெல்லாரிலும் நான் மூடன்; மனுஷருக்கேற்ற புத்தி எனக்கு இல்லை. நான் ஞானத்தைக் கற்கவும் இல்லை, பரிசுத்தரின் அறிவை அறிந்துகொள்ளவும் இல்லை” (நீதிமொழிகள் 30:2-3).

*இரண்டாவதாக, கடவுள் தம்மிடம் கேட்பவர்களுக்கு ஞானத்தைக் கொடுப்பார் என்பதை நாம் உணர வேண்டும்.* நீதிமொழிகள் 2:6 நமக்கு இவ்வாறு உறுதியளிக்கிறது, “கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.” பவுல் தனது நிருபங்களில் மற்ற விசுவாசிகளின் வாழ்க்கையில் தேவையான ஞானத்திற்காக அடிக்கடி ஜெபித்ததில் ஆச்சரியமில்லை (பிலிப்பியர் 1:9-11; கொலோசெயர் 1:9). எவ்வாறாயினும், நாம் இந்த நான்கு அணுகுமுறைகளுடன் கேட்க வேண்டும்:

1. கர்த்தருக்குப் பயப்படுதலோடு (சங்கீதம் 111:10, நீதிமொழிகள் 1:7, 9:10).
2. விடாமுயற்சியோடு (நீதிமொழிகள் 2:1-6).
3. பணிவோடு (நீதிமொழிகள் 11:2).
4. விசுவாசத்தோடு (யாக்கோபு 1:5, குறிப்பாக சோதனைகளின் சூழலில்).

*மூன்றாவதாக, தேவன் தம் வார்த்தையின் மூலம் அதைக் கொடுக்கிறார் என்பதை நாம் உணர வேண்டும்.* நாம் எவ்வாறு இரட்சிக்கப்படக்கூடும் (2 தீமோத்தேயு 3:15), நாம் எவ்வாறு பரிசுத்தமாக்கப்பட முடியும் (2 தீமோத்தேயு 3:16; யோவான் 17:17; அப்போஸ்தலர் 20:32; உபாகமம் 4:5-8; சங்கீதம் 19:7, 119:11) என்பதை வேதவசனங்கள் மட்டுமே வெளிப்படுத்துகின்றன. அதனால்தான் இயேசுகிறிஸ்து "மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" (மத்தேயு 4:4) என்று கூறியிருக்கிறார். எதிர்பாராத விதமாக இன்று, பெரும்பாலான விசுவாசிகள் வேதாகமத்தை வாசிப்பதற்கு பதிலாக சமூக ஊடகங்கள், தொலைக்காட்சிகள் அல்லது பிற வழிகளில் அதனுடன் தொடர்புகொள்கின்றனர். வேதாகமத்தைத் தவிர்த்துவிட்டு உண்மையான ஞானத்தில் ஒருவர் வளர முடியாது! பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட வார்த்தையை பயன்படுத்துவதின் மூலம், ஞானத்திலும் புரிதலிலும் வளர கடவுள் நமக்கு உதவுகிறார். நிச்சயமாக, வெறும் அறிவு பயன் தராது. கடவுள் நமக்குக் கற்பிப்பதை நாம் கடைப்பிடிக்க வேண்டும்; இல்லையென்றால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் (யாக்கோபு 1:22)!

மேலே குறிப்பிட்டுள்ள இந்த மூன்று அணுகுமுறைகளையும் நாம் கடைப்பிடிக்கும்போது, கடவுள் நமக்கு ஞானத்தைக் கொடுப்பார் என்பதில் *உறுதியாக* இருக்கலாம். ஏன்? ஏனென்றால், நம்மை அல்ல, கடவுளையே மகிமைப்படுத்த நாம் அந்த ஞானத்தைப் பயன்படுத்த முற்படுகிறோம் என்பதை அத்தகைய ஆசை சுட்டிக்காட்டுகிறது! அத்தகைய அணுகுமுறை கடவுளைப் பிரியப்படுத்துகிறது என்று நாம் உறுதியாக நம்பலாம், மேலும் கடவுள் தமது ஞானத்தை இத்தகைய இருதயங்களில் ஊற்றுவார்.

### 4. நாம் கடவுளுடைய ஞானத்தில் வளர்கிறோமா என்பதை எப்படி அறிந்து கொள்வது?

யாக்கோபு 3:13-18 ஆகிய வசனங்களை வைத்து நாம் அறிந்துகொள்ளலாம்:

> *உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமைபாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.*

யாக்கோபு சொல்வது நம் வாழ்க்கையோடு எப்படி ஒத்துப்போகிறது? நாம் வளர்ந்து வருகிறோமா இல்லையா என்பதை இந்தக் கேள்விகளுக்கானப் பதில் நமக்கு சொல்லும்.

இப்படி, ஞானத்தைப் பற்றிய நான்கு கேள்விகள் கேட்கப்பட்டு பதில் அளிக்கப்பட்டது:

1. **கடவுளின்** ஞானம் என்றால் என்ன?
2. கடவுள் தம்முடைய ஞானத்தை எப்படி வெளிப்படுத்துகிறார்?
3. கடவுள் எவ்வாறு தம்முடைய ஞானத்தை நமக்கு உணர்த்துகிறார்?
4. நாம் கடவுளுடைய ஞானத்தில் வளர்கிறோமா என்பதை எப்படி அறிந்து கொள்வது?

நான் முன்பே கூறியதுபோல், கடவுளின் வழிகளை நம்மால் முழுமையாக புரிந்துகொள்ள முடியாது என்று பவுல் கூறியிருக்கிறார். அவை நம் புரிதலுக்கு அப்பாற்பட்டவை (ரோமர் 11:33). பழைய ஏற்பாட்டில் கூட, கடவுள் ஏசாயா மூலம் நமக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார்: " என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசாயா 55:8-9). ஆம், சில நிகழ்வுகள் நமக்கு ஏன் நடந்தன அல்லது நடக்கவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள முடியாததாக இருக்கலாம். அந்தச் சமயங்களில் கடவுளின் கட்டளைகளைப் புரிந்துகொண்டு பின்பற்றுவது கடினமாகத் தோன்றலாம். இது போன்ற நேரங்களில் நமது பதில் என்னவாக இருக்க வேண்டும்? வேதவசனங்களிலிருந்து சில பதில்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

> **நீதிமொழிகள் 3:5-6 -** *உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.*
>
> **1 பேதுரு 4:19 -** *ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.*

கிறிஸ்துவிற்குள் அன்பான சகோதர சகோதரிகளே, உங்களுக்கும் எனக்குமான கடவுளின் இறுதி இலக்கு, அவருடைய குமாரனின் நிலைக்கு நம்மைக் கொண்டுவந்து, அவரை முழுமையாகப் பிரியப்படுத்த வைப்பது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த சத்தியத்தை நாம் மறக்கும்போது அவருடைய சித்தத்திற்கு அடிபணிவதில் சிரமப்படுவோம். இருப்பினும், அதை முழு மனதுடன் ஏற்றுக்கொள்வது மகிழ்ச்சியான வாழ்க்கையாக மட்டுமல்லாமல், தொடர்ந்து பெருகி, கடவுளுக்கு மகிமையைக் கொண்டுவரும்.

அன்பான இரட்சிக்கப்படாத நண்பரே, நீங்கள் ஒரு விசுவாசியாக இல்லாவிட்டால் அல்லது கிறிஸ்தவர் என்ற விளையாட்டை விளையாடிக்கொண்டிருந்தால், உங்கள் ஞானம் கடவுளுக்கு முன்பாக பைத்தியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (ரோமர் 1:21). சிலுவையில் வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் ஞானத்திற்கு நீங்கள் திரும்ப வேண்டும். நீங்கள் கடவுளைப் பிரியப்படுத்த உங்கள் வழிகளில் முயற்சிப்பதை விட்டு விலகி, சிலுவையில் மரித்து, மீண்டும் உயிர்த்தெழுந்த பரிபூரணரான இயேசுவிடம் திரும்ப வேண்டும் (அவரில்லாமல் நீங்கள் ஒரு பூரண வாழ்வை வாழ முடியாது). "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோசெயர் 2:3). இயேசுகிறிஸ்துவிடம் வாருங்கள். உங்கள் விசுவாசத்தை அவர் மீது வைத்து அவரைப் பின்பற்றுங்கள். அதுதான் நீங்கள் செய்யக்கூடிய புத்திசாலித்தனமான காரியம்!

## கலந்துரையாடல் கேள்விகள்

1. **தேவனுடைய** ஞானத்தைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த தொகுப்பு எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
2. தேவனின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் உங்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம்?
3. தேவனின் இந்தப் பண்பு உங்கள் ஜெப வாழ்க்கையில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
4. தேவனின் இந்தப் பண்பு உங்கள் பிரசங்கங்களில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**ரோமர் 11:33** - *தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!*

## ஜெபம்

பிதாவே, நீரே ஞானமுள்ள கடவுள். நீர் அனைத்தையும் ஞானத்தால் படைத்துள்ளீர். என் வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும், ஆரம்பம் முதல் முடிவு வரை திட்டமிட்டு வைத்திருக்கிறீர். உம்முடைய வழிகளை விட என் வழிகள் சிறந்தவை என்று நான் அடிக்கடி நினைத்து செயல்படுவது எவ்வளவு முட்டாள்தனமானது. பிதாவே, என் சொந்த வழிகளைப் பின்தொடர்வதிலிருந்து என்னைக் காப்பாற்றும். என்னை சவாலான பாதைகளுக்கு இட்டுச் சென்றாலும், வேதத்தின் மூலம் நீர் வெளிப்படுத்தும் உமது ஞானத்திலும், வழிகளிலும் நம்பிக்கை கொள்ள எனக்கு உதவும். எனது எல்லா வழிகளிலும் உம்மைப் பிரியப்படுத்த எனக்கு வழிகாட்டும்.

ஆமென்!

# கடவுளுடைய கோபம்

*கடவுளின் கோபம் என்பது பாவத்தின் மீது அவருடைய நித்திய வெறுப்பின் விளைவான, தண்டனையைக் குறிக்கிறது.*

பல திருச்சபைகளும், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளும் பலரும் ஏற்றுக்கொள்ளாத போதனைகளில் ஒன்று கடவுளின் கோபத்தைப் பற்றியதாகும். இந்தப் பண்பைக் குறிப்பிடுவது கூட பலருக்கு வெறுப்பாக இருக்கிறது. கடவுளின் கோபத்தை சமாளிக்க வேண்டிய கட்டாயத்தில், சமரசமாகப் போகும் போக்கும் உள்ளது, நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். “கடவுள் கோபப்படுபவர்” என்று வேதம் விவரிக்கிறது.

பெரும்பாலும், இத்தகைய எதிர்மறையான மனப்பான்மைக்குக் காரணம், அன்பின் கடவுள் கோபமும் கொள்வார் என்று சமரசம் செய்வதில் மக்களுக்கு சிரமம் ஏற்பட்டுவிடுகிறது. "அன்பும் இரக்கமுமுள்ள கடவுள் எப்படி தண்டிக்கும் கடவுளாக இருக்க முடியும்?" என்ற எண்ணத்துடன் மல்லுக்கட்டுகிறார்கள். கடவுளைப் பற்றிய தவறான கண்ணோட்டமே இப்படிப்பட்ட சிந்தனைக்குக் காரணம், இது முழுக்க முழுக்க கடவுளின் பண்புகளைப் பற்றி வேதம் கூறுவதை சரியாக புரிந்துகொள்ளாததால் எழும் பிரச்சனை. பொதுவாக, “கோபம்” என்ற வார்த்தையைக் கேட்டவுடன் ஒரு வெறி பிடித்தவன் துப்பாக்கியுடன் ஓடி மக்களைக் கண்மூடித்தனமாக சுடுவதுதான் பலருக்கு முதலில் நினைவுக்கு வருகிறது. அவர்கள் மக்களைக் கொல்கிற அல்லது காயத்தை ஏற்படுத்துகிற ஒருவரைப் போலவே கடவுளையும் பார்க்க முனைகிறார்கள். மனிதனுடைய பாவம் நிறைந்த கோபத்தை போலல்லாமல், கடவுளின் கோபம் அவருடைய பரிசுத்த பண்புக்கு ஏற்ப உள்ளது.

கடவுள் பரிசுத்தமானவர். எல்லா வகையான பாவங்களும் கடவுளின் பரிசுத்தத் தன்மையை எதிர்க்கிறது. வேறு வழியில் கூறுவதென்றால்: பாவம் கடவுள் யார் என்பதற்கு எதிரானது. கடவுள் தம்மை எதிர்க்கும் எதையும் சகித்துக்கொண்டு, இன்னும் ஏகாதிபத்தியத்துடன் எப்படி இருக்க முடியும்? அப்படியிருக்க முடியாது, கடவுள் அவருடைய பரிசுத்தமான மற்றும் நீதியான தன்மைக்கு ஏற்ப பாவத்தை தண்டிக்க வேண்டும். பாவத்தை வெறுக்காத அல்லது அதனால் பாதிக்கப்படாத ஒரு பரிசுத்த கடவுளை கற்பனை செய்து பாருங்கள். ஒரு ஆட்சேபிக்காத கடவுளை, நாம் நீதியுள்ளவர் என்று முழுமையாக துதிக்க முடியுமா? உண்மையில், நம்மால் முடியாது!

எனவே, கடவுளின் கோபத்தை எதிர்மறையான பண்பாகவோ அல்லது அன்பு, கிருபை, இரக்கம் மற்றும் நன்மை போன்ற அவருடைய மற்ற பண்புகளுக்கு எதிராக நிற்கும் ஒன்றாகவோ நாம் பார்க்கக்கூடாது. கடவுள் அனைத்து முழுமைகளின் கூட்டு. கடவுள் பரிபூரணமாக நேசிக்க முடியும் அதே வேளையில், நன்மைக்கு எதிரான அனைத்தையும் அவர் முழுமையாக வெறுக்க முடியும். அவர் பாவத்தை சரியாகக் கையாளவில்லை என்றால் பரிபூரணராக இருக்க முடியாது. அதனால்தான் கடவுளுடைய கோபத்தைப் பற்றி வேதம் அடிக்கடி பேசுவது நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது. உண்மையில், கடவுள் எந்தத் தயக்கமும் இல்லாமல் அழுத்தம் திருத்தமாக தமது கோபத்தை பின் வரும் தெளிவான வார்த்தைகளில் விவரிக்கிறார்:

> **உபாகமம் 32:39-41** - *நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை என்பதை இப்பொழுது பாருங்கள்; நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன்; நான் காயப்படுத்துகிறேன், நான் சொஸ்தப்படுத்துகிறேன்; என் கைக்குத் தப்புவிப்பார் இல்லை. நான் என் கரத்தை வானத்திற்குநேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறேன். மின்னும் என் பட்டயத்தை நான் கருக்காக்கி, என் கையானது நியாயத்தைப் பிடித்துக்கொள்ளுமானால், என் சத்துருக்களிடத்தில் பழிவாங்கி, என்னைப் பகைக்கிறவர்களுக்குப் பதிலளிப்பேன்.*

தூய்மையான மற்றும் அழகான எல்லாவற்றிலும் மகிழ்ச்சியடைபவன், இயல்பாக, தூய்மையற்றதும் அழுக்கானதுமான அனைத்தையும் வெறுக்க வேண்டும். இது ஒரு சரியான அர்த்தமுள்ள கருத்தாக இருக்கிறது.

கடவுள் கோபத்தை வெளிப்படுத்த வெட்கப்படுபவரல்ல. பழைய ஏற்பாட்டில் உள்ள தீர்க்கதரிசிகளும், புதிய ஏற்பாட்டில் உள்ள அப்போஸ்தலர்களும் இதைப் பிரசங்கிக்க வெட்கப்படவில்லை.

> **ஏசாயா 30:27** - *இதோ, கர்த்தருடைய நாமம் தூரத்திலிருந்து வரும்; அவருடைய கோபம் எரிகிறதும் கனன்று புகைகிறதுமாயிருக்கும்; அவருடைய உதடுகள் சினத்தால் நிறைந்து, அவருடைய நாவு பட்சிக்கிற அக்கினிபோல இருக்கும்.*

> **ரோமர் 1:18** - *சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.*

இவ்விதமாக, கடவுள் தமது கோபத்தை விவரிக்க வெட்கப்படவில்லை. தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் வெட்கப்படவில்லை. அதுபோலவே நாமும் வெட்கப்படக் கூடாது! தீமையைத் தண்டிப்பதன் மூலம் அவர் ஒரு நீதியுள்ள கடவுள் என்பதைக் காட்டுகிறார். வெறுப்பு விஷயத்திலும் இதுவே உண்மையாக இருக்கிறது. வெறுப்பை ஒரு கெட்ட காரியமாக நாம் பார்க்க முனைகிறோம், ஆனால் உண்மையில், கடவுள் பல விஷயங்களை வெறுக்கிறார். ஒன்றின் எதிர்நிலையை வெறுக்காமல் எதையும் நேசிக்க முடியாது. எனவே நாம் உண்மையை நேசித்தால், பொய்யை வெறுக்க வேண்டும். பொய்யை வெறுக்கவில்லை என்றால், மெய்யாகவே

உண்மையை விரும்ப மாட்டோம். நாம் சுதந்திரத்தை விரும்பினால், அடிமைத்தனத்தை வெறுக்க வேண்டும். ஆகவே, கடவுள் நம்மை நேசித்தால், நம்மை அழிக்கக்கூடியவற்றை அவர் வெறுக்க வேண்டும்.

தீய செயல்களைச் செய்தவர்களுக்கு எதிராக நீதியைப் பிரயோகிக்கும்போது நீதிமன்றங்களைப் பாராட்டுகிறோம். அப்படியென்றால் தம் கோபத்தில், தீயவர்களுக்கு எதிராக பரிபூரண நீதியை நிறைவேற்றும் ஒரு பரிசுத்த கடவுளை நாம் எவ்வளவு அதிகமாகப் போற்ற வேண்டும்? கடவுள் தம் எதிரிகள் அனைவருக்கும் எதிர்காலத்தில் அவரது கோபத்தை முழுமையாக செயல்படுத்தும்போது நாம் மகிழ்ச்சியடைவோம் என்று வேதம் சாட்சியமளிக்கிறது - நாம் இன்னும் மாம்சத்தில் இருப்பதால், இதைத் தற்போது புரிந்துகொள்வது சற்று கடினமாக இருக்கலாம்.

> **உபாகமம்** 32:43 - *ஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள்; அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து, தமது தேசத்தின்மேலும் தமது ஜனங்களின்மேலும் கிருபையுள்ளவராவார்.*

> **வெளிப்படுத்தல்** 19:1-3 - *இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது; அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள். மறுபடியும் அவர்கள்: அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள்.*

இந்த வசனங்களிலிருந்து நாம் இந்த உண்மையைக் கற்றுக்கொள்கிறோம்: கடவுளின் இரக்கத்தையும், அன்பையும் நாம் நன்றி செலுத்தித் துதிப்பது போலவே, அவருடைய கோபத்தை வெளிப்படுத்தியதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்திப் புகழ வேண்டும்.

வேதத்தின் எழுத்தாளர்கள், "கடவுள் அன்பாக இருக்கிறார்" என்று மட்டும் நற்செய்தியை அறிவிக்கவில்லை. கடவுள் நீதியுள்ளவராகவும், பரிசுத்தராகவும் இருப்பதோடு, நாம் அனைவரும் அவருடைய பரிசுத்த தராதரத்தை விட குறைவாகவே இருக்கிறோம் என்றே அறிவித்தனர். நாம் கடவுளின் முன்னிலையில் நீதிமானாக இருக்க வேண்டும். அதுவே அவர்களுடைய சுவிசேஷப் பிரசங்கத்தின் தொடக்கப் புள்ளியாக இருந்தது, அதுவே நமது தொடக்கப் புள்ளியாகவும் இருக்க வேண்டும். எனவே, கடவுளின் கோபத்தைப் பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு, மற்ற பண்புகளைப் போலவே கடவுளின் இந்தப் பண்பையும் வெட்கமின்றி அறிவிக்க முயற்சிப்போம்.

அப்படியானால், கடவுளின் கோபத்தைப் பற்றிய சத்தியத்தின் தாக்கங்கள் யாது?

## விசுவாசிக்களுக்கான நான்கு தாக்கங்கள்

### 1. நாம் கடவுளுடைய கோபத்திற்கு இன்னமும் பயந்திருக்க வேண்டியதில்லை

நாம் (கடந்த காலம்) கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தபோதிலும் (எபேசியர் 2:3), இப்போது கடவுளின் பிள்ளைகளாகவும், கிறிஸ்துவுடன் சுதந்திரவாளிகளாகவும் இருக்கிறோம் (ரோமர் 8:16-17). 1 தெசலோனிக்கேயர் 1:10 ல் "இயேசுகிறிஸ்து இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிறார்..." என்று நமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

அவிசுவாசிகள் கடவுளின் கோபத்தை விரும்புவதில்லை, ஏனென்றால், அவர்கள் குற்றவாளிகள் என்பதை நன்கு அறிவார்கள். தங்களின் சுய நீதியும் நற்செயல்களும் பரலோகத்திற்கு கொண்டு செல்லும் என்பதே அவர்களுடைய ஒரே நம்பிக்கையாகும். ஒருவர் தனது சொந்த முயற்சியின் மேல் சார்ந்திருப்பது ஒரு வலுவான நம்பிக்கையாக இருக்காது. விசுவாசிகளாகிய நாம் நமது நீதியை நம்பியிருக்காமல், கிறிஸ்துவின் நீதியை மட்டுமே சார்ந்திருக்கிறோம், இது கடவுளின் பரிசுத்தத்தை முழுமையாக திருப்திப்படுத்துகிறது. அதனால்தான், நாம் கிறிஸ்துவில் பாதுகாப்பாக இருக்கிறோம் என்ற உறுதியான மற்றும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருக்கிறோம். எனவே, இனி கடவுளின் கோபத்திற்கு பயப்பட வேண்டியதில்லை.

### 2. நாம் இன்னும் அதிகமாய் நன்றி செலுத்துவோம்

கடவுளின் கோபத்தை நாம் அனுபவிக்க மாட்டோம் என்பதை அறிந்தால், கடவுளுக்கு இன்னும் அதிகமாக நன்றி செலுத்துவோம். நம்முடைய நற்கிரியைகளினால் அல்லாமல், இயேசுகிறிஸ்துவின் மூலம் கடவுள் நமக்காக செய்தவற்றின் காரணமாக நம்முடைய நித்திய எதிர்காலம் மிகவும் பாதுகாப்பாக இருக்கிறது. இந்த சத்தியத்தை நாம் உணரும்போது தொடர்ந்து நன்றி செலுத்துவதில் பெருக வேண்டும் (சங்கீதம் 116:12-13).

### 3. நாம் கடவுளுக்கு அதிகம் பயப்படுவோம், பாவத்தை அதிகமாக வெறுப்போம்

உண்மையான விசுவாசி தன் இரட்சிப்பை இழக்கும் வகையில் கடவுளின் கோபத்தை ஒருபோதும் அனுபவிக்க மாட்டார் என்றாலும், சில சமயங்களில் இரகசிய பாவத்தில் இருக்கும்போது கடுமையான சிட்சையை எதிர்பார்க்கலாம் (1 கொரிந்தியர் 11:28-32). கடவுளின் கோபத்தைத் தொடர்ந்து சிந்திப்பது, பாவத்தைக் கடுமையாக எடுத்துக் கொள்ள விசுவாசிக்கு உதவுகிறது, பாவ வாழ்க்கைக்கு சாக்குப்போக்குகளை கூறாமல், பாவத்தை அதிகமாக வெறுக்க வைக்கிறது. நீதிமொழிகள் 8:13 இவ்வாறு கூறுகிறது, நடைமுறை அர்த்தத்தில் கர்த்தருக்குப் பயப்படுகிற வாழ்க்கையை வாழ்வது என்பது பாவத்தை வெறுப்பதாகும், “தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்.”

### 4. கடவுளின் கோபத்திலிருந்து தப்பி ஓடுமாறு மக்களை வலியுறுத்துவோம்

மக்கள் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்புவதன் மூலம் கடவுளின் கோபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுமாறு யோவான் ஸ்நானகன் வலியுறுத்தினார் (மத்தேயு 3:7). மற்றவர்களை விட நரகத்தைப் பற்றி அதிகமாக இயேசுகிறிஸ்து கூறி கடவுளுக்குப் பயந்து அவரிடம் திரும்புமாறு நம்மை அழைத்திருக்கிறார் (மத்தேயு 10:28). கடவுளின் கோபத்தை புரிந்துகொண்டு கிறிஸ்துவிடம் திரும்பும்படி பவுலும் மக்களை எச்சரித்தார் (2 கொரிந்தியர் 5:11).

நரகத்தைப் பற்றி பிரசங்கிப்பது அன்பற்ற செயல் அல்ல. மாறாக, உலகம் என்ன சொன்னாலும் பரவாயில்லை இது மிகவும் அன்பான விஷயம்! நாம் நேசிக்கிறவர்கள், கிறிஸ்து இல்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தால் அவர்களுக்குக் காத்திருக்கும் நித்திய ஆபத்தைப் பற்றி எப்படி சொல்லாமல் இருக்க முடியும்? கடவுளின் கோபத்தைப் பற்றி பிரசங்கிப்பது மட்டுமல்ல, கிறிஸ்துவின் சிலுவை பலியின் மூலம் அவர் வழங்கும் மன்னிப்பை அறிவிப்பதும் முக்கியமானது (சங்கீதம் 130:3; ரோமர் 3:25-26).

## அவிசுவாசிகளுக்கான இரு தாக்கங்கள்

### 1. கடவுளின் கடந்த காலம்/தற்கால கோபம் எதிர்கால கோபத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது

***கடந்த காலத்தில்.*** இவைகள் கடவுளை நிராகரித்தவர்களுக்கு எதிரான கோபத்தின் ஒரு சில வரலாற்று எடுத்துக்காட்டுகள்: ஏதேன் தோட்டத்திலிருந்து ஆதாமும் ஏவாளும் துரத்தப்படுதல்(ஆதியாகமம் 3), பெரு வெள்ளத்தால் நோவாவின் பேழையில் இருந்தவர்களைத் தவிர இந்த பூமியில் உள்ள அனைத்தையும் அழித்தல் (ஆதியாகமம் 7:23), சோதோம் மற்றும் கொமோராவின் அழிவு (ஆதியாகமம் 19), மற்றும் கி.பி. 70 ல் ரோமர்களால் எருசலேம் அழிக்கப்பட்டது.

***நிகழ்காலத்தில்.*** யோவான் 3:36 இவ்வாறு கூறுகிறது "…குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" இயேசுகிறிஸ்துவை விட்டு வெகு தொலைவில் இருப்பவர்கள் தற்போது கடவுளின் கோபத்திற்கு ஆளாகியுள்ளனர். ரோமர் 1:18 இவ்வாறு கூறுகிறது, " சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது." நிகழ்காலத்தில், பாவிகளை அவர்களின் சொந்த வழிகளில் செல்ல அனுமதிப்பதின் மூலம் கடவுளின் இந்த கோபமானது காட்டப்படுகிறது, அவர்கள் தங்கள் துன்மார்க்கத்தில் நிலைத்திருப்பதால் அதன் விளைவுகளை அறுவடை செய்வார்கள் (ரோமர் 1:24-32).

***எதிர்காலத்தில்.*** 2 தெசலோனிக்கேயர் 1:7-10ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம், "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு,கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து

எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்." கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள் மீது ஊற்றப்படும் கடவுளின் இறுதி கோபத்தை வெளிப்படுத்தல் 6-20 விரிவாக விவரிக்கிறது.

கடவுள் பொய்யுரையாதவர் என்று வேதம் போதிக்கிறது (தீத்து 1:2). கிறிஸ்துவை நிராகரிக்கிற அனைவரையும் நியாயந்தீர்ப்பதாக அவர் வாக்களித்திருப்பதால், அதன்படி தம் வார்த்தையை நிறைவேற்றுவார். கடவுள் ஒவ்வொரு தீய செயலுக்கும் உடனடியாக தீர்ப்பளிக்காததால், அவர் ஒருபோதும் பாவத்தை நியாயந்தீர்க்க மாட்டார் (பிரசங்கி 8:11-14) என்று நினைத்து ஏமாறக்கூடாது.

விசுவாச உழவர் சமூகத்தில் வாழ்ந்த ஒரு அவிசுவாசியின் கதை ஒன்று இவ்வாறு கூறப்படுகிறது: ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையும் திருச்சபையில் இந்த தேவபக்தியுள்ள விவசாயிகள் கூடினபோது, இவர் இடையூறு விளைவிக்க தனது டிராக்டரை இயக்குவார்; இப்படி பல மாதங்கள் செய்தார். இறுதியாக, அக்டோபரில் அறுவடை நேரம் வந்தபோது, அவரது ஒரு ஏக்கர் நிலத்தில் அதிக மகசூல் கிடைத்தது. பெருமையுடன், அவர் கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும் எதிராக இருந்தபோதும், தான் பெற்ற வெற்றியை உள்ளூர் செய்தித்தாளுக்கு எழுதினார்.

அந்த திருச்சபையின் போதகர் ஒரே வாக்கியத்தில் அதற்கு இவ்வாறு பதிலளித்தார்: "கடவுள் தமது கணக்குகளை அக்டோபரிலேயே தீர்த்துவிடுவதில்லை."

அன்புள்ள நண்பரே, நீங்கள் இரட்சிக்கப்பட்டவராக இல்லாவிட்டால், கடவுள் உங்களைக் குறித்து மகிழ்ச்சியடைவார் என்று நினைக்காதீர்கள், ஏனென்றால் இன்று எல்லாம் நன்றாக இருக்கிறது. உங்கள் பாவத்தைப் பார்த்துக்கொண்டு அவர் பொறுமையாக இருக்கிறார் என அவருடைய பொறுமையை தவறாக எண்ணாதீர்கள். அவருடைய நற்குணம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு அல்ல, மாறாக உங்களை உண்மையான மனந்திரும்புதலுக்கும் அவருடைய குமாரனில் விசுவாசம் வைக்கும்படிக்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது (ரோமர் 2:4-5).

### 2. எதிர் வரும் கடவுளுடைய கோபம் உங்களை இயேசுகிறிஸ்துவிடம் கிட்டிச்சேர்க்க வேண்டும்

"ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுகிறது பயங்கரமானதாக இருக்கும்" (எபிரெயர் 10:31) என்று வேதம் கூறுகிறது. உங்கள் பாவங்கள் உங்களை கடவுளுக்கு எதிரியாக்கிவிட்டன என்பதை தயவுசெய்து உணருங்கள். இதன் விளைவாக, அவருடைய கோபம் நிகழ்காலத்தில் உங்கள் மீது தங்கியுள்ளது மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்காக காத்திருக்கிறது. தயவுசெய்து கிருபைக்காக மன்றாடுங்கள். "வரவிருக்கும் கோபத்திலிருந்து தப்பி ஓட" நீங்கள் விரும்ப வேண்டும்

(மத்தேயு 3:7) மற்றும் கடவுளின் கோபத்தை தம்மீது சுமந்த இயேசு கிறிஸ்துவின் சிலுவையை கிட்டிச்சேர வேண்டும், இதனால் அவர் உங்கள் பாவங்களை இலவசமாக மன்னிக்க முடியும். நீங்கள் சுயநம்பிக்கையை தூக்கி எறிந்துவிட்டு, "கடவுளே, பாவியான என்மீது கிருபையாய் இரும்!" என்று பணிவுடன் மன்றாட வேண்டும் (லூக்கா 18:13). வரவிருக்கும் கோபாக்கினையிலிருந்து நீங்கள் விடுபடுவதற்கான ஒரே வழி இதுதான்.

அன்புள்ள நண்பரே, கடவுளின் நற்குணத்தையும், பொறுமையையும் போல இனிமையானது வேறு எதுவும் கிடையாது. அதேபோல, அவரது வரவிருக்கும் கோபத்தை விட பயங்கரமானதும் எதுவும் இல்லை. உங்கள் தாகத்தைத் தணிக்கக்கூடிய அதே தண்ணீர், பெரு வெள்ளமாக வரும்போது உங்கள் பயங்கர எதிரியாகவும் மாறுகிறது. உணவை சமைக்கக்கூடிய அதே நெருப்பு உங்களை எரிக்கும் போது பயங்கரமான எதிரியாகவும் மாறிவிடக்கூடும். அதேபோல், இன்று உங்களிடம் பொறுமையாகவும் நல்லவராகவும் இருக்கும் அதே கடவுள் ஒரு நாள் உங்களுக்கு எதிராக பயங்கரமான பழிவாங்கலுடன் திரும்புவார். அந்நாளில் அவர் கரத்திலிருந்து உங்களை யாராலும் விடுவிக்க முடியாது. எவ்வளவு அழுதாலும் கெஞ்சினாலும் உங்களை யாரும் காப்பாற்ற முடியாது. பாவங்களுக்காக சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைப் பாருங்கள். அவர் மூலம் முழுமையான மன்னிப்பு கிடைக்கிறது.

எனவே, உண்மையான மனந்திரும்புதலுடனும், விசுவாசத்துடனும் இப்போதே அவரிடம் திரும்புங்கள்! நீங்கள் எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் அவர் உங்களை ஏற்றுக்கொண்டு உங்களுக்கு ஒரு புதிய தொடக்கத்தைத் தருவார்! உங்கள் பாவங்களில் மரிக்காதீர்கள். தயவு செய்து இயேசு கிறிஸ்துவின் மூலம் கடவுளின் இலவச ஈவான நித்திய ஜீவனைப் பெறுங்கள் (ரோமர் 6:23)!

## கலந்துரையாடல் கேள்விகள்

1. தேவனுடைய கோபத்தைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
2. தேவனின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் உங்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம்?
3. தேவனின் இந்தப் பண்பு உங்கள் ஜெப வாழ்க்கையில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
4. தேவனின் இந்தப் பண்பு உங்கள் பிரசங்கங்களில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**சங்கீதம் 7:11** - *தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்.*

**ஜெபம்**

பிதாவே, நீர் என் பரலோகத் தகப்பனாக இருந்தாலும், கோபத்தின் கடவுள் என்பதை நான் அடிக்கடி மறந்து விடுகிறேன். நீர் பாவத்தை வெறுக்கிறீர், அதை நியாயந்தீர்ப்பீர். நான் சுமக்க வேண்டிய அனைத்து கோபத்தையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஏற்றுக்கொண்டதற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். தயவு செய்து என்னை பயத்துடனும், நடுக்கத்துடனும் நடக்கச் செய்யும், அது பாவத்தை இலகுவாக எடுத்துக்கொள்ளாமல் என்னைக் காக்கும். உமக்கு எதிராகக் கலகம் செய்யும் அனைவரும் இயேசுகிறிஸ்துவிடம் கிட்டிச்சேர இது என்னை மன்றாடச் செய்யட்டும், உமது வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிலிருந்து என்னைக் காப்பாற்றக்கூடியவர் நீர் ஒருவரே. மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும்போது, உமது கோபத்தைத் தவிர்க்காமல், அன்புடனும், மிகுந்த தீவிர உணர்வுடனும் பிரசங்கிக்க எனக்கு உதவியருளும். ஆமென்!

# கடவுளின் உண்மைத்தன்மை

*கடவுள் தமது வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவார் என்பதே அவரின் உண்மைத்தன்மை.*

நீதிமொழிகள் 20:6 ல் சாலொமோன் இவ்வாறு எழுதுகிறார், "மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பிரசித்தப்படுத்துவார்கள்; உண்மையான மனுஷனைக் கண்டுபிடிப்பவன் யார்?" இந்த நீதிமொழியின் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் உலகில் நாம் வாழ்கிறோம். மனிதர்களின் துரோகத்தால் நட்பு, திருமணங்கள், வியாபாரம் ஆகியவை முறிந்துவிடுகின்றன. இறுதிவரை உண்மையாக இருப்பதாக உறுதியளித்த அதே நபர்களிடமிருந்து ஒருவேளை நீங்களும் துரோகத்தின் ஆழமான வலியை உணர்ந்திருக்கலாம்.

இத்தகைய இருள் நிறைந்த நிகழ்வுகளில், கடவுளின் உண்மைத்தன்மை என்ற இந்தப் பண்பு வேதனைப்படும் ஆத்துமாவுக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது. உபாகமம் 7:9-ல் கடவுளின் உண்மைத்தன்மையை வேதம் இவ்வாறு தெளிவாக அறிவிக்கிறது, "ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன்." உபாகமம் 32:4ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம், "அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்."

தங்கள் உண்மைத்தன்மையில் அடிக்கடி அலைந்தாடும் விழுந்துப்போன மனிதர்களைப் போலல்லாமல், கடவுள் ஒருபோதும் தம் உண்மைத்தன்மையில் மாறுவதில்லை. எண்ணாகமம் 23:19-ல் மோசே நமக்கு இவ்வாறு நினைவூட்டுகிறார், "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" சங்கீதம் 89:8ல் சங்கீதக்காரன் இவ்வாறு கூறுகிறார், "சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல் வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது." "பொய்யுரையாத தேவன்" (எபிரெயர் 6:18) என்று தீத்து 1:3ல் பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். "தேவன் பொய் சொல்லமாட்டார்" என்று எபிரெய எழுத்தாளர் கூறுகிறார். "தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்" (நீதிமொழிகள் 30:5) என்று ஆகூர் நமக்கு கூறுகிறார். கர்த்தர் தமது ஊழியக்காரரின்

ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்; அவரை நம்புகிற ஒருவன் மேலும் குற்றஞ்சுமராது (சங்கீதம் 34:22).

வெய்ன் க்ரூடெம் இவ்வாறு கூறுகிறார்: "கடவுளை அவருடைய வார்த்தையின்படி புரிந்து கொள்வதும், அவர் வாக்குறுதியளித்ததைச் செய்ய அவரைச் சார்ந்திருப்பதுமே உண்மையான விசுவாசத்தின் சாராம்சம். மேலும் கடவுள் தம்முடைய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு உண்மையுள்ளவராக இருக்கிறார். “நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை” (புலம்பல் 3:22-24).

கடவுள் தம் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும் உண்மைத்தன்மையின் எடுத்துக்காட்டுகளால் வேதம் நிரம்பியுள்ளது. அவற்றில் ஒரு சில உதாரணங்களைப் பார்ப்போம்.

1. **ஆதியாகமம்** 8:22ல், நோவாவுக்கு கடவுள் வாக்குறுதி அளித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. "பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.” ஆண்டுதோறும் இது நிறைவேறுவதை நாம் காண்கிறோம்.
2. ஆதியாகமம் 15:13-16 இஸ்ரவேலர்கள் 400 ஆண்டு கால அடிமைத்தனத்தை அனுபவித்த பின்னர் விடுதலையாவார்கள் என்ற வாக்குறுதியை முன்னறிவித்தார். இந்த விடுதலையின் நிறைவேற்றத்தை யாத்திராகமம் 12:41 இவ்வாறு பதிவு செய்கிறது: “நானூற்று முப்பது வருஷம் முடிந்த அன்றைத்தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது.”
3. ஏசாயா 7:14 ல், இயேசுகிறிஸ்துவின் கன்னிப் பிறப்பு பற்றிய தீர்க்கதரிசனம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது, "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.” இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தை மத்தேயு 1:22-25 பதிவு செய்கிறது.

மேலே குறிப்பிட்டுள்ள மூன்று உதாரணங்களைத் தவிர மேலும் பலவற்றை குறிப்பிடலாம். “அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.” என்று கூறப்பட்டிருப்பது போல் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்பது தெளிவாகிறது. இந்த பாடத்தின் எஞ்சிய பகுதி கடவுளின் உண்மைத்தன்மையின் 2 அம்சங்களில் கவனம் செலுத்துகிறது:

1. **அவருடைய** பிள்ளைகளின் வாழ்க்கையில்
2. அவருடைய சத்துருக்களின் வாழ்க்கையில்.

## 1. அவருடைய பிள்ளைகளின் வாழ்வில் கடவுளின் உண்மைத்தன்மை

***அவர்களைப் பாதுகாப்பதில்.*** 1 கொரிந்தியர் 1:8-9ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது, “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார். தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.” நமது இரட்சிப்பின் பாதுகாப்பு கடவுளின் உண்மைத்தன்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதே இதன் இறுதி அர்த்தம். நம்முடைய இரட்சிப்பின் பாதுகாப்பைப் பற்றி இயேசு கிறிஸ்து இந்த விலைமதிப்பற்ற வார்த்தைகளால் கூறினார், “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை” (யோவான் 10:27-28). அதுமட்டுமல்லாமல், இயேசுகிறிஸ்து தம்முடைய பிரதான ஆசாரிய ஜெபத்திலும் நம்முடைய பாதுகாப்பிற்காக இவ்வாறு ஜெபித்தார்: "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்” (யோவான் 17:11).

***அவர்களை சிட்சிப்பதில்*.** கடவுளின் உண்மைத்தன்மை நம்மை பாதுகாப்பதில் மட்டுமல்லாமல், நம்மை சிட்சிப்பதிலும் காட்டப்படுகிறது. கடவுளின் சிட்சையின் வழியாக நாம் செல்லும்போது சகித்துக்கொள்ள எபிரெயர் 12:4-11 ஆம் வசனங்கள் நம்மை ஊக்குவிக்கிறது. கடவுளால் சிட்சிக்கப்படுவது (அல்லது பயிற்றுவிக்கப்படுவது) நாம் அவருடைய உண்மையான பிள்ளைகள் என்பதற்கு நேர்மறை ஆதாரம் என்று எழுத்தாளர் கூறுகிறார், மேலும் ஒரு உண்மையுள்ள கடவுள் நம்மை அவருடைய குமாரனைப் போல மாறுவதற்காக அதைச் செய்கிறார். இந்த சத்தியத்தை எடுத்துக்காட்டும் சில வசனப்பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

> **எபிரெயர் 12: 7-8, 10-11 -** *நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.*

"கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும் உண்மையின்படி என்னை உபத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன்." (சங்கீதம் 119:75) என்று சங்கீதக்காரன்

சொல்வதில் எந்த ஆச்சரியமுமில்லை. ஒரு உண்மையுள்ள கடவுள் நம்மை மிகவும் பரிசுத்தமாக்குவதற்கு எந்த விலைக்கிரயத்தையும் கொடுக்கிறார்.

***அவர்களை மகிமைப்படுத்துவதில்.*** கடவுளின் உண்மைத்தன்மை நம்மைப் பாதுகாப்பதிலும், நம்மை சிட்சிப்பதிலும் மட்டுமல்லாமல், நம்மை மகிமைப்படுத்துவதிலும் காட்டப்படும், அங்கு நாம் இயேசுகிறிஸ்துவைப் போல மறுரூபமாக்கப்படுவோம். ரோமர் 8:30ல் நமக்கு இவ்வாறு வாக்களிக்கப்பட்டிருக்கிறது, “எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.”

"அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்” என்ற சொற்றொடர் இன்னும் நடக்கவில்லை என்றாலும் கடந்த காலத்தில் தோன்றுவதைக் கவனியுங்கள். இதினால் என்ன பயன் என்று நீங்கள் கேட்கலாம்? அது எளிமையானது. கடவுளின் பார்வையில், நாம் மகிமையடைவது ஒரு முடிந்த ஒப்பந்தம். அதனால் தான் அது கடந்த காலத்தில் உள்ளது. உண்மையுள்ள கடவுள் அவருடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்று நாம் அதிகமாக நம்பலாம். பவுல் பிலிப்பியர் 1:5, 6ல், "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிற பொழுது என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.” என்று எழுதியதில் ஆச்சரியமில்லை.

1 தெசலோனிக்கேயர் 5:23-24 ல் கூறப்பட்டுள்ளபடி, நாம் மகிமைப்படுத்தப்படுவதற்கான வாக்குத்தத்தங்கள் அனைத்தும் கடவுளின் உண்மைத்தன்மையின் அடித்தளமாக உள்ளன, “சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.” பவுலை மகிமைப்படுத்துவதில் கடவுளின் உண்மைத்தன்மை, “அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்” (2 தீமோத்தேயு 1:12) என்ற நம்பிக்கையான வார்த்தைகளை அவரது பெரும் துன்பங்களுக்கு மத்தியிலும் கூற வைத்தது.

பாவத்தை எதிர்த்துப் போராடும்போதும், கடுமையான சோதனைகளைச் சந்திக்கும்போதும் நாம் சோர்ந்து போக வேண்டியதில்லை, என 1 கொரிந்தியர் 10:13-ல் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது, “மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.” “தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்” என்று பவுல் சொன்னபோது, நாம் சோதனைகளிலிருந்து

தப்பிப்போம் என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, சோதனைகள் மிகப் பெரியதாகத் தோன்றினாலும், அதைத் தாங்கும் வலிமையை உண்மையுள்ள கடவுள் நமக்குத் தருவார் என்று நாம் நம்பலாம். சில சமயங்களில், அதன் விளைவு மரணமாக இருந்தாலும், நாம் அவரை ஒருபோதும் நிராகரிக்காதப்படிக்கு நம்மை பலப்படுத்த கடவுள் இன்னும் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்!

"உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" (எபிரெயர் 13:5) என்று இந்த உண்மையுள்ள கடவுள் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணினதை மறந்துவிடக்கூடாது. இறுதி வரை நம்மோடு இருப்பேன் என்று இயேசுகிறிஸ்துவும் வாக்களித்துள்ளார், "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" (மத்தேயு 28:20). கடவுளை அவருடைய வார்த்தையின்படி புரிந்து கொள்வதும், அவர் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற அவரைச் சார்ந்திருப்பதுமே விசுவாசமாகும், ஏனென்றால் அவர் ஒரு உண்மையுள்ள கடவுள்; சூழ்நிலை இருண்டதாக இருந்தாலும் அவர் தமது வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி ஆபகூக், இப்படியே செய்தார், அதன் விளைவாக, அவரது இருதயத்தில் மகிழ்ச்சியை அனுபவித்தார்: "அத்திமரம் துளிர் விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" (ஆபகூக் 3:17-18).

அன்புள்ள விசுவாசிகளே, நீங்கள் ஒரு கடினமான சூழலைக் கடந்து செல்கிறீர்களா? மற்றொரு நாளைக் கடந்து செல்வது உங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறதா? சோர்ந்து போகாதிருங்கள். ஆபகூக்கைப் போல, சூழ்நிலை நம்பிக்கையற்றதாகத் தோன்றினாலும், இந்த உண்மையுள்ள கடவுளை நம்புங்கள். அவர் உங்களை கடைசி வரை சுமந்து செல்வார். சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் முன்னேறுங்கள்! ஏசாயா 46:4ல், "உங்கள் முதிர் வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன்; நரை வயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன்; நான் அப்படிச் செய்து வந்தேன்; இனி மேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்" என அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.

### 2. அவருடைய சத்துருக்களின் வாழ்வில்

கடவுள் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற உண்மையுள்ளவராக இருப்பது போலவே, தம்மை நிராகரிப்பவர்களை நியாயந்தீர்ப்பதிலும் அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் இரட்சிப்பதிலும், நியாயந்தீர்ப்பதிலும் உண்மையுள்ளவர். கடவுளின் கடந்தகால தீர்ப்புகள் சந்தேகத்திற்கு இடமின்றி, அவருக்கு எதிராக கலகம் செய்பவர்களை நியாயந்தீர்த்ததின் மூலம் அவருடைய உண்மைத்தன்மையை நிரூபிக்கின்றன. நோவாவின் காலத்தில் மனந்திரும்பாத உலகத்தை பெரு வெள்ளத்தின் மூலம் அவர் தீர்ப்பளித்தார் (ஆதியாகமம் 6-8). நோவாவையும்

அவனுடைய குடும்பத்தையும் தவிர வேறு யாரும் உயிர் பிழைக்கவில்லை, கடவுளின் பார்வையில் கிருபை பெற்றவர்கள் மட்டுமே உயிர் பிழைத்தனர். அதேபோல, அவிசுவாசிகளை வனாந்திரப் பயணத்தின்போதும் கடவுள் நியாயந்தீர்த்தார், ஏனென்றால் அவர்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு போவதற்கு அவரை விசுவாசிக்கத் தவறினார்கள் (எண் 14:26-34; எபிரெயர் 3:15-19). கடந்த காலத்தில் தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்பின் மூலம் தம்முடைய உண்மைத்தன்மையை வெளிப்படுத்தியதால், எதிர்காலத்திலும் அவர் உண்மையுள்ளவராக இருப்பார் என்பதை நாம் உறுதியாக நம்பலாம்!

தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பவும், இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவும் தவறிய அனைவருக்கும் அக்கினி அல்லது நரகத்தின் எதிர்காலத் தீர்ப்பை கடவுள் நிர்ணயித்துள்ளார். வெளிப்படுத்தல் 20:15 இவ்வாறு கூறுகிறது, "ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்." இது நிச்சயமாக நடக்கும். "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்கள் எல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெசலோனிக்கேயர் 1:7-10).

தமது நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவதில் கடவுள் உண்மைத்தன்மையுடன் இருக்கிறார் என்ற வெளிச்சத்தில், நீங்கள் அவருடைய பிள்ளையாக இல்லாமல், பகைஞராக இருந்தால் உங்கள் எதிர்வினை என்னவாக இருக்க வேண்டும்?

முதலில், உங்கள் படைப்பாளரான கடவுளுக்கு எதிராக நீங்கள் பாவம் செய்துள்ளீர்கள் என்பதைக் காணும் கண்களைத் திறக்கும்படி அவரிடம் கேளுங்கள். பிறகு நீங்கள் பாவத்தின் தண்டனைக்குப் பாத்திரமானவர்கள் என்றும் "ஆண்டவரே, நான் உமக்கு எதிராக பாவம் செய்தேன், நான் குற்றவாளி" என்றும் அவரிடம் அறிக்கையிடுங்கள். எந்த சாக்குபோக்கும் சொல்லாதீர்கள். உங்கள் பாவங்களுக்காக நீங்கள் வருந்துவதாகவும், பாவ வாழ்க்கையிலிருந்து திரும்ப விரும்புவதாகவும் அவரிடம் சொல்லுங்கள். இதைத்தான் "மனந்திரும்புதல்" என்று வேதம் அழைக்கிறது. ஆனால் அது போதாது. இறுதியாக, விசுவாசத்தின் மூலம், இயேசுகிறிஸ்துவின் வழியாய் கடவுள் வழங்கும் மன்னிப்பை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும், இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்து, மீண்டும் உயிர்த்தெழுந்தது பாவங்களுக்கான முழு விலைக்கிரயத்தையும் செலுத்தினார் என்று விசுவாசிக்க வேண்டும். அப்படித்தான் உங்கள் பாவங்களிலிருந்து விடுபடவும், கடவுளின் கோபத்திலிருந்து நீங்கள்

தப்பிக்கவும் முடியும். நீங்கள் அவருடைய பிள்ளையாக மாறுவதும் அப்படித்தான் (யோவான் 1:12).

“ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்” (ரோமர் 10:13) என்று வேதம் உறுதியளிக்கிறது. இயேசுகிறிஸ்துவை உங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளுங்கள். மூழ்கி ஞானஸ்நானம் எடுத்து, வெளியரங்கமாக சாட்சியமளிப்பதன் மூலம் உங்கள் மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் அறிக்கையிடுங்கள் (அப்போஸ்தலர் 8:36-38). ஞானஸ்நானம் என்பது கடவுளின் பிள்ளையான பிறகு கீழ்ப்படிதலின் முதல்படியாகும் (அப் 2:41).

தங்கள் பாவங்களாலும் குற்றங்களாலும் பாரப்பட்டிருக்கிற அனைவரையும் தம்மிடம் வரும்படி இயேசுகிறிஸ்து இவ்வாறு அழைக்கிறார்: “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (யோவான் 6:37). இயேசுகிறிஸ்து தம் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர். கிறிஸ்துவிடம் வந்து அவருடைய மன்னிப்பை அனுபவியுங்கள். அவரிடம் வருவதை எதுவும் அல்லது யாரும் தடுக்க வேண்டாம். இயேசுகிறிஸ்துவிடம் வருவதற்கு செலுத்தும் விலைக்கிரயத்தை விட அவரிடம் இருந்து விலகி இருப்பதற்கான விலைக்கிரயம் மிகவும் அதிகம். உங்கள் வாழ்க்கை உட்பட எல்லாவற்றையும் துறந்தாலும் கூட பரவாயில்லை. அது உங்களை இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியப்படுத்தட்டும். முடிவில், நீங்கள் கைவிட்ட எல்லாவற்றையும் விட, உண்மையான மற்றும் நிலையான பொக்கிஷமான இயேசுகிறிஸ்துவைக் காண்பீர்கள்.

நண்பரே! இந்த உண்மையுள்ள கடவுள் *மன்னிக்கிறவர்* என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் உங்கள் பாவங்கள் கழுவப்படட்டும். நான் அன்பான இருதயத்துடன் உங்களிடம் வேண்டுகிறேன். இயேசுகிறிஸ்துவிடம் வாருங்கள். ஒரு நீதிபதியாக அவரை சந்திப்பதை விட மீட்பராக சந்தியுங்கள். வரப்போகும் நியாயத்தீர்ப்பை விட்டு விலகி ஓடுங்கள். நீங்கள் எவ்வளவு பாவம் செய்திருந்தாலும், உண்மையான சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் இயேசுகிறிஸ்துவில் காணலாம். பின்னர், நீங்களும் தாவீதைப் போல மற்ற கடவுளின் பிள்ளைகளுடன் சேர்ந்து, "கர்த்தாவே, உமது கிருபை வானங்களில் விளங்குகிறது; உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது." (சங்கீதம் 36:5) என்று சொல்லலாம்.

### கலந்துரையாடல் கேள்விகள்

1. கடவுளின் உண்மைத்தன்மைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
2. கடவுளின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் நீங்கள் என்ன விதமான வாழ்க்கை மாற்றங்களைச் செய்யலாம்?

3. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் ஜெபங்களில் எவ்வகை தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
4. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் நற்செய்தி பிரசங்கத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**சங்கீதம் 89:8** - *சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல் வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மைச் சூழ்ந்திருக்கிறது.*

## ஜெபம்

கிருபையுள்ள கடவுளே, அன்பான பிதாவே, மக்கள் தங்கள் வாக்குறுதிகளை மிகவும் சாதாரணமாக மீறும் உலகில், உம்முடைய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராக இருப்பதினால் நான் உம்மை போற்றுகிறேன். மரண இருளின் பள்ளத்தாக்கின் வழியாக நான் நடக்கும்போதும், உமது உண்மைத்தன்மையை நினைவுகூர எனக்கு உதவும். எப்பொழுதும் என்னுடன் இருப்பேன் என்று உறுதியளித்துள்ளீர். நீர் என்னுடன் இல்லாததாக உணரும்போது, உம் வார்த்தையின்படி உம்மை பின் செல்ல எனக்கு உதவும். என்னுள் நற்செயலை தொடங்கிய நீர் ஒரு நாள் அதைச் செய்து முடிப்பீர் என்று நம்புவதற்கு என் இருதயத்தைப் பலப்படுத்தும். மற்றவர்களுக்கு நான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உம்மைப் பின்பற்ற என் இருதயத்தைத் தூண்டுவீராக. தயவு செய்து விசுவாசத்தால் செயல்பட எனக்கு உதவும். ஆமென்!

## கடவுளின் ஏகாதிபத்தியம்

*வாழ்க்கையின் அனைத்து நிகழ்வுகளின் மீதான கடவுளின் முழுமையான கட்டுப்பாடும்... வேதத்தில் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு விரோதமான செயல்களின் அறிவும்...*

கடவுளின் ஏகாதிபத்தியத்தைப் பற்றி ஒரு விசுவாசி எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்பதற்கு பின்வரும் கதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு:

> *பிரிட்டிஷ் பேரரசின் அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ ஆற்றல் அதன் உச்சத்தில் இருந்தப்போது விக்டோரியா மகாராணி 1902 ஆம் ஆண்டு மறைந்த நிலையில், 64 ஆண்டுகளுக்கு பின்னர் பிரிட்டனில் இளவரசர் ஏழாம் எட்வர்டிற்கு முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது. இந்தப் பிரகடனத்தை செய்தித்தாளில் படித்துக் கொண்டிருந்த ஒரு மனிதர் தனது மனைவியிடம், "ஐயோ, இது போன்ற வார்த்தைகளைக் கண்டு வருந்துகிறேன்" என்றார்.*
>
> *அதற்கு அவள், "என்ன அது?" என்றாள்.*
>
> *அதற்கு அவர் "ஒரு குறிப்பிட்ட தேதியில் இளவரசர் எட்வர்ட் வெஸ்ட்மின்ஸ்டரில் இராஜாவாக முடிசூட்டப்படுவார் என்று ஒரு பிரகடனம் உள்ளது, அதில் கடவுளுக்கு சித்தமானால் என்ற வார்த்தையில்லை." என்று பதிலளித்தார்.*
>
> *இதற்கிடையே இளவரசர் ஏழாம் எட்வர்ட் குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டப்படியால் முடிசூட்டு விழா ஒத்திவைக்கப்பட்டது.*
>
> *பிரிட்டன் பேரரசால் அதன் பெரும் பலத்தினாலும், நியமிக்கப்பட்ட தேதியில் அதன் திட்டமிட்ட முடிசூட்டு விழாவை நடத்த முடியாததை அறிந்த அவருடைய மகன் தகப்பனின் மேற்கூறிய வார்த்தைகளை நினைவுக்கூர்ந்தான். பிரகடனத்தில் "கடவுளின் சித்தமானால்" என்ற வார்த்தை இல்லாததும், முடிசூட்டு விழா ஒத்தி வைக்கப்பட்டதும் வெறும் தற்செயல் நிகழ்வுகளா, ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இரு நிகழ்வுகளா? அல்லது கடவுள் இளவரசர் எட்வர்டுக்கு குடல் அழற்சியை ஏற்படுத்தி விட்டாரா?*

*ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்று தெரியவில்லை. எவ்வாறாயினும், ஒரு விஷயம் நமக்குத் தெளிவாகிறது: நாம் ஒப்புக்கொண்டாலும், இல்லாவிட்டாலும் கடவுளின் சித்தத்திற்கு மாறாக எந்த திட்டத்தையும் நாம் செயல்படுத்த முடியாது. வேதம் அந்த சத்தியத்தைப் பற்றி எந்த சந்தேகமும் இல்லாமல் கூறுகிறது. கடவுள் ஆளுகை செய்கிறார்; அவர் இறையாண்மை உடையவர். தமக்கு விருப்பமானதைச் செய்கிறார், நாம் திட்டமிட்டதை செய்ய முடியுமா என்பதை அவர் தீர்மானிக்கிறார்; தாம் விரும்பியபடி செய்ய தமது முழுமையான சுதந்திரம் மற்றும் அனைத்து படைப்புகளின் மீது தமது முழுமையான ஆளுகையைக் கொண்டுள்ளார். இதுவே கடவுளின் இறையாண்மையின் சாராம்சமாக இருக்கிறது. எந்தவொரு உயிரினமும், மனிதனும் அல்லது பேரரசும் அவரது விருப்பத்தைத் தடுக்கவோ அல்லது அவரது விருப்பத்தின் எல்லைக்கு வெளியே செயல்படவோ முடியாது.*

ஆர்தர் பிங்க் இவ்வாறு கூறுகிறார்: "கடவுள் இறையாண்மையுள்ளவர் என்று நாம் கூறும் போது, அவர் விரும்பியபடியே தமது சொந்த மகிமைக்காக உருவாக்கிய பிரபஞ்சத்தை ஆளும் உரிமையை உறுதிப்படுத்துகிறோம். அவருடைய உரிமை களிமண்ணின் மீது குயவனுக்கு உள்ள உரிமை என்பதை நாம் அறிக்கையிடுகிறோம்...அவர் தமது சொந்த விருப்பத்திற்கும், இயல்பிற்கும் வெளியே எந்த விதிமுறை அல்லது சட்டத்தின் கீழும் இல்லை என்பதையும், கடவுள் தாமே ஒரு சட்டம் என்பதையும், அவர் எவருக்கும் கணக்கு கொடுக்க வேண்டிய கடமை இல்லை என்பதையும் நாம் உறுதிப்படுத்துகிறோம்." ஆம், அவருடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு விரோதமான செயல்கள் உட்பட வாழ்க்கையின் அனைத்து நிகழ்வுகளின் மீதும் கடவுள் முழுமையாக ஆளுகைச் செய்கிறார். அவர் தமது சிறந்த ஞானத்தில், நல்ல நோக்கங்களை நிறைவேற்ற மனிதர்கள் மற்றும் பிசாசின் தீய செயல்களையும் பயன்படுத்துகிறார்.

கடவுளின் இராஜரீகத்தைப் பற்றி நமக்குக் கற்பிக்கும் சில வேத வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆதியாகமம் 50:20 -** *நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப் பண்ணினார்*

**ஏசாயா 46:9-10 -** *முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன் எனக்குச் சமானமில்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதி முதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்.*

**யோபு 42:2 -** *தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.*

**சங்கீதம் 115:3 -** *நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்.*

**நீதிமொழிகள்** 19:21 - *மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்.*

**நீதிமொழிகள்** 21:30 - *கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை.* [31]*குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.*

**புலம்பல்** 3:37 - *ஆண்டவர் கட்டளையிடாதிருக்கக் காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்?*

கடவுள் " தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிறவர்" (எபேசியர் 1:12) என்று பவுல் கூறுகிறார். சுருக்கமாக கூறுவதென்றால் அது கடவுளின் இராஜரீகமாக இருக்கிறது, கடவுள் தமது விருப்பத்திற்கும் மகிழ்ச்சிக்கும் ஏற்ப எல்லாவற்றையும் செய்கிறார். கடவுள் ஒருபோதும் பாவத்தை உருவாக்கியவர் அல்ல (ஆபகூக் 1:13; யாக்கோபு 1:13). இருப்பினும், அவர் நன்மையானதும், மகிமையானதுமான தமது நோக்கங்களை (ஆதியாகமம் 50:20) நிறைவேற்றுவதற்காக, தமது இராஜரீகத்திற்கு ஏற்ப பரிசுத்த இயல்பை ஒருபோதும் சமரசம் செய்யாமல் தீமையையும் பயன்படுத்துகிறார். இதை அவரால் எப்படிச் செய்ய முடிகிறது என்பதை நமது வரையறுக்கப்பட்ட மனங்களால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது.

தீமை நடந்தாலும் கடவுளின் கட்டுப்பாட்டில் அது இருக்கிறது என்ற சத்தியத்தை ஆதரிக்கும் வேத வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**யாத்திராகமம்** 4:11 - அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா?

**உபாகமம்** 32:39 - *நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை என்பதை இப்பொழுது பாருங்கள்; நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன்; நான் காயப்படுத்துகிறேன், நான் சொஸ்தப்படுத்துகிறேன்; என் கைக்குத் தப்புவிப்பார் இல்லை.*

**யோபு** 2:10 - *தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள். அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை.*

**ஏசாயா** 45:7 - *ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்து தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்.*

> **புலம்பல் 3:37-38** - *ஆண்டவர் கட்டளையிடாதிருக்கக் காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்? உன்னதமானவருடைய வாயிலிருந்து தீமையும் நன்மையும் புறப்படுகிறதில்லையோ?*

*மற்றவர்களை குணப்படுத்த கடவுள் பயன்படுத்திய எலிசா ஒரு நோயால் மரித்தான் என்பதும் சுவாரஸ்யமானது.*

> 2 **இராஜாக்கள் 13:14** - *அவன் நாட்களில் எலிசா மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான்; அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் அவனிடத்துக்குப் போய், அவன்மேல் விழுந்து, அழுது: என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாயிருந்தவரே என்றான்.*

எனவே, நன்மை மற்றும் தீமை ஆகிய அனைத்து விவகாரங்களின் மீதும் கடவுள் இறையாண்மை கொண்டவர் என்பதை மேற்கண்ட வேத வசனங்களிலிருந்து நாம் தெளிவாகக் காணலாம்.

அப்படியானால், கடவுளுடைய இறையாண்மையின் சில நடைமுறைத் தாக்கங்கள் யாவை? மொத்தம் நான்கு குறிப்புகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

### 1. இது பிரபஞ்சத்தில் உன்னதமானவராக கடவுளை கனப்படுத்துகிறது

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்தப் பண்பு கடவுள் எல்லாவற்றின் மீதும் இராஜாவாக ஆளும் உரிமை உடையவர் என்றும் ஒப்புக்கொள்கிறது! அவரே படைத்தவர் என்றும் நாம் படைக்கப்பட்டவர்கள் என்றும் இது நமக்கு நினைவூட்டுகிறது. கடவுளுக்கு நாம் தேவையில்லை; மாறாக நம் அடுத்த மூச்சுக்கு அவர் தேவை!

ஏசாயா தீர்க்கதரிசி மூலம் கடவுள் நமக்கு இவ்வாறு கூறுகிறார், "நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்" (ஏசாயா 42:8). கடவுளின் முழுமையான இராஜரீகத்தை அங்கீகரிப்பதன் மூலம், நாம் அவருக்கு முழு மகிமையைக் கொடுக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் கடவுளின் மகிமைக்காகப் படைக்கப்பட்டுள்ளோம்: "நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்" (ஏசாயா 43:7)! எனவே, எல்லாவற்றின் மீதும் கடவுளின் இராஜரீகத்தை ஏற்றுக்கொண்டு, இப்பிரபஞ்சத்தில் உன்னதமானவரான கடவுளுக்கு உரிய இடத்தை வழங்குவோம்!

### 2. இது நம்மை தாழ்மையுள்ளவர்களாக்குகிறது

கடவுள் எப்பொழுதும் தாழ்மையான இருதயத்தை விரும்புகிறார் என்பதால், "அவரே எல்லாவற்றிற்கும் பொறுப்பாளி; நாம் அல்ல!" என்று பொறுப்பைத் தட்டிக்கழிப்பதல்ல, மாறாக கடவுள் யார், அவர் நமக்காக என்ன செய்திருக்கிறார் என்பதற்காக அவரை மேன்மைப்படுத்துவதாகும்!

உலகை ஆண்ட மிக சக்திவாய்ந்த இராஜாக்களில் ஒருவராக இருந்த நேபுகாத்நேச்சார், ஒரு இராஜரீகமுள்ள கடவுள் மனிதனின் பெருமையை எவ்வாறு தாழ்த்துகிறார் என்ற

பாடத்தைக் கடினமான வழியில் கற்றுக்கொண்டான். அவன் தன் சாதனைகளைப் பற்றி பெருமையடித்துக்கொண்டு, கடவுளுக்கு மகிமையைச் செலுத்தத் தவறியதால் பெருமை அவனுடைய இருதயத்தை வஞ்சித்ததை இப்படி வாசிக்கிறோம் "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா?" (தானியல் 4:30). இதனிடையே தேவன் அவனை நியாயந்தீர்த்து எப்படி வீழ்த்தினார் என்பதைக் கவனியுங்கள். "இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும் போதே வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று. மனுஷரினின்று தள்ளப்படுவாய்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய்; மாடுகளைப்போல் புல்லை மேய்வாய்; இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்து கொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உன்மேல் கடந்து போகும் என்று உனக்குச் சொல்லப்படுகிறது என்று விளம்பினது" (தானியேல் 4:31-32).

தான் தாழ்த்தப்பட்ட பிறகு இறுதியாக கடவுள் அனைத்தின் மீதும் இராஜரீகமுள்ளவர் என்பதை நேபுகாத்நேச்சார் ஒப்புக்கொண்டான்: "அந்த நாட்கள் சென்ற பின்பு நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன்; என் புத்தி எனக்குத் திரும்பி வந்தது; அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார், அவருடைய கையைத் தடுத்து அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன். ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள் அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்" (தானியேல் 4:34-35, 37).

கடவுளுடைய இராஜரீகத்தின் கோட்பாட்டை நாம் எவ்வளவு அதிகமாக ஏற்றுக்கொள்கிறோமோ, அவ்வளவு மனத்தாழ்மையில் வளருவோம்.

### 3. கடுமையான சோதனையின் போது இது பெரும் ஆறுதலைத் தருகிறது

எல்லாவற்றையும் தமது கட்டுபாட்டில் வைத்திருக்கும் பிரபஞ்சத்தின் இராஜரீகமுள்ள கர்த்தர், தமது அன்பையும், கருணையையும் காட்ட நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார். அத்தகைய அன்பைப் பெறுவதற்கு நாம் என்ன செய்தோம்? ஒன்றுமேயில்லை! நம்முடைய பாவங்கள் பெரியதாக இருந்த போதிலும், கடவுள் நம்மை நேசித்து, நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக ஆக்கியிருப்பதால், சோதனைகளை எதிர்கொள்ளும்போது, அந்த சோதனைகள் கடுமையாக இருந்தாலும் நாம் ஏன் பயத்தால் மேற்கொள்ளப்பட வேண்டும்?

யோசேப்பு கடவுளின் இராஜரீகத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தான். அதனால் தான், மிகவும் கடினமான காலங்களைச் சந்தித்த போதிலும், தனது சகோதரர்களிடம் இந்த வார்த்தைகளைச் சொல்ல முடிந்தது: "நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" (ஆதியாகமம் 50:20). கடவுள் தனது வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளையும் கட்டுப்படுத்துகிறவர் என்பதை அவன் அறிந்திருந்தான், எனவே சூழல்கள் அவனுக்கு எதிரானதாக இருந்தாலும் கூட விரக்தியடையவில்லை.

ஜெர்ரி பிரிட்ஜஸ் என்பவர் இவ்வாறு எழுதுகிறார்:

> "கடவுள் ஆளுகிறார், ஆனால் அவருடைய ஆளுகையில் வலியை அனுமதிக்கிறார். வலி மிகவும் யதார்த்தமானது. நாம் காயப்படுகிறோம், கஷ்டப்படுகிறோம். ஆனால் நம் துன்பங்களுக்கு மத்தியில், கடவுள் ஆளுகிறார் என்று நாம் நம்ப வேண்டும்; அவர் இன்னும் இறையாண்மை கொண்டவர்." எழுத்தாளர் மார்கரெட் கிளார்க்சன் இவ்வாறு மிகவும் அழகாக எழுதியுள்ளார், "கடவுளின் இராஜரீகம் என்பது உபத்திரவப்படும் மனித இருதயம் பற்றிக்கொள்ள வேண்டிய ஒரு அசைக்க முடியாத பாறையாக இருக்கிறது. நம் வாழ்க்கையைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் தற்செயலானவை அல்ல: அவை தீமையின் செயல்களாகவும் இருக்கலாம், ஆனால் அந்தத் தீமை இராஜரீகமுள்ள கடவுளின் வலிமையான கரத்தில் உறுதியாகப் பிடிக்கப்பட்டுள்ளது ... எல்லா தீமைகளும் அவருக்கு உட்பட்டது, மேலும் அவர் அனுமதிக்காத வரை தீமை அவரது பிள்ளைகளைத் தொட முடியாது. கடவுள் மனித வரலாற்றிலும், மீட்கப்பட்ட அவரது குடும்ப உறுப்பினரின் தனிப்பட்ட வரலாற்றிலும் கர்த்தராக இருக்கிறார்.
>
> கடவுளின் இராஜரீகத்தின் கீழ் வேண்டுமென்றே மற்றவர்கள் தீங்கிழைக்கும் செயல்கள் மட்டுமல்ல, மற்றவர்களின் தவறுகளும், தோல்விகளும் கூட இருக்கிறது. ஒரு ஓட்டுநர் சிவப்பு விளக்கை மீறி நிற்காமல் வந்து, உங்கள் காரைத் தாக்கி, எலும்பு முறிவுகளுடன் மருத்துவமனைக்கு அனுப்பினாரா? ஒரு மருத்துவர் உங்கள் புற்று நோயை அதன் ஆரம்ப கட்டங்களில் கண்டறியத் தவறிவிட்டாரா? சிகிச்சையளித்திருந்தால் சரியாக இருந்திருக்குமா? கல்லூரியில் மிக முக்கியமான படிப்பில் திறமையற்ற பயிற்சியாளரையோ அல்லது வணிகத்தில் உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தடுக்கும் திறமையற்ற மேற்பார்வையாளரையோ நீங்கள் பெற்றிருந்தீர்களா? இந்த சூழ்நிலைகள் அனைத்தும் இராஜரீகமுள்ள கடவுளின் ஆளுகையின் கீழ் உள்ளன, அவர் நம் வாழ்க்கையில் அவற்றை நன்மைக்காக செயல்படுத்துகிறார்.

கடவுளின் இராஜரீகத்தின் மீதான விசுவாசமானது, நான் இப்போது எதிர்கொள்ளும் குறிப்பிட்ட சோதனைகளனைத்தையும் தம் முழுகட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இறையாண்மையும், அன்பும் கொண்ட கிறிஸ்துவின் ஆணிகள் பாய்ந்த கரங்களைக் கடந்து செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இந்த சோதனையின் மூலம் அவர் தமது எல்லா நோக்கங்களையும்

நிறைவேற்றுகிறவர். இந்த அறிவு மிகுந்த ஆறுதலைத் தருகிறது, குறிப்பாக நம்மைச் சுற்றியுள்ள விஷயங்கள் தொடர்ந்து நம்மை வீழ்ச்சியடைய செய்யும்போது! எல்லாவற்றையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அன்பான கடவுளின் கரங்களில் நாம் எப்போதும் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று இருளான காலங்களின் மத்தியிலும் நினைவில் கொள்வோம்.

### 4. இது மனிதப் பொறுப்பைத் தட்டிக்கழிக்க வகைச் செய்யாது

நமது வரையறுக்கப்பட்ட மனங்களால் இந்த சத்தியத்தை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், கடவுளின் இராஜரீகம் மனிதர்களின் சுதந்திரம் அல்லது பொறுப்பு உணர்வோடு முரண்படாது. மனித செயல்கள் கடவுளை மட்டுப்படுத்துவதுமில்லை, அவருடைய நோக்கங்கள் நம் முயற்சிகளால் முறியடிக்கப்படுவதுமில்லை. கடவுளின் இராஜரீகம் நமது எல்லா செயல்களையும் உள்ளடக்கியது - நம் பாவங்களுக்கு கடவுள் ஒருபோதும் பொறுப்பாளி அல்ல என்பதற்கு அப்போஸ்தலர் 2:23ல் ஒரு நல்ல உதாரணம் காணப்படுகிறது, "அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் [கடவுளின் இராஜரீகம்] ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள் [மனிதப் பொறுப்பு]." தம்முடைய குமாரனின் மரணத்திற்கு காரணமானவர்களைக் கடவுள் கணக்குக் கேட்டார். ஆயினும் கூட, இயேசுகிறிஸ்து சிலுவைக்குச் செல்வது அவரது இறையாண்மைத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது!

இதன் முக்கிய சாராம்சம் இதுதான்: தெய்வீக இராஜரீகம் மனிதப் பொறுப்பை மட்டுப்படுத்தாது, மனிதப் பொறுப்பு தெய்வீக இராஜரீகத்தை செயலற்றதாக செய்யாது. இந்த இரண்டு கோட்பாடுகளும் வேதத்தில் கற்பிக்கப்படுகின்றன. நமது வரையறுக்கப்பட்ட மனங்களால் இந்த சத்தியங்களை நிவிர்த்திச் செய்ய முடியாது. ஆயினும் கூட, இவைகள் ஒரு இராஜரீகமுள்ள, எல்லையற்ற, மற்றும் சர்வ ஞானமுள்ள கடவுளின் பார்வையில் பரிபூரணமாக இருக்கின்றன, அதன் வழிகள் நம் புரிதலுக்கும், கற்பனைக்கும் அப்பாற்பட்டவைகள்.

எனவே, எல்லாவற்றின் மீதும் ஏகாதிபத்தியமுள்ள கடவுளின் பண்புக்கு அடிபணியும்போது சிந்திக்க வேண்டிய நான்கு தாக்கங்கள் இவைகளே.

நீங்கள் கடவுளின் பிள்ளையாக இருந்தால், உங்கள் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வையும் கட்டுப்படுத்தும் கடவுளின் கரங்களில் நீங்கள் இருப்பதால், மகிழ்ச்சியுடன் இளைப்பாறுங்கள். என்ன நடந்தாலும் பரவாயில்லை, நீங்கள் நித்தியத்திற்கும் அவருடன் இருப்பீர்கள். அதுவரை, உங்கள் மீதான அவருடைய ஆளுகைக்கு அடிபணியுங்கள். நன்மையானாலும், தீமையானாலும் எல்லா நேரங்களிலும் அவரை மகிமைப்படுத்துவதில் கவனம் செலுத்தும் வாழ்க்கையைத் தொடருங்கள்.

நீங்கள் இன்னும் கடவுளின் பிள்ளையாக இல்லை என்றால், இந்த இறையாண்மை கொண்ட கடவுளுக்கு எதிராக நீங்கள் போராடி வெற்றி பெற முடியாது என்பதை

புரிந்து கொள்ளுங்கள். உங்கள் பாவங்களை விட்டுத் திரும்பவும், பாவங்களுக்கான கிரயத்தைக் கொடுத்த அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கவும் அவர் உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அப்போதுதான் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அவருடைய பிள்ளைகளாகி, வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிக்க முடியும். எனவே, இதை இன்றே செய்யுங்கள். உங்கள் பாவங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுவதால் கிடைக்கும் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவியுங்கள். தாமதியாதேயுங்கள்!

## கலந்துரையாடல் கேள்விகள்

1. கடவுளின் இராஜரீகத்தைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
2. கடவுளின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் நீங்கள் என்ன விதமான வாழ்க்கை மாற்றங்களைச் செய்யலாம்?
3. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் ஜெபங்களில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
4. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் நற்செய்திப் பிரசங்கத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**சங்கீதம்** 115:3 - *நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்.*

## ஜெபம்

*ஆண்டவரே,*

*நான் உம்மைப் பற்றிக் கொள்கிறேன்; உம் சித்தமே நிறைவேறுகிறது; என்னுடையது அல்ல என்பதை நான் பார்க்கிறேன், நம்புகிறேன், வாழ்கிறேன்,*

*உமது தெய்வீக பராமரிப்புக்கும், வாக்குத்தத்தங்களுக்கும் மற்றும் கிருபைக்கும் நான் பாத்திரனல்ல. அவற்றைக்குறித்து நான் எதுவும் முறையிட முடியாது.*

*என்னை ஏழ்மை நிலையிலோ அல்லது இழிந்த நிலையிலோ வைத்திருந்தாலும் நீர் துதிக்குப்பாத்திரர்!*

*எனது தேவைகளிலிருந்து எழும் ஜெபங்கள் எதிர்கால இரக்கங்களுக்கான ஆயத்தங்களாக இருக்கிறது; நான் இதை உணர்வதற்கு முன் நம்பி உம்மைக் கனப்படுத்த எனக்கு உதவும்.*

*உமது இரக்கத்தின் ஐசுவரியத்தின் மீது உறுதியாக சாய்ந்து, நீர் வாக்குறுதியளித்ததைக் கொடுப்பீர் என்று நம்புவதன் மூலம்; விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்கு உதவும். அதனால் உமது சித்தத்தை நான் கண்டுக்கொள்வேன்.*

*நான் எதற்காக ஜெபிக்கிறேனோ, அது கிடைக்கும் வரை உறுதியுடன் ஜெபிக்க என்னை பலப்படுத்தும். நான் உமது சித்தத்திற்காகக் காத்திருப்பேன், அது நிறைவேற ஜெபிப்பேன், உமது கிருபையால் முழுமையாகக் கீழ்ப்படிவேன்.*

*ஆமென்!*

# கடவுளின் பொறுமை

*கடவுள் தம் நியாயத்தீர்ப்பை நீண்ட காலத்திற்கு நிறுத்தும் பண்பு.*

கடவுள் மோசேக்கு வெளிப்படுத்துகையில், தமது பண்புகளை இவ்வாறு அறிவித்தார், "கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்து போகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்" (யாத்திராகமம் 34:6). "நீடிய சாந்தம் " என்ற சொற்றொடரை நீங்கள் கவனித்தீர்களா? கடவுள் மிகவும் பொறுமையாக இருக்கிறார்; அவர் மக்களை உடனடியாக தண்டிப்பதில்லை, நீண்ட காலத்திற்கு கூட அவரது தீர்ப்பை நிறுத்துகிறார்.

கடவுளின் பொறுமை பற்றிய ஸ்டீபன் சார்னாக்கின் வார்த்தைகளை ஆர்தர் பிங்க் இந்த முறையில் மேற்கோள் காட்டுகிறார்:

> *இது தெய்வீக நன்மை மற்றும் இரக்கத்தின் ஒரு பகுதியாகும், இருப்பினும் இது மேற்கூறிய இரண்டிலிருந்தும் வேறுபட்டது. கடவுள் பெரும் நற்குணமுள்ளவர், மிகுந்த சாந்தம் உடையவர்; சாந்தம் எப்பொழுதும் உண்மையான நற்குணத்திற்கு துணையாக இருக்கும்; மேலும், நற்குணம் அதிகமாக இருந்தால், சாந்தம் அதிகமாகும். கிறிஸ்துவைப் போல் மிகவும் பரிசுத்தமானவர் யார்? சாந்தகுணமுள்ளவர் யார்? கடவுளின் கோபம் அவரது இரக்கத்தின் ஒரு கிளையாகும்: "கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்" (சங்கீதம் 145:8).*

பழைய ஏற்பாட்டில் கடவுளின் பொறுமையைப் பற்றிய சில வசனக்குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

> **எண்ணாகமம் 14:17 -** *ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவரென்றும்...*
>
> **சங்கீதம் 86:15 -** *ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்.*
>
> **சங்கீதம்103:8 -** *கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.*

> **சங்கீதம்145:8** - *கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்.*

நினிவே மக்களுக்குப் பிரசங்கிக்க வேண்டும் என்ற கடவுளின் கட்டளையை மீறி தான் ஏன் ஓடிப்போனான் என்பதை யோனா விளக்குகையில், அதற்கு கடவுளின் பொறுமையையே காரணம் காட்டுகிறான். "ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும் போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன்" (யோனா 4:2). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், யோனா தீர்க்கதரிசி, கடவுளின் பொறுமையைப் பற்றி அறிந்திருந்தான், மேலும் நினிவே பட்டணத்தார் மனந்திரும்பி மன்னிக்கப்படுவதை அவன் விரும்பவில்லை. எனவே, கடவுள் தன்னுடைய விருப்பத்திற்கு இணங்காத வரை அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க மறுத்து விட்டான்! கடவுளுடைய பொறுமையும், பாவிகளுக்கான அவரது அன்பும், பொல்லாத நினிவேவாசிகளையும் மன்னிக்கும்படி அவரைத் தூண்டியது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. பல வருடங்களுக்குப் பிறகு தீர்க்கதரிசியான நாகூமும் நினிவே மக்களுக்குப் பிரசங்கிக்கும்போது, கடவுளுடைய பொறுமையைப் பற்றி இவ்வாறு எழுதி, அவர்களை மனந்திரும்பும்படி அழைத்தான், "கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர்; அவர்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக்க மாட்டார்" (நாகூம் 1:3)!

பழைய ஏற்பாட்டின் கடவுள் தண்டிப்பவர் மட்டுமே என்றும், அன்பைக் காட்டுவது அரிது என்றும் வாதிடுபவர்களுக்கு, மேலே குறிப்பிட்டுள்ள இந்த வசனங்கள் ஒரு கண்டனமாக இருக்கிறது. நீண்ட காலமாக பாவம் செய்த மக்களுக்கு கடவுள் எவ்வளவு பொறுமையைக் காட்டினார் பாருங்கள்!

நாம் புதிய ஏற்பாட்டிற்கு வரும் போது, கடவுளின் பொறுமையை எடுத்துக்காட்டும் பல குறிப்புகளைக் காண்கிறோம். அவற்றில் சில வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

> **ரோமர் 2:4** - *அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ?*
>
> **1 தீமோத்தேயு 1:16** - *அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும்பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன்...*

"கிறிஸ்து இயேசு பாவிகளை இரட்சிக்க உலகத்திற்கு வந்தார் - அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோத்தேயு 1:15), பாவிகளில் மோசமானவனாக பவுல் இருந்தாலும், "அந்த காரணத்திற்காகவே எனக்கு நீடிய பொறுமை காட்டப்பட்டது" என்று கூறினான். ஏன்? இவ்விதமாக, இயேசுகிறிஸ்து "தம்மை விசுவாசித்து நித்திய ஜீவனைப் பெறுவோருக்கு தம்முடைய மகத்தான பொறுமையை முன்மாதிரியாகக் காட்ட முடியும் என்பதற்காகவே." வேறு வார்த்தைகளில் கூறுவதானால்,

இயேசுகிறிஸ்துவுக்கு எதிராக போராடிய பவுலை இரட்சித்து, அவனிடம் கடவுள் இவ்வளவு பொறுமையாக இருந்தால், மற்ற பாவிகள் அவருடைய குமாரனாகிய இயேசுவின் மீது விசுவாசம் வைத்தால் அவர்களை நிச்சயமாக இரட்சிக்காமலிருப்பாரா?

கடந்த காலத்தில் பேழை கட்டப்பட்டபோது காட்டப்பட்ட கடவுளுடைய பொறுமையை பேதுரு இவ்வாறு குறிப்பிடுகிறான்: “அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்” (1 பேதுரு 3:20). தமது அபரிதமான பொறுமையில், மக்கள் மனந்திரும்புவதற்காக கடவுள் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருந்தார், இதனால் நியாயத்தீர்ப்பைத் தவிர்த்தார். அவர்களுடைய அக்கிரமத்திற்காக அவர் அனைவரையும் உடனே சங்கரித்திருக்கலாம். அவர்கள் மனந்திரும்ப மாட்டார்கள் என்று அவர் அறிந்திருந்தும், அவருடைய பொறுமை நீண்ட காலத்திற்கு நியாயத்தீர்ப்பை நிறுத்தியது (ஆதியாகமம் 6:13, 18).

பவுல் ரோமர் 9:22-23 ல் இதற்கு மிகவும் ஒத்த கருத்தைக் கூறுகிறான், "தேவன் தமது கோபத்தைக் காண்பிக்கவும், தமது வல்லமையைத் தெரிவிக்கவும், தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள் மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள் மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருந்தாரானால் உனக்கென்ன?" மனந்திரும்பத் தவறியதற்காக இறுதியில் அவரது கோபத்தையும் அழிவையும் சந்திக்கும் மக்களிடமும் அவர் பொறுமையாக இருக்கிறார். இறுதிப் பகுப்பாய்வில் கடவுளை இன்னும் நிராகரிப்பவர்களிடம் அவரின் பொறுமையைப் பற்றி நாம் சற்று நிதானித்து சிந்திக்கும்போது அது நம்ப முடியாததாக இருக்கிறது!

அப்படியானால், கடவுளின் இந்தப் பண்பு நம் வாழ்வில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

## விசுவாசிகளுக்கு

ஒருவருக்கொருவர் உறவில் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும் என்பதே முக்கிய உட்பொருளாக இருக்கிறது. பல சமயங்களில், நாம் மக்களிடம் சீக்கிரம் கோபப்படுகிறோம். இத்தகைய மனப்பான்மை சில சமயங்களில் புண்படுத்துவதோடு பழிவாங்குவதற்கும் வழிவகுக்கிறது, ஏனென்றால் நாம் புண்படுகிறோம். இருப்பினும், ஒருவருக்கொருவர் நம் உறவுகளில் பொறுமையை (கோபமடைய தாமதமாக) தொடருமாறு வேதம் மீண்டும் மீண்டும் நம்மை அழைக்கிறது.

> **நீதிமொழிகள் 19:11** - *மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை.*
>
> **1 கொரிந்தியர் 13:4** - *அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.*

**கொலோசெயர் 3:12** - *ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு.*

**எபேசியர் 4:2** - *மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி,*

**1 தெசலோனிக்கேயர் 5:14** - *மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.*

கீழ்காணும் இந்த வார்த்தைகள் மூலம் மனந்திரும்புவதற்குக் காத்திருக்கும்போது, கடவுளின் பொறுமையை விசுவாசிகளுக்கு பேதுரு நினைவூட்டுகிறார்: "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்." (2 பேதுரு 3:9).

கடவுளிடம் நாம் வருவதற்கு முன்பு எவ்வளவு பொறுமையாக இருந்தார்; அவருடைய பிள்ளைகளாக ஆன பிறகும் அடிக்கடி தோல்வியடையும் நம்மிடம் தொடர்ந்து பொறுமையாக இருக்கிறார் என்பதைத் சிந்திப்பதன் மூலம், நமக்கு எதிராக தீமை செய்யும் மிகவும் கடினமாக மக்களிடம் நாம் பொறுமையின் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளலாம்! நாம் மீண்டும் மீண்டும் அவமதிக்கப்பட்டாலும் அல்லது புறக்கணிக்கப்பட்டாலும் பழிவாங்க வேண்டிய அவசியமில்லை. சாலொமோன் இவ்வாறு கூறும் அறிவுரை கவனிக்கத்தக்க ஒன்று, "குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு மகிமை" (நீதிமொழிகள் 19:11)! திருச்சபைத்தலைவராக இருந்த கிறிசோஸ்டம் இவ்வாறு கூறியிருக்கிறார், "...ஒரு மனிதன் பழிவாங்குவதற்கான வளங்களையும் வாய்ப்பையும் கொண்டவன்; ஆனால், பொறுமையானவன் இவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பவன்."

ஆபிரகாம் லிங்கனை எட்வின் ஸ்டாண்டன் நடத்தினதுப்போல வேறு யாரும் அவ்வளவு இழிவாக நடத்தியதில்லை. அவர் லிங்கனின் கொள்கைகளை கண்டித்து அவரை "தரம் குறைந்த தந்திரமான கோமாளி" என்று அழைத்தார். ஸ்டாண்டன் அவருக்கு "அசல் கொரில்லா" என்று செல்லப்பெயர் சூட்டினார். ஆப்பிரிக்காவில் கொரில்லாவை தேடி அலைந்து திரிந்த ஆய்வாளர் பால் டு சைலு ஒரு முட்டாள். ஏனெனில், ஸ்பிரிங்ஃபீல்ட், இல்லினாய்ஸில் வசித்த லிங்கனே ஒரு கொரில்லா என்று இழித்து ஒப்பிட்டு பேசினார். இதற்கு லிங்கள் பதிலேதும் கூறவில்லை. ஆனால் ஸ்டாண்டன் தன் வேலையில் சிறந்தவராக இருந்தப்படியால் அவரை இராணுவ அமைச்சராக்கி, எல்லாவிதமான மரியாதையோடும் நடத்தினார். இப்படியே ஆண்டுகள் உருண்டோடின.

ஒரு தியேட்டரில் கொலையாளியின் தோட்டா லிங்கனைத் தாக்கிய இரவு, லிங்கனின் உடல் கண்டெடுக்கப்பட்ட அறையின் பக்கத்தில் ஸ்டாண்டன் இருந்தார். ஜனாதிபதி லிங்கனின் உருக்குலைந்த அதேசமயம் அமைதியான முகத்தை பார்த்தபோது, ஸ்டாண்டன் கண்ணீருடன் இவ்வாறு கூறினார், "உலகம் கண்டிராத மிகப்பெரிய ஆட்சியாளர்." ரோமர் 12:21 நமக்கு நினைவூட்டுவது போல் அன்பின் பொறுமை இறுதியில் வென்றது: "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு." தம்மை தொடர்ந்து கேலி செய்யும் பொல்லாதவர்களிடம் கூட கடவுள் பொறுமையாக இருக்கிறார். எனவே, நாமும் நம்மைக் காயப்படுத்துபவர்களிடம் பொறுமையாக இருந்து அவரைப் பின்பற்ற வேண்டாமா? தகப்பனைப் போல, பிள்ளைகள்! அதுதான் குறிக்கோள்!

**நாம் எப்படி பொறுமையை வளர்த்துக்கொள்வது?** இந்த பொறுமையை நம்மால் உருவாக்க முடியாது என்பதை நினைவில் கொள்வது அவசியம். இந்த பொறுமையின் பண்பை நம் வாழ்வில் செயல்படுத்த பரிசுத்த ஆவியானவர் அவசியம். "ஆவியின் கனி...நீடிய பொறுமை" (கலாத் 5:22-23) இது கடவுளின் பண்புகளில் ஒன்று. பரிசுத்த ஆவியானவருக்கு அடி பணிவதை நாம் வழக்கமாக்கும் போது, (இது வேத வாக்கியங்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வது), அவர் நம்மில் பொறுமையின் கனியை உற்பத்தி செய்கிறார். ஒருவருக்கொருவர் நமது உறவுகளில் பொறுமை வளர்ப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் இதுவே வழி.

### அவிசுவாசிகளுக்கு

பாவிகளைக் கையாள்வதில் கடவுளின் பொறுமை ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலமாக அவர் காத்திருப்பதில் தெரிகிறது. "நீதியின் பிரசங்கியான" (2 பேதுரு 2:5) நோவாவைப் பயன்படுத்தி, தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பி, அவரை விசுவாசிக்க பல வாய்ப்புகளை வழங்கினார். ஆனாலும், அவர்கள் மனந்திரும்பத் தவறியபோது, கடவுள் அவர்களை நியாயந்தீர்த்தார்.

அதேபோல், நீங்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதே கடவுளுடைய நோக்கமாக இருப்பதினால் உங்கள் மீதும் பொறுமையைக் காட்டுகிறார். ரோமர் 2:4ல் பவுல் நமக்கு இவ்வாறு நினைவூட்டுகிறார், "...தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணுகிறாயோ?" ஆனால், நீங்கள் மனந்திரும்பத் தவறினால், அடுத்த இரண்டு வசனங்களில் ஒரு எச்சரிக்கை உள்ளது: "உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினைநாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாயே. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்" (ரோமர் 2:5-6).

பழைய ஏற்பாடும் அதே எச்சரிக்கையை அளிக்கிறது. இன்று நீங்கள் நியாயந்தீர்க்கப்படவில்லை என்பதற்காக, எதிர் காலத்தில் நீங்கள் ஒருபோதும் நியாயந்தீர்க்கப்பட மாட்டீர்கள் என்று நினைத்து உங்களை ஏமாற்றிக்கொள்ளக்கூடாது. பிரசங்கி 8:11-13 லிருந்து கடவுளின் எச்சரிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது,

“துர்க்கிரியைக்குத் தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது. பாவி நூறுதரம் பொல்லாப்பை செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன் .துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை; அவன் தேவனுக்கு முன்பாகப் பயப்படாதிருக்கிறபடியால், நிழலைப் போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை.” இன்று எல்லாம் நன்றாக இருப்பதாக நினைத்து, நாளையும் அப்படியே இருக்கும் என்று எண்ண வேண்டாம்! நீங்கள் கடவுளிடம் திரும்பி, அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை என்றால், பிரசங்கி 8:13 போதிப்பது போல், உங்களுக்கு "நன்மை இருக்காது". நித்திய தீர்ப்பு உங்களுக்கு காத்திருக்கிறது. உடைந்த மற்றும் அன்பான இருதயத்துடன் இந்த உண்மையான வார்த்தைகளை சொல்கிறேன்.. தயவுசெய்து இவற்றை தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

நீடிய பொறுமையுள்ள அதே கடவுள் கோபத்தை வெளிப்படுத்துகிறவராகவும் இருக்கிறார் ("கடவுளின் கோபம்" என்ற பாடத்தைப் படியுங்கள்). தம்முடைய குமாரனை நிராகரிக்கிற யாவரையும் அவர் ஓர் நாளில் நியாயந்தீர்ப்பார். அவருடைய பொறுமைக்கும் எல்லை உண்டு. நீங்கள் தொடர்ந்து உங்கள் இருதயத்தை கடினப்படுத்தி, அவருடைய பொறுமையை புறக்கணித்தால், உங்களுக்காக எஞ்சியிருப்பது அவருடைய முழுமையான மற்றும் இறுதி கோபத்தை எதிர்கொள்ளும் நிலைதான். தயவு செய்து கடவுளின் பொறுமையை உங்கள் மீதான அவரது மகிழ்ச்சி என்று தவறாக எண்ணாதீர்கள். நீங்கள் அவருடைய கட்டளைகளை மீறும் வாழ்க்கை வாழும் வரை அவர் உங்களைப் பற்றி மகிழ்ச்சியடையமாட்டார். எனவே, தயவு செய்து உங்கள் பாவங்களை விட்டு இன்றே இயேசுகிறிஸ்துவிடம் திரும்புங்கள்!

## கலந்துரையாடல் கேள்விகள்

1. கடவுளின் பொறுமையைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
2. கடவுளின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் நீங்கள் என்ன விதமான வாழ்க்கை மாற்றங்களைச் செய்யலாம்?
3. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் ஜெபங்களில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?
4. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் நற்செய்தி பிரசங்கத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

## தியானம்/ மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**சங்கீதம் 103:8** - *கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.*

**ஜெபம்**

பிதாவே, நீர் என்னிடம் பொறுமையாக இருப்பதைக் கண்டு வியக்கிறேன். நான் ஒவ்வொரு நாளும் திரும்பத் திரும்ப விழுந்தாலும், நீர் என்னைத் தாங்கிக் கொண்டே இருக்கின்றீர். நீர் என்னை சிட்சித்தாலும், என் நன்மைக்காக அன்புடன் செய்கிறீர். உம் பொறுமையை அலட்சியப்படுத்தாமல் இருக்க எனக்கு உதவும். என் பொறுமையின்மையால் உமது ஆவியை துக்கப்படுத்துவதிலிருந்து என்னைக் காத்தருளும். நீர் கோபப்படுவதற்கு தாமதமாக இருப்பது போலவும், என் பாவங்களுக்கு ஏற்ப என்னுடன் அணுகாமல் இருப்பது போலவும், நான் மற்றவர்களிடம் அதிக பொறுமையைக் காட்ட வேண்டும் என்பதை எனக்கு நினைவூட்டும். உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்தபோது கடினமானவர்களைக் கையாளுகையில் மிகுந்த பொறுமையைக் காட்டினார் அவரைப் போல இருக்க எனக்கு உதவும். ஆமென்!

## கடவுளின் மாறாத தன்மை

*கடவுள் தமது இருப்பு மற்றும் நோக்கங்கள் அனைத்திலும் மாறாதவர்.*

மேலே உள்ள வரையறையானது கடவுள் உணரவற்றவராகவோ, அல்லது வெவ்வேறு சூழ்நிலைகளிலும் வித்தியாசமாக செயல்பட முடியாதவராகவோ இருக்கிறார் என்று பொருள்படுத்தாது. மாறாக அவர் ஒருபோதும் தமது நிலையில் வளருவதில்லை அல்லது சிதைவதில்லை என்று பொருள்படுத்துகிறது. அவருக்கு ஆரம்பமும் முடிவும் இல்லை. அவர் சிறந்த அல்லது மோசமான நிலைக்கு மாற முடியாது. பரிசுத்தத்திலும், அன்பிலும், இரக்கத்திலும் அவர் முன்பு இருந்ததை விட தற்போது வேறுபட்டிருப்பவரல்ல. அவர் தமது பண்புகளில் எதையும் கூட்டவோ, குறைக்கவோ முடியாது.

### கடவுள் தமது இருப்பில் மாறாதவர்

கடவுள் தம்மை மோசேக்கு வெளிப்படுத்தியபோது, “இருக்கிறவராகவே இருக்கிறேன்” (யாத்திராகமம் 3:14) என்று கூறினார். அவர் என்றென்றும் ஒரே தன்மையில் இருக்கிறார். மல்கியா மூலம் பேசும்போது, "நான் கர்த்தர் நான் மாறாதவர்" (3:6) என்று அறிவித்து கடவுள் தமது மாறாத தன்மையை உறுதிப்படுத்தினார். கடவுளிடம் "யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" என்று யாக்கோபு (1:17) நமக்கு நினைவூட்டுகிறான். அதனால்தான் அலைபாயும் கடலுடன் ஒப்பிடப்படாமல் அசையாத ஒரு கன்மலையுடன் கடவுள் ஒப்பிடப்படுகிறார்: "அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்” (உபாகமம் 32:4).

மனித நிலையில் நிரந்தரமாகத் தோன்றக்கூடிய பூமி மற்றும் வானங்கள் போன்றவற்றைக் குறித்து சங்கீதக்காரன் இவ்வாறு கூறுகிறான்:

> **சங்கீதம் 102:25-27 -** *நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம். நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம்; அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம்.*

வானமும் பூமியும் படைக்கப்படுவதற்கு முன்பு கடவுள் இருந்ததைப் போலவே, அவை அனைத்தும் அழிக்கப்பட்ட பிறகும் அவர் தொடர்ந்து இருப்பார் என்று சங்கீதக்காரன் உறுதிப்படுத்துகிறான். படைப்பாளராக, அவர் மாறாமல் இருக்கிறார். எபிரெய

நிருபத்தின் எழுத்தாளன் 1:10-12 ல் இந்த வார்த்தைகளை இயேசு கிறிஸ்துவுக்குப் பயன்படுத்தினான். தொடர்ந்து, அவன் இயேசுகிறிஸ்துவை "நேற்று இன்றும் என்றும் மாறாதவர்" என்றும் விவரித்தான். (எபிரெயர் 13:8). இயேசுகிறிஸ்துவுக்கும் இதே தெய்வீகப் பண்பு இருப்பதாகக் கூறுவதன் மூலம், பிதாவோடு இயேசுகிறிஸ்துவின் சமத்துவத்தை எழுத்தாளன் உறுதிப்படுத்துகிறான்.

கடவுள் மாறாமல் இருப்பதன் சாரத்தை A.W. பிங்க் என்ற வேத அறிஞர் பின்வருமாறு சரியாகப் படம்பிடித்துக்காட்டுகிறார்:

> *இன்று காணப்படுகின்ற அனைத்தும் இல்லாதபோதும், கடவுள் எப்பொழுதும் இருந்திருக்கிறார், எப்போதும் இருப்பவர்...அவரால் சிறந்தவராக மாற முடியாது; ஏனெனில் அவர் ஏற்கனவே பரிபூரணமானவர்; மற்றும் சரியானவராக இருப்பதால், அவர் மோசமானவராக மாற முடியாது. தமக்கு வெளியேயுள்ள எதனாலும் பாதிக்கப்படாமல், முன்னேற்றம் அல்லது சீரழிவிற்கு சாத்தியமற்றவர். அவர் எப்போதும் ஒரே தன்மையுடையவர்.*

## கடவுள் தமது நோக்கங்களில் மாறாதவர்

கடவுள் தம் இருப்பில் மாறாதவராக இருக்கும் அதேவேளையில், தமது எல்லா நோக்கங்களிலும் மாறாதவராக இருக்கிறார். பல வேத வசனங்கள் இந்த சத்தியத்தை உறுதிப்படுத்துகின்றன. கீழே சில வசனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது:

> **யோபு 23:13 -** *அவரோவென்றால் ஒரே மனமாயிருக்கிறார்; அவரைத் திருப்பத்தக்கவர் யார்? அவருடைய சித்தத்தின்படியெல்லாம் செய்வார்.*
>
> **யோபு 42:2 -** *தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.*
>
> ***சங்கீதம் 33:11 -*** *கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்.*
>
> **சங்கீதம் 115:3 -** *நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமானயாவையும் செய்கிறார்.*
>
> ***ஏசாயா 46:10 -*** *அந்தத்திலுள்ளவைகளை ஆதி முதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்.*

சூழ்நிலைகள் மிகவும் இருண்டதாகத் தோன்றியபோதும், இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின்படி கடவுளின் உடன்படிக்கையின் அன்பையும், அர்ப்பணிப்பையும் மீகா உறுதிப்படுத்துகிறான்: “தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார். தேவரீர் பூர்வநாட்கள்முதல் எங்கள் பிதாக்களுக்கு

ஆணையிட்ட சத்தியத்தை யாக்கோபுக்கும் கிருபையை ஆபிரகாமுக்கும் கட்டளையிடுவீராக" (மீகா 7:18-20). இந்த வசனங்கள் கடவுள் இஸ்ரவேலை பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தை அளிக்கிறது.

கடந்த காலத்தில், கடவுள் நிறைவேற்ற திட்டமிட்ட அனைத்தையும் நிறைவேற்றினார். புதிய அறிவின் அடிப்படையிலோ அல்லது வல்லமை இல்லாத காரணத்தினாலோ அவர் தமது திட்டங்களைத் திருத்த வேண்டிய அவசியமில்லை. கடவுள் எப்போதும் அனைத்தையும் அறிந்தவராகவும் (சர்வ வல்லமை படைத்தவர்) இருக்கிறார். அவர் திட்டமிட்ட அனைத்தையும் நிறைவேற்றுகிறார்.

இது ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது.

### கடவுள் சில சமயங்களில் மனம் மாறுகிறாரா?

கடவுள் தமது இருப்பு மற்றும் நோக்கங்களில் மாறாதவர் என்றால், அவர் மனம் மாறினார் என்று நாம் படிக்கும் நிகழ்வுகளைப் பற்றிய கருத்து என்ன?

> **ஆதியாகமம் 6:6** - *தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.*
>
> **1 சாமுவேல் 15:11** - *நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னைவிட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான் என்றார்.*

கடவுள் நியாயத்தீர்ப்பை கொடுப்பதாக கூறின மற்ற நிகழ்வுகளும் உள்ளன, மேலும் மக்கள் ஜெபித்ததாலும், சில சமயங்களில் தங்கள் வழிகளை மாற்றிக்கொண்டதாலும், அவர் மனம் மாறி, அவர்களுக்கு கொடுப்பதாக கூறின நியாயத்தீர்ப்பைக் கொண்டு வரவில்லை. அவற்றில் பின்வருபவை சில எடுத்துக்காட்டுகளாகும்.

அ. கடவுள் இஸ்ரவேல் ஜனங்களை அழிப்பதிலிருந்து தடுக்க மோசே ஜெபித்தான் (யாத்திராகமம் 32:9-14). இஸ்ரவேலர்கள் "வணங்கா கழுத்துடைய ஜனங்களாக" இருந்ததால் (வச. 9), கடவுள் அவர்களை "அழித்து விடுவதாக" கூறினார் (வச. 10). எனவே, "மோசே தன் தேவனாகிய கர்த்தருடைய தயவை நாடினான்" (வச. 11). அவனுடைய ஜெபத்தின் விளைவாக, " அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்" (வச. 14)

ஆ. எசேக்கியாவின் வாழ்வில் கடவுள் பதினைந்து ஆண்டுகளைக் கூட்டிக் கொடுத்தார் (ஏசாயா 38:1-6). " அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்" அப்போது கடவுள் ஏசாயாவை அனுப்பினார். (வச. 1). எசேக்கியா இதைக் கேட்டபோது, "கர்த்தரிடம் ஜெபித்தான்" (வச. 2). அவனுடைய அழுகையால் மனதுருகின கடவுள், ஏசாயா மூலம் எசேக்கியாவிடம், "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்" (வச. 5) என்று கூறினார்.

கடவுளின் மாறாத இயல்பை உறுதிப்படுத்தும் கீழே உள்ள வேதவசனங்களுடன் (முன்பு பட்டியலிடப்பட்ட வசனங்களைத் தவிர) இந்த நிகழ்வுகளை எவ்வாறு நாம் ஒத்திசைப்பது?

> **எண்ணாகமம் 23:19** - *பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?*

> **1 சாமுவேல் 15:29** - *இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம் மாற அவர் மனுஷன் அல்ல.*

இங்கே பல கேள்விகள் எழுகின்றன. கடவுளிடம் மாற்றம் ஏற்பட்டால், அது அவருடைய மாறாத தன்மையை உறுதிப்படுத்தும் வசனப்பகுதிகளுக்கு முரணாக இருக்குமல்லவா? கடவுள் மாறுகிறவர் என்றும் அல்லது அவருடைய நோக்கங்களை நிறைவேற்ற வல்லவர் அல்ல என்று பொருள்படுமல்லவா? இது சிலருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதால், இந்த விஷயத்தை சுருக்கமாகப் பார்ப்பது மிகவும் அவசியம்.

வேய்ன் க்ரூடெம், பைபிள் டாக்ட்ரின் என்ற புத்தகத்தில் இந்த பயனுள்ள விளக்கத்தை அளித்துள்ளார்:

> *இந்த நிகழ்வுகள் அனைத்தும் கடவுளின் மாறாத தன்மையாகவும் ஒரு சூழ்நிலையைப் பொறுத்து அவருடைய திட்டத்தை நிறைவேற்றும் வெளிப்பாடுகளாகவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும். மக்களின் நிலையைப் பொறுத்து, நிச்சயமாக கடவுளின் அணுகுமுறை அல்லது எண்ணத்தின் வெளிப்பாடு மாறும். கடவுள் வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு வித்தியாசமாக பதிலளிக்கிறார் என்று இது கூறுகிறது.*

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மாறாத கடவுள் தம்முடைய அன்பு, இரக்கம் ஆகிய பண்புகளுக்கு ஒத்து குணாதியசத்தின் அடிப்படையில் மாறுகிற மக்களோடு செயல்படுகிறார். ரோலண்ட் மெக்கூனின் கருத்துக்கள் இந்த குழப்பதிற்கு உதவியாக உள்ளன:

> *மாறாத தன்மை என்பது அசையாத தன்மையைக் குறிக்காது. மாறாத கடவுளின் மாறாத மனப்பான்மை, குறிப்பாக பாவம் சம்பந்தமாக, தீய மற்றும் சுதந்திரமான தார்மீகத்துடன் இணைந்திருப்பது கடவுளின் செயல்கள் மாறுவதைக் குறிக்கிறது. அதாவது, அவர் மக்களை நடத்தும் விதம் மாறுகிறது; மனிதன் வேறுபட்ட தார்மீக உறவில் நகரும்போது கடவுள் நோக்குநிலையை மாற்றுகிறார்.*

யோசித்துப் பாருங்கள். மக்கள் மனந்திரும்பும்போது கடவுள் மனம்மாறவில்லையென்றால், ஜெபம் அல்லது நம் வழிகளை மாற்றும் செயல்கள் கடவுளிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. மோசே மற்றும் எசேக்கியாவின் ஜெபங்கள் கடவுளின் அணுகுமுறையை எவ்வாறு மாற்றியது என்பதை நாம்

ஏற்கனவே பார்த்தோம், ஏனென்றால் அவை இன்னும் அவருடைய இறையாண்மை நோக்கங்களுக்கு இசைவாக இருந்தன. நினிவேவாசிகளின் உதாரணத்தின் மூலம் மக்களின் செயல்களினால் தம் தொடர்புகளைக் கடவுள் எவ்வாறு "மாற்றினார்" என்பதைப் பார்ப்போம்.

நினிவேவாசிகளின் அக்கிரமத்தைக் கண்டு, கடவுள் தம்முடைய நியாயத்தீர்ப்பைப் பிரகடனப்படுத்த யோனாவை அனுப்பினார்: "நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது" (யோனா 1:2). மேலும் அந்த செய்தியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது, "இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போகும்" (யோனா 3:2). அவர்கள் மனந்திரும்பினால் தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்பை நிறுத்திவிடுவார் என்ற வெளிப்படையான குறிப்புகள் எதுவும் அதில் காணப்படவில்லை என்றாலும், அவர்கள் தங்கள் வழிகளை மாற்றிக்கொண்டால், கடவுள் உத்தேசித்த தீர்ப்பைக் கொண்டு வரமாட்டார் என்பது மாறாதத்தன்மையின் மூலம் தெளிவாகத் தெரிந்தது. நினிவேயின் ராஜா அதைப் புரிந்துகொண்டான், அதனால்தான் அவன் இந்த ஆணையை அறிவித்தான்:

> **யோனா 3:7-9 -** *மேலும் ராஜா தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக, நினிவேயில் எங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள்.யாருக்குத்தெரியும்; நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிர கோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான்.*

கடவுள் ஒரு எச்சரிக்கையை அனுப்பியதன் நோக்கமே அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காகவே என்று ராஜா புரிந்துகொண்டான். அதுதான் துல்லியமாக நடந்தது: "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" (யோனா 3:10). உண்மையில், யோனாவின் வார்த்தைகள் இந்த நிகழ்வுகளின் திருப்பத்தை அவன் அறிந்திருந்ததை உறுதிப்படுத்துகிறது: "கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன்; நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன்" (யோனா 4:2).

கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் அனைத்தையும் அறிந்த கடவுள், மக்கள் தங்கள் நடத்தையில் மாற்றம் காட்டும்போதோ அல்லது விடாமுயற்சியுடன் ஜெபிக்கும்போதோ ஆச்சரியப்படுவதில்லை. ஒரு இறையாண்மையுள்ள, அன்பான, சர்வ ஞானமுள்ள கடவுள், மனித நடத்தையில் ஏற்படும் இந்த மாற்றங்களையும் கூட

அவரது நித்திய திட்டங்களாக மாற்றியமைத்துள்ளார், இது அவர்கள் மீதான நியாயத்தீர்ப்பை நிறுத்துவதற்கு வழிவகுக்கிறது.

நீங்கள் பலத்த காற்றின் நடுவே பைக்கை ஓட்டிக்கொண்டிருக்கையில், அதை நிறுத்திவிட்டு திரும்பும்போது, காற்று உங்களைத் தடைச் செய்து உங்களுக்கு உதவியது என்று நீங்கள் நினைக்கலாம். உண்மையில், அதன் போக்கு மாறவில்லை. நீங்கள் தான் அப்படிச் செய்தீர்கள்.

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலம், தவறான வழியில் செல்லும் மக்கள் கடவுளின் எச்சரிக்கைகளுக்கு கவனம் செலுத்தி அவருடைய வழிக்குத் திரும்பும்போது, அவர்கள் கடவுளின் கோபத்திலிருந்து அவருடைய பாதுகாப்பின் கரங்களுக்கு மாறுகிறார்கள் என்று கடவுள் கூறுகிறார்.

> **எசேக்கியேல்** 18:21-23 - *துன்மார்க்கன் தான் செய்த எல்லாப் பாவங்களையும் விட்டுத் திரும்பி, என் கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை. அவன் செய்த எல்லா மீறுதல்களும் நினைக்கப்படுவதில்லை; அவன் தான் செய்த நீதியிலே பிழைப்பான். துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.*

எளிமையாகக் கூறுவதென்றால், மக்கள் மனந்திரும்பினால், அவர்கள் மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருவதில் இருந்து தாம் மனந்திரும்புவதாக கடவுள் வாக்களிக்கிறார். அவர்கள் மனந்திரும்பவில்லையென்றால், அவர்கள் மீது அவருடைய கோபத்தை உடனடியாகக் கொட்டிவிடமாட்டார். இயற்கையாகவே, கடவுள் மக்களை நித்திய நரகத்தில் தள்ளுவதில் மகிழ்ச்சியடைவதில்லை. மாறாக, அவர்கள் தங்கள் வழிகளை மாற்றிக்கொண்டு உண்மையான இருதயத்தோடு அவரைத் தேடினால், அவர்களுடைய பாவத்தை மன்னித்து இரக்கம் காட்டுவதில் அவர் மகிழ்ச்சியடைகிறார் (மீகா 7:18). அந்த சத்தியம் ஏற்கனவே கடவுளின் தீர்மானிக்கப்பட்ட திட்டத்திலும் நோக்கத்திலும் கட்டமைக்கப்பட்டுள்ளது. எனவே, அவர் தமது மனதை மாற்றிக் கொள்வதில்லை. மக்கள் தங்கள் வழிகளை மாற்றும்போது, அவருடைய கோபத்தை எதிர்கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் அவருடைய இரக்கத்தைப் பெறுகிறார்கள்.

கடவுள் தமது மனதை மாற்றுவதைப் பற்றிய இந்த சிக்கலை ஜான் மேக்ஆர்தர் இவ்வாறு சுருக்கமாகக் கூறுகிறார்:

> *ஒரு நபர் கடவுளுக்கு முன்பாக நிற்கும் நிலையே அவனுக்கு அல்லது அவளுக்கு என்ன நடக்கிறது என்பதை தீர்மானிக்கிறது. மெழுகு உருகுவதற்கும், களிமண் கடினமாவதற்கும் நீங்கள் சூரியனைக் குறை கூற முடியாது. பிரச்சனை அந்த பொருட்களின் தன்மையில் உள்ளது, சூரியனில் இல்லை. கடவுள் என்றும் மாறுவதில்லை. அவர் தொடர்ந்து நன்மையைத் தருவார், தீமையைத் தண்டிப்பார்.*

அப்படியானால், கடவுளின் மாறாத தன்மையின் தாக்கங்கள் யாது?

## தாக்கம் #1. இது விசுவாசிகளுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும்

கடவுளின் மாறாத தன்மையானது விசுவாசிகளுக்கு மிகவும் இன்றியமையாதது. ஏனெனில், அதை மனிதர்களின் நிலையற்ற தன்மையுடன் ஒப்பிடும்போது அது அவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறது. கர்த்தராகிய இயேசுவை "ஓசன்னா... ஓசன்னா" (மத்தேயு 21:9) என்ற முழக்கங்களுடன் வரவேற்ற அதே கூட்டம், ஐந்து நாட்களுக்குப் பிறகு, "அவரைச் சிலுவையில் அறையும்" (மத்தேயு 27:22) என்று கூக்குரலிட்டது. மக்கள் எவ்வளவு விரைவாக மாறிவிட்டர்கள்! நன்கு பழகின நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், உடன் பணிபுரிபவர்கள் அல்லது அண்டை வீட்டார் அனைவரும் நம்மைக் கைவிடுகிறார்கள். அதற்காக நாமும் அதே தவறைச் செய்கிறோம். ஆனால் கடவுள் கன்மலையாக இருப்பதால், அவரது இருப்பில் மட்டுமல்ல, அவரது நோக்கங்களிலும் மாறாதவராக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசம் வைப்பதன் மூலம் அவரை அண்டிக்கொள்கிற அனைவரையும் இறுதிவரை பாதுகாப்பாக வைத்திருப்பது அவருடைய நோக்கங்களில் ஒன்றாக இருக்கிறது!

பிலிப்பியர் 1:6ல் இந்த உறுதிமொழியைப் பற்றி பவுல் பேசுகிறார், " உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவார்." ரோமர் 8:39 ல் "உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். இயேசுகிறிஸ்து தாமே தமக்குச் சொந்தமான அனைவருக்கும் இந்த ஆறுதல் வார்த்தைகளால் உறுதியளிக்கிறார், “நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை” (யோவான் 10:28). மேலும், இறுதிவரை நம்மைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் பிதாவுக்கும் அதே உறுதி எப்படி இருக்கிறது என்பதைக் குறித்தும் அவர் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: “அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது” (யோவான் 10:29).

கடவுளின் மாறாத தன்மை, பல வாக்குறுதிகளை நிறைவேற்ற உத்தரவாதம் அளிக்கிறது, அதாவது இயேசுகிறிஸ்து மகிமையில் வருகிறார் (மத்தேயு 25:31), ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும் உருவாக்குகிறார் (ஏசாயா 65:17; வெளிப்படுத்தல் 21:1), நம்முடைய கண்ணீர், துக்கம், அழுகை, வலி மற்றும் மரணம் போன்ற அனைத்தையும் மாற்றிவிடுகிறார் (வெளிப்படுத்தல் 21:4). அதனால்தான் வாழ்க்கையின் புயல்கள் நம்மைத் தாக்கும்போது (அவை வரும்), நாம் கடவுளின் மீது சாய்ந்து கொள்ளலாம், அவர் அசையாத, மாறாத கன்மலை, நம் அசைக்க முடியாத விசுவாசத்திற்கு முற்றிலும் பாத்திரமானவர்.

அவருடைய வாக்குத்தத்தங்களில் ஒன்று கூட தோல்வியடையாது, ஏனென்றால் அவர் “பொய்யுரையாத” கடவுள் (தீத்து 1:3). கடவுளின் மாறாத இயல்பைப் புரிந்துகொள்வது,

நம்பிக்கையுடன் ஜெபிக்க உதவுகிறது, அவர் நம் வாழ்வுக்கான நன்மையானதும் மகிமையானதுமான அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றுவார் என்பதை அறிந்து, இறுதிவரை நாம் நம்பிக்கையுடன் தொடரலாம். இஸ்ரவேலருக்கு அவர் அளித்த வாக்குத்தத்தம் (மற்றும் அவரது பிள்ளைகள் அனைவருக்கும் நீட்டிக்கப்பட்டது) இன்னும் உள்ளது, மேலும் கடவுளின் மாறாத தன்மையை நாம் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளும்போது அது என்ன ஒரு ஆறுதல் அளிக்கிறது!

> **ஏசாயா 54:10 -** *மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.*

## தாக்கம் #2. இது விசுவாசியாதவர்களுக்கு பயத்தை கொண்டு வர வேண்டும்

ஒருவரின் தாகத்தைத் தணித்து உயிர் கொடுக்கக் கூடிய அதே நீர் அழிக்கவும் வல்லது. அதுபோலவே கடவுளின் மாறாத தன்மையும் இயேசுகிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் மூலம் அவருடைய பிள்ளைகளாக இருப்பவர்களுக்கு ஆறுதலைத் தருகிறது, ஆனால் அவரிடமிருந்து இன்னும் தொலைவில் இருப்பவர்களுக்கு அதற்கு நேர்மாறான பயத்தை உண்டாக்குகிறது. ஏன்? கடவுள் பரிசுத்தமானவர், நீதியுள்ளவர், கோபம் கொள்பவர் என்பதால் பாவத்தைப் பற்றிய அவருடைய அணுகுமுறை மாறாமல் உள்ளது. பாவத்தை தண்டிப்பதில் இருந்து அவரால் விலகியிருக்கவும் முடியாது.

நோவாவின் காலத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால், நோவா மற்றும் அவனது குடும்பத்தைத் தவிர முழு மனித இனமும் அழிக்கப்பட்டது; சோதோம் மற்றும் கொமோராவை அக்கினி எரித்தது; பார்வோனின் படைகள் செங்கடலில் மூழ்கியது மற்றும் கி.பி 70 ல் எருசலேமின் அழிவு ஆகியவை மக்கள் தொடர்ந்து மனந்திரும்பாமல் இருக்கும்போது கடவுள் எப்போதும் பாவத்தை வெறுத்து நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருவார் என்பதை நமக்கு நினைவூட்டும் சில எடுத்துக்காட்டுகள்.

பாவத்தைப் பற்றியதான தமது நிலையை கடவுள் மாற்றிக் கொள்ளவில்லை. மேலும் அவர் எதிர்காலத்திலும் மாறமாட்டார்! பாவத்தை சாதகமாக பார்க்க முடியாத ஒரு பரிசுத்த கடவுள் (ஆபகூக் 1:13) தமக்கு மகிமை கொடுக்க மறுக்கிற அனைவரையும் நியாயந்தீர்ப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாது (ரோமர் 3:23). நியாயத்தீர்ப்பு நாளில் அவர்கள் எவ்வளவு அழுதாலும் அவர் மனம் மாறமாட்டார். அவருடைய நிபந்தனைகளின்படி தம்மிடம் வர மறுக்கும் அனைத்து சத்துருக்களையும் பழிவாங்குவதாக அவர் உறுதியளித்துள்ளார். பின்வரும் வசனங்கள் இந்த சத்தியத்தை உறுதிப்படுத்துகின்றன:

> **உபாகமம் 32:40-42 -** *நான் என் கரத்தை வானத்திற்குநேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்கிறேன். மின்னும் என் பட்டயத்தை நான் கருக்காக்கி, என் கையானது நியாயத்தைப் பிடித்துக்கொள்ளுமானால், என்*

*சத்துருக்களிடத்தில் பழிவாங்கி, என்னைப் பகைக்கிறவர்களுக்குப் பதிலளிப்பேன். கொலையுண்டும் சிறைப்பட்டும் போனவர்களுடைய இரத்தத்தாலே என் அம்புகளை வெறிகொள்ளப்பண்ணுவேன்; என் பட்டயம் தலைவர் முதற்கொண்டு சகல சத்துருக்களின் மாம்சத்தையும் பட்சிக்கும்.*

**எசேக்கியேல்** 8:18 - *ஆகையால் நானும் உக்கிரத்தோடே காரியத்தை நடத்துவேன்; என் கண் தப்பவிடுவதில்லை, நான் இரங்குவதில்லை; அவர்கள் மகா சத்தமாய் என் செவிகள் கேட்கக் கூப்பிட்டாலும் அவர்களுக்கு நான் செவிகொடுப்பதில்லை என்றார்.*

**மத்தேயு** 13:41-43 - *மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்.*

2 **தெசலோனிக்கேயர்** 1:6-9 - *உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக்கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே. தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.*

அன்பான வாசகரே, வரவிருக்கும் நியாயத்தீர்ப்பின் இந்த வாக்குறுதிகள் அனைத்தும் (மேலே ஒரு சில வசனங்கள் மட்டுமே பட்டியலிடப்பட்டுள்ளன) நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைக் காட்டுகின்றன. இன்னும் கடவுளிடமிருந்து வெகு தொலைவில் இருந்தால், நீங்கள் உண்மையாகவே ஒரு பாவி என்று உணர உங்கள் கண்களைத் திறக்கும்படி அவரிடம் கேட்க வேண்டும். நீங்கள் கீழ்ப்படியாமல் இருக்கும்போதும், உண்பதற்கு உணவையும், இன்பமான பல பொருட்களையும் உங்களுக்குத் தரும் இந்தக் கடவுள், நீங்கள் அவரைத் தொடர்ந்து நிராகரித்து, உங்கள் சொந்த வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுத்தால், ஒரு நாள் கோபத்தில் உங்களுக்கு எதிராகத் திரும்புவார் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

எனவே, நீங்கள் அவருடைய பரிசுத்த கட்டளைகளை புறக்கணித்து அவருக்கு எதிராக கலகம் செய்த ஒரு பாவி என்பதை அறிக்கையிட வேண்டும். அத்தகைய வாழ்க்கை முறையிலிருந்து விலகி, அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் அவர் வழங்கும் மன்னிப்பை ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாராக இருக்க வேண்டும். ஒரு வினாடி கூட யாரும் வாழ முடியாத பரிபூரண வாழ்க்கையை இயேசுகிறிஸ்து வாழ்ந்தார். நம்முடைய பாவங்களுக்கான கிரயத்தை ஏற்றுக்கொண்டு, சிலுவையில் மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். மேலும் இயேசுகிறிஸ்துவை மட்டும் விசுவாசித்தால், உங்கள் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும். நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவீர்கள். நீங்கள் கடவுளுக்கு முன்பாக சரியான நிலைப்பாட்டை வைத்திருக்க முடியும். வரவிருக்கும் கடுமையான மற்றும் இறுதித் தீர்ப்பிலிருந்து தப்பிக்க ஒரே வழி இதுதான்.

மேலும், கடவுளின் கிருபையால், இந்த மகத்தான மற்றும் மகிமையான கடவுளின் மாறாத தன்மையைப் பற்றி நீங்கள் சிந்திக்கும்போது பயங்கரத்திற்குப் பதிலாக, ஆறுதலையும் அனுபவிப்பீர்கள். தயவு செய்து தாமதிக்காதீர்கள். நீங்கள் இருக்கும் வண்ணமாகவே அவரிடம் வாருங்கள். இராஜாவாகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன் உங்கள் முழங்கால்களை முடக்குங்கள். உங்கள் பாவங்கள் அனைத்தும் அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்ட, புதிய வாழ்க்கையைப் பெறுங்கள். அவருடைய பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். நித்தியத்திற்கும் நீங்கள் வருத்தப்படாத ஒரு புதிய தொடக்கத்தை அனுபவியுங்கள்!

## கலந்துரையாடல் கேள்விகள்

1. கடவுளுடைய மாறாத தன்மையைப் பற்றிய உங்கள் பார்வையில் இந்த அதிகாரம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது?
2. கடவுளின் இந்தப் பண்பின் வெளிச்சத்தில் நீங்கள் என்ன விதமான வாழ்க்கை மாற்றங்களைச் செய்யலாம்?
3. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் ஜெபங்களில் எவ்வகை தாக்கத்தை ஏற்படுத்துகிறது?
4. கடவுளின் இந்தப் பண்பு உங்கள் சுவிசேஷப் பிரசங்கத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

## தியானம்/மனப்பாடம் செய்வதற்கான வேத வசனம்

**மல்கியா 3:6** - நான் கர்த்தர் நான் மாறாதவர். ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை.

## ஜெபம்

பிதாவே, மாறிவரும் உலகில், நீர் உம் இயல்பிலும் உம் நோக்கங்களிலும் மாறாதவர் என்பதை அறிவது மிகவும் ஆறுதலாக இருக்கிறது. பெரும்பாலும், நான் இதை மறந்து சந்தேகத்திலும், சோர்விலும் விழுந்துவிடுகிறேன். இந்தப் பாவத்தை மன்னியும்.

காரியங்கள் தோல்வியடைந்தாலும், எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாமல் உம் பிரசன்னத்தில் இளைப்பாற எனக்கு உதவும். உம் நல்ல வாக்குறுதிகள் அனைத்தும் கிறிஸ்துவில் நிறைவேற்றப்படுகின்றன என்பதை எனக்கு நினைவூட்டும். அவர் என்னை ஒரு நாள் பாதுகாப்பாக வீட்டிற்கு அழைத்துச் செல்வார். ஆமென்.

## நன்றி

இந்தப் புத்தகத்தை ஆர்வமாக படித்ததற்கு நான் உங்களுக்கு மிகவும் நன்றி சொல்ல விரும்புகிறேன். உங்கள் இருதயம் ஊக்குவிக்கப்பட்டிருக்கும் என்றும், கடவுளைப் பற்றிய உயர்ந்த பார்வை உங்களுக்கு கிடைத்திருக்கும் என்றும் நான் உண்மையிலேயே நம்புகிறேன்.

கடவுளின் பண்புகளை நான் உங்கள் முன் தொடரும் முகமாக ஒரு நடைமுறை ஆலோசனையை வழங்க விரும்புகிறேன். ஜெபிக்கும்போது பயன்படுத்தப்படும் ACTS என்ற சுருக்கத்தை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். இல்லையென்றால் கீழே கொடுக்கப்பட்டுள்ளதை படியுங்கள்:

- (A)doration– ஆராதனை -- கடவுளுடைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பண்புகளின் அடிப்படையில் அவர் யார் என்பதை அறிக்கையிடுதல்.
- (C)onfession– அறிக்கையிடுதல் -- உங்கள் பாவங்களை கடவுளிடம் அறிக்கையிட்டு மன்னிப்பு தேடுதல்.
- (T)hanksgiving– நன்றி -- உங்கள் வாழ்விலும் மற்றவர்களின் வாழ்விலும் கடவுள் தந்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்துதல்.
- (S)upplication–மன்றாடுதல் -- மற்றவர்களுடைய மற்றும் உங்களுடைய தேவைகளுக்காக கடவுளிடம் மன்றாடுதல்.

கடவுளின் பண்புகளை நடைமுறைப்படுத்துவதின் மூலம் உங்கள் மனம் புத்துணர்ச்சி பெற ஊக்குவிக்க விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தில் பட்டியலிடப்பட்டுள்ள பல்வேறு பண்புகளையும், வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள மற்ற பண்புகளையும் பார்த்து, அவை ஒவ்வொன்றிற்காகவும் கடவுளைத் துதியுங்கள். அந்த வகையில், கடவுள் யார் என்று நீங்கள் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்து, அந்தப் பண்புக்கு ஏற்றவாறு வாழ்க்கையைத் தொடர ஊக்குவிக்கப்படுவீர்கள்.

உதாரணமாக, கடவுளின் பரிசுத்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதைப் பற்றி சிந்திக்க விரும்பினால், பின்வரும் வழிகளில் ஜெபம் செய்யலாம்:

> *பிதாவே, நீர் பரிசுத்தமானவர் என்பதை நான் அறிவேன். பரிசுத்தத்தில் மகத்துவமுள்ள உம்மைப் போல் யாரும் இல்லை. என்னைப் போன்ற ஒரு பாவியை இரட்சித்ததற்கு நன்றி. உம்மைப் போல் பரிசுத்தமாக இருக்க எனக்கு உதவும்.*

அவருடைய உண்மைத்தன்மையைப் பற்றி நீங்கள் சிந்திக்க விரும்பினால் இப்படியாக ஜெபிக்கலாம்:

*பிதாவே, நீர் எப்போதும் உண்மையுள்ளவர். உம் பிள்ளைகளுக்கு நீர் உண்மையாக இருப்பதற்கு வேத வசனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக உதாரணம் தருகிறது. கடந்த காலத்தில் இதை நானே பலமுறை சுவைத்திருக்கிறேன். இப்போது சோதனைகள் என்னை அழுத்துகின்றன, மேலும் நான் மிகவும் சோர்வடைகிறேன். என் விசுவாசம் பலவீனமாகிறது. உம் மேலுள்ள விசுவாசத்தில் உறுதியாக இருக்க எனக்கு உதவும். நீர் விரைவில் விடுதலையைக் கொண்டு வருவீர் அல்லது என் சோதனைகளைக் கடந்து செல்ல இன்னும் கூடுதலான கிருபையைத் தருவீர் என்று நம்புவதற்கு எனக்கு உதவும்.*

கடவுள் சர்வ ஞானி என்ற சத்தியத்தைப் பற்றி சிந்திக்க விரும்பினால், பின்வரும் வழிகளில் ஜெபம் செய்யலாம்:

*பிதாவே, நீர் சர்வ ஞானமுள்ள கடவுள் என்பதை நான் அறிவேன். உம்முடைய ஞானத்தால் இந்த முழு பிரபஞ்சத்தையும் படைத்தீர். நீர் எல்லாவற்றையும் அறிந்தவர்; நான் அப்படிப்பட்டவன் அல்ல. இப்போது, ஒரு குறிப்பிட்ட காரியத்தில் எந்த வழியில் செல்வது என்று தெரியாமல் நான் சிரமப்படுகிறேன்; அதனால் நான் உம்மிடம் ஞானத்தைக் கேட்கிறேன். உம்மை உண்மையாகத் தேடும் அனைவருக்கும் ஞானத்தைத் தருவதாக வாக்களித்துள்ளீர். எனவே, நான் உம்மிடம் வருகிறேன். எனக்கு உதவும், அப்போது அது சவாலானதாக இருந்தாலும் கூட சரியான தெரிவைச் செய்வதன் மூலம் நான் உம்மை மகிமைப்படுத்த முடியும்,. உமது விருப்பமே எனக்கு எப்போதும் சிறந்தது என்று நம்புவதற்கு எனக்கு உதவும், மேலும் எனது சொந்த ஞானம் மற்றும் புரிதலின் மீது சாய்வதிலிருந்து என்னைப் பாதுகாரும்.*

கடவுளின் பண்புகளுடன் நமது ஜெபங்களைத் தொடங்குவதன் மூலம், நாம் கடவுளுக்கு முதலிடம் கொடுப்பது மட்டுமல்லாமல், அவரைப் பற்றிய நமது அறிவிலும் அதிக வளர்ச்சியை அனுபவிப்போம், அவர் மீதான அன்பில் பெருகுவோம்.

***குறிப்பு:*** இந்தப் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பண்புக்கூறின் முடிவிலும் உள்ள மாதிரி ஜெபங்களையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

## ஆசிரியரைப் பற்றி

கர்த்தராகிய இயேசுவின் கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்பட்ட பாவி நான். நான் ஒரு பாரம்பரிய ஹிந்து பிராமண பின்னணியில் இருந்து வந்தவன். முன்னாள் ஹிந்துவாக இருந்து விசுவாசியான எனது நண்பர் விஜய் அவர்களின் உண்மையான சாட்சியின் மூலமும், நான் படித்துக் கொண்டிருக்கும்போது அடையாளம் தெரியாத ஒரு நபரால் என் வீட்டு வாசலில் வைக்கப்பட்ட வேதத்தை வாசித்ததின் மூலமும் கர்த்தர் கிரியைச் செய்தார். அதே நேரத்தில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருக்கும்போது யோவான் 10:11ல் இயேசுகிறிஸ்து கூறின "நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்ற வேதவாக்கியத்தைப் பயன்படுத்தி, இந்தக் கலகக்கார பாவியை கிருபையுள்ள மேய்ப்பரும், இரட்சகருமான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் அறிவிற்குள் பரிசுத்த ஆவியானவர் கொண்டு வந்தார்.

கீதா அவர்களை மணந்து, பால் மற்றும் ப்ரீத்தி என்ற இரு குழந்தைகள் இருக்கிறார்கள். கடவுளின் கிருபையால் அனைவரும் விசுவாசிகளாக இருக்கின்றனர். ஒன்டாரியோவின் வின்ட்ஸரில் உள்ள கிரேஸ் பைபிள் திருச்சபை 2003 ல் நிறுவப்பட்டதிலிருந்து அதன் போதகராக ஊழியம் செய்யும் பெரும் பாக்கியமும் எனக்கு உண்டு! இந்த சபை அன்பான சகோதர சகோதரிகளின் ஒரு பெரிய குழு. உண்மையில், அவர்களுக்கு ஊழியம் செய்வது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தப் புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்த பாஸ்டர் ஜான் நெல்சன் மற்றும் பாஸ்டர் மேஷாக் தேவநேசன் அவர்களுக்கும் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவர்கள் இந்நூலை மொழிபெயர்த்தது மட்டுமின்றி, பல்வேறு ஆங்கில வலைப்பதிவு கட்டுரைகளையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர்.

என்னைப் பற்றியும் வலைப்பதிவு/புத்தகம் பற்றியுமான கூடுதல் விவரங்களை www.tamil.biblebasedhope.com மற்றும் www.gbc-windsor.org ஆகிய வலைதளத்தில் காணலாம். நீங்கள் என்னை நேரடியாகத் தொடர்பு கொள்ள விரும்பினால், தயவுசெய்து எனக்கு Rk2serve@yahoo.com ல் மின்னஞ்சல் செய்யுங்கள்.

இந்த புத்தகத்தின் பிரதிகள் அமேசான் இணையதளத்தில், அச்சு மற்றும் கிண்டில் பதிப்புகளில் கிடைக்கின்றன.

இந்தப் புத்தகத்தின் இலவச PDF பதிப்பும் மேலே குறிப்பிட்டுள்ள தளங்களில் கிடைக்கும்.

*இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கத்தைப் பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து எனக்கு எழுதத் தயங்க வேண்டாம். உங்கள் கருத்தை வரவேற்கிறேன். எனது வரம்புகளை நான் முழுமையாக உணர்ந்து, வேதவசனங்களைப் பற்றிய எனது புரிதலில் தொடர்ந்து வளர முயல்கிறேன்.*

## மனிதன் படைக்கப்பட்டதின் முதன்மையான நோக்கம் எது? என்ற முதல் கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாசக் கேள்வி

பதில் இவ்வாறு கூறுகிறது. கடவுளை மகிமைப்படுத்துவதும், அவரில் என்றென்றும் மகிழ்ந்திருப்பதும் மனிதன் படைக்கப்பட்டதின் முதன்மை நோக்கம்! ஆனால் கடவுளுடைய இயல்பைப் பற்றிய சரியான புரிதல் நமக்கு இல்லையென்றால் நாம் அவரை மகிமைப்படுத்தவோ அல்லது அவரில் என்றென்றும் மகிழ்ந்திருக்கவோ முடியாது. வேதத்தில் கூறப்பட்டுள்ள கடவுளை அவருடைய பண்புகளால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்பதால், அவற்றை நாம் படிப்பது இன்றியமையாதது.
சித்தரிப்புகள் மற்றும் செயல்முறைகளால் நிரம்பியிருக்கும் இந்த தியான புத்தகம் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு கடவுளைப் பற்றிய புரிதலில் வளர உதவும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் நீங்கள் ஒரு விசுவாசியாக இல்லாவிட்டாலும், கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசத்தை தெரிந்துகொள்ள ஆர்வமாக இருந்தால் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உங்களைப் படைத்த கடவுளின் இயல்பைப் புரிந்துகொள்ளவும், அவருடன் ஒரு சரியான உறவில் வளரவும் இந்தப் புத்தகம் பயனுள்ளதாக இருக்கும்.

கடவுள் எல்லையற்றவர், "அவருடைய மகத்துவத்தை யாராலும் புரிந்து கொள்ள முடியாது" (சங்கீதம் 145:3) நம்மால் ஒருபோதும் அவரை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது, என்றாலும், வரையறுக்கப்பட்டவர்களாகிய நமக்கு போதுமான அடிப்படையில் அவரை அறியும் பாக்கியம் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் அனைவரும் "சிறியவர் முதல் பெரியவர் வரை" (எபிரெயர் 8:11) கடவுளை அறிந்து கொள்ள முடியும் என்று புதிய ஏற்பாடு உறுதியளிக்கிறது. அது நமக்கு ஆறுதலைத் தருவது மட்டுமல்லாமல், அவரைப் பற்றிய ஆழமான அறிவைத் தொடரவும் நம்மை ஊக்குவிக்கிறது. அதற்கு இந்தப் புத்தகம் உங்களுக்கு உதவும் என்று நம்புகிறேன்.

**ராம் கிருஷ்ணமூர்த்தி** இருபது ஆண்டுகளுக்கும் மேலாக கனடாவின் ஒன்டாரியோவில் உள்ள விண்ட்சரில் அமைந்துள்ள கிரேஸ் பைபிள் திருச்சபையில் போதகராக இருக்கிறார். அவருக்கு கீதா என்ற மனைவியும் இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். இவரைப் பற்றிய கூடுதல் விவரங்களை www.tamil.biblebasedhope.com மற்றும் www.gbc-windsor.org என்ற இணையதளங்களில் காணலாம்.

தமிழ் / TAMIL